
பக்கங்கள்: முப்பத்து இரண்டு + 12

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஐப்பசி 06 ஞாயிற்றுக்கிழமை (23.10.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 331



09
கொண்டாட்டம்



X
பழங்களின் நிறங்களும் குணங்களும்



29
வடமாகாண விளையாட்டில் வர்ண இரவுகள்

## அமெரிக்கா செல்லும் கூட்டமைப்பினர் பான்-கீ மூனையும் சந்திக்கும் வாய்ப்பு

### ஹிலாரியைச் சந்திப்பது குறித்து முடிவில்லை

**நியூயோர்க், ஒக்ரோபர் 23**

***அடுத்த வாரம் அமெரிக்கா செல்லவுள்ள தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச் செயலாளர் பான் கீ-மூனைச் சந்தித்துப் பேசுவதற்கான ஏற்பாடுகள் உள்ளன என்று நியூயோர்க்கில் உள்ள ஐ.நா. அலுவலகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால், ''அமெரிக்காவில் பலதரப்பட்டவர்களையும் சந்திப்பதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. ஆனால் யார் யாரைச் சந்திப்பது என்பது தொடர்பில் இன்னும் இறுதி முடிவுகள் எவையும் இல்லை. அவ்வாறான ஏதாவது விடயங்கள் இருந்தால் மக்களுக்குத் தெரிவிப்போம்'' என்று உதயனுக்குத் தெரிவித்தார் மாவை சேனாதிராசா.***

எனினும் ''சந்திப்புக்கான திகதி உறுதி செய்யப்பட்டுவிட்டது. அது பற்றிக் கூட்டமைப்பினருக்கு அறிவிக்கப்பட்டும் உள்ளது'' என்று பான் கீ-மூன் அலுவலக அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் என அங்கிருந்து உதயனுக்குக் கிடைத்த தகவல் தெரிவித்தது. நியூயோர்க்கில் உள்ள இலங்கை அதிகாரிகளுக்கும் இந்த விடயம் தொடர்பாகத் தெரிந்திருக்கிறது என்பதை அவர்கள் உத்தியோகப்பற்றற வகையில் உறுதி செய்தார்கள்.

எதிர்வரும் 25ஆம் திகதி கூட்டமைப்பினர் நியூயோர்க் செல்கின்றனர். அவர்கள், அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தின் தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான துணைச் செயலர் ரொபேர்ட் ஓ பிளேக்கைச் சந்தித்துப் பேசுகின்றனர். வெளிவிவகாரச் செயலர் ஹிலாரி கிளிங்ரனைச் சந்தித்துப் பேசுவது குறித்து எந்த முடிவும் இல்லை என்றும் நியூயோர்க் தகவல்கள் கூறுகின்றன. எனினும் கடைசி நேரத்தில் ஏதாவது திடீர் சந்திப்புக்கள் நடப்பதையும் அந்தத் தகவல் வட்டாரங்கள் புறந்தள்ளவில்லை.

அமெரிக்கச் சந்திப்புகளின்போது, இலங்கை அரசுடனான பேச்சுக் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு விளக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதேவேளை, அமெரிக்கா உத்தியோகபூர்வமாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை அழைத்துப் பேச்சு நடத்த இருப்பதற்கு இலங்கை அரசு தனது எதிர்ப்பை மறைமுகமாக வோஷிங்ரனுக்குத் தெரியப்படுத்தி உள்ளது. (உ)



### பூநகரி வில்லடியில் மனித எலும்பு எச்சம்

பூநகரி,ஒக்.23

கிளிநொச்சி பூநகரி வில்லடிப் பகுதியில் உருக்குலைந்த நிலையில் மனித எலும்புகளின் எச்சங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று பூநகரி பொலிஸார் தெரிவித்தனர்.

பூநகரி வில்லடிக்குளத்தை அண்டிய பகுதியில் , சதாசிவம் நவரத்

பக் 31

### தீபாவளியை முன்னிட்டு முன்னாள் போராளிகள் 400 பேர் விடுதலையாவர்

கொழும்பு, ஒக். 23

தமிழர் திருநாளான தீபாவளியை முன்னிட்டு முன்னாள் போராளிகள் 400 பேர் அடுத்த வாரத்தில் விடுவிக்கப்படுவார்கள் என அரசு அறிவித்துள்ளது.

''தீபாவளிக் கொண்டாட்டத்தை ஒட்டி அவர்களை நாங்கள் விடுவிப்போம்'' என்று புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீர

பக் 29

### சீனப் பிரசன்னம்; அமெ. காங்கிரஸ் உறுப்பினர் கவலை

கொழும்பு, ஒக். 23

இலங்கையில் அதிகரித்து வரும் சீனப் பிரசன்னம் குறித்து அமெரிக்கா ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது என்று இலங்கைக்கு வருகை தந்த அமெரிக்க காங்கிரஸ் உறுப்பினர் ஜக் கிங்ஸ்டன் தெரிவித்தார்.

சீனாவுடன் இராணுவ ரீதியாக

பக் 29

### ஜே.வி.பியினர் நாளை கோட்டையில் ஆர்ப்பாட்டம்

கொழும்பு, ஒக். 23

அதிகரித்து வரும் உட்கட்சிப் பூசலுக்குள் சிக்கிக் கொண்டுள்ள ஜே.வி.பி., அதிகரித்து வரும் வாழ்க்கைச் செலவை கண்டித்து நாளை திங்கட்கிழமை கொழும்பு, கோட்டை ரயில் நிலையத்துக்கு முன்பாக பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தவுள்ளதாக அந்தக் கட்சியின் பேச்சாளர் அறிவித்துள்ளார்.

கட்சியின் பெண்கள், மாணவர்கள், விவசாயிகள் போன்ற பிரிவு

பக் 31

### இந்தியாவிலுள்ள அகதிகளும் இங்கு வாக்காளராக பதியலாம்

யாழ்ப்பாணம், ஒக்.23

இந்தியாவிலுள்ள ஈழ அகதிகளும் தம்மை வாக்காளராகப் பதிவு செய்யலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

''இந்தியாவில் அகதிமுகாமில் இருப்பதை உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவதொரு ஆவணத்தை இங்குள்ள உறவினர்கள் மூலம் சமர்ப்பிப்பதன் மூலம் அவர்கள் தம்மை வாக்காளராகப் பதிவு செய்ய முடியும்''.

என்று யாழ் . மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் தெரிவித்தார்.

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் வாக்காளர் பதிவுக்கென விசேட படிவம் ஒன்று தேர்தல் ஆணையாளரினால்

பக் 31

### புலனாய்வாளர் எனக் கூறி முழங்காவிலில் கொள்ளை

கிளிநொச்சி, ஒக். 23

கிளிநொச்சி, பல்லவராயன்கட்டுப் பகுதியில் இராணுவப் புலனாய்வாளர்கள் எனத் தம்மை அடையாளம் காட்டிய குழு வீடொன்றில் கொள்ளையடித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றுள்ளது. மூன்று மோட்டார் சைக்கிளில் வந்த ஆறு பேர் தம்மை இராணுவப் புலனாய்வாளர் என தெரியப்படுத்தி ''உங்கள் வீட்டில் விடுதலைப் புலி அமைப்பில் இருந்தவர்கள் உள்ளனர். அவர்களை விசாரிக்க வேண்டும்'' எனக் கூறி மிரட்டி விட்டு

பக் 29

### 1983 இல் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட

## வலி.வடக்கு மக்களின் இடங்கள் மீளளிக்கப்படுமென அன்று வழங்கிய வாக்குறுதி இதுவரை நிறைவேற்றப்படவில்லையே!

### நாடாளுமன்றில் ரணில் சாடல்

கொழும்பு, ஒக்.23

1983 ஆம் ஆண்டு யாழ். மாவட்டத்தில் வலி. வடக்குப் பகுதி அதி உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது அந்தக் காணிகள், வீடுகள் உரிமையாளர்களுக்கு மீள வழங்கப்படும் என்று உறுதியளிக்கப்பட்டது.

யுத்தம் நிறைவடைந்த போதிலும் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாதது ஏன்? இவ்வாறு கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சி தலைவர் ரணில் விக்கிரமசிங்க, வட கிழக்கில் காணிப்பதிவுகளில் தமிழ் எம்.பிக்களின் ஒத்துழைப்பையும் அரசு பெற வேண்டும் என்றும் தெரிவித்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மேற்கொள்ளப்படும் காணிப்பதிவு மற்றும் அத்து மீறல் உட்பட தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா. சம்பந்தனினால் கொண்டு வரப்பட்ட சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது உரையாற்றிய போது அவர் இதனைக் கூறினார்.

ரணில் மேலும் கூறியவை வருமாறு:

வடக்கு, கிழக்கு மட்டுமல்ல காலி துறைமுகப்பகுதியிலுள்ள

பக் 31

வாடிக்கையாளர்களுக்கு சிங்கர் தரும்
160 வருடங்களாக மக்களின் மனதில் நன்மதிப்பைப் பெற்ற சிங்கர் வன்னி மண்ணில் மீண்டும் கால் பதிக்கிறது.
SINGER Plus கிளிநொச்சி காட்சி அறை கோலாகலமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.
தீபாவளி நற்செய்தி !
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.
திகதி: 27.10.2011, வியாழக்கிழமை
நேரம்: மு.ப. 10.42 மணி
கரடிப்போக்குச் சந்தி, கண்டி வீதி, கிளிநொச்சி.
உங்கள் நல்வரவை நாடும், SINGER (Sri Lanka) Plc

உதயன்

தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




வானம் மேகமூட்டத்துடன் காணப்படுவதுடன் அவ்வப்போது மழைபெய்யும் சாத்தியம்

## மாட்டு வண்டிச் சவாரி

அளவெட்டி வடக்கு ஞான வைரவர் சனசமூக நிலையமும் அளவெட்டி வடக்கு இளம் விவசாயிகள் சங்கமும் இணைந்து நடத்தும் மாட்டு வண்டிச் சவாரிப் போட்டி பண்டத்தரிப்பு சவாரித் திடலில் இன்று பிற்பகல் 2 மணிக்கு நடைபெறும். (ஒ)

# மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைமை எமக்கே உரியது

### ஆளுநருக்கு அதை வழங்கியதை ஏற்க முடியாது என்கிறார் மாவை

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத்தலைவராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் நியமிக்கப் படவேண்டும் என ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்திருந்தோம்.

ஆனால் ஜனாதிபதி எமது 9 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் கவனத்தில் எடுக்காமல் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன், வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை இணைத் தலைவராக நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்த நியமனம் வருந்தத்தக்க விடயம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் செயலாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சோ.சேனாதிராசா நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

எதிர்வரும் நவம்பர் முதலாம் திகதி நடைபெறும் யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டம் தொடர்பாக அவரிடம் கேட்ட போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் இது தொடர்பாக மேலும் தெரிவித்தவை வருமாறு:-

கடந்த காலங்களில் ஜனாதிபதி, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் எம்மையும் இணைத் தலைவர் பதவிக்கு நியமனம் செய்திருந்தார்.

தற்போது அதனைப் புறந்தள்ளி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவுடன் வடக்கு மாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறியை ஜனாதிபதி நியமித்துள்ளார்.

இதனை நாம் ஏற்றுக்கொள்ளவில்லை. முற்றாக எதிர்க்கிறோம். இது கண்டிக்கத்தக்க விடயம்.

வடக்கு மாகாண ஆளுநர் மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதி அல்ல. அவர் ஜனாதிபதியினால் நேரடியாக நியமிக்கப்பட்ட ஒருவர். ஆனால் நாம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகள்.

யாழ். - கிளிநொச்சி மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம் என்பது அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக பிரதேச வளர்ச்சி, அபிவிருத்தி என்பவற்றுடன் தொடர்புடைய விடயம்.

இதில் மக்களால் தெரிவு செய்யப்பட்ட நாடாளுமன்றத்தினை பிரதிநிதித்துவப்படுத்தும் சிரேஷ்ட நிலை உறுப்பினர் ஒருவரே இணைத் தலைவராக இருக்கவேண்டும். எனவே இவ்விடயத்தில் ஜனாதிபதி சிறந்த முடிவை எடுக்க வேண்டும் - என்றார்.

இதேவேளை எதிர்வரும் முதலாம் திகதி நடைபெறவுள்ள ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டத்துக்கான அழைப்புக் கடிதம் இதுவரை தமக்குக் கிடைக்கவில்லை எனவும் அவர் குறிப்பிட்டார். (த-302)

## ஆலய நிதி வழங்கும் நிகழ்வு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.23

இந்துசமய விவகார அலுவல்கள் திணைக்களத்தினால் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த யுத்தத்தினால் பாதிப்படைந்த இந்து ஆலயங்களுக்கு நிதி வழங்கும் நிகழ்வு தவிர்க்க முடியாத காரணங்களால் ஒத்தி வைக்கப்பட்டுள்ளதாகச் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பிரதமர் டி.எம்.ஜயரத்ன, பொருளாதார அபிவிருத்தி அமைச்சர்கள் பஸில் ராஜபக்ஷ, றிசாத் பதியுதீன் ஆகியோர் இந்த நிகழ்வில் கலந்துகொள்வதாக அறிவிக்கப்பட்டிருந்து தெரிந்ததே. (ஒ-15)

## கல்விக் கண்காட்சி

நெல்லியடி, செப்.23

நெல்லியடி மத்திய மகா வித்தியாலயத்தின் 90 ஆவது ஆண்டு நிறைவை ஒட்டிய கல்விக் கண்காட்சி நாளையும், நாளை மறுதினமும் காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை கல்லூரி வளாகத்தில் நடைபெறவுள்ளது. நிகழ்வை வடமராட்சி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் சி.நந்தகுமார் ஆரம்பித்து வைப்பார். (ஒ-10)

# விக்கிரகங்கள் திருட்டுப்போன ஆலயங்களின் விவரம் சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக்.23

விக்கிரகங்கள் மற்றும் ஆலயப்பொருள்கள் திருட்டுப் போயுள்ள இந்து ஆலயங்களின் விவரங்களை யாழ்மாவட்ட சர்வமதப் பேரவை திரட்டி வருகின்றது.

இந்த மாதத்துக்குள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பேரவை அறிவித்துள்ளது

திருட்டு இடம்பெற்ற ஆலயங்களின் நிர்வாக சபை அல்லது அர்ச்சகர் சபை விவரங்களைப் பதிவு செய்யமுடியும்.

ஆனைப்பந்திச் சந்தியில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட இந்துக் குருமார் ஒன்றியத்தின் தலைமை அலுவலகத்தில் பதிவுகளை மேற்கொள்ள முடியும் என்று பேரவை அறிவித்துள்ளது.

பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தால் அதற்கான ஆவணத்தின் பிரதியை சமர்ப்பித்துப் பதிவு செய்து கொள்ளமுடியும்.

எழுத்து மூலமான பதிவுகளே ஏற்றுக்கொள்ளப்படும். தினமும் காலை 9 மணி முதல் நண்பகல் 12 மணிவரை பதிவு செய்து கொள்ள முடியும் என்று யாழ்.மாவட்ட சர்வமத பேரவை அறிவித்துள்ளது.

இந்து ஆலயங்களில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் திருட்டுக்களை உடனடியாகத் தடுத்து நிறுத்தும் வகையில் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் பொலிஸ், இராணுவப் பிரிவின் யாழ். மாவட்டத்துக்குப் பொறுப்பான உயர் அதிகாரிகளுடன் கலந்துரையாடப்படவுள்ளது. அதற்கு முன்னதாக இடம்பெற்ற திருட்டு சம்பவங்கள் தொடர்பான முழுமையான தகவல்கள் திரட்டப்பட வேண்டி உள்ளது என்று மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-14)

# உதவித் தேர்தல் ஆணையாளராக மீண்டும் குகநாதன்

ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சி சபைத் தேர்தல் வடக்கில் இடம்பெறவுள்ளதாக அறிவிப்பு வெளியாவதற்கு இரண்டு தினங்களுக்கு முன்னர் கட்டாய இடமாற்றம் செய்யப்பட்ட யாழ். உதவித் தேர்தல் ஆணையாளர் பொ.குகநாதன் மீண்டும் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை முதல் தனது கடமைகளை யாழ். மாவட்ட செயலகத்தில் பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்த விடயம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது:

யாழ். குடாநாட்டில் கடந்த வரும் நடைபெற்று முடிந்த ஜனாதிபதித் தேர்தல், நாடாளுமன்றத் தேர்தல் போன்றவற்றை ஜனநாயக வழியில் முன்னெடுக்க தீவிரமான நடவடிக்கைகளை பொ.குகநாதன் மேற்கொண்டிருந்தார்.

அத்துடன் ஜனவரி மாதம் ஒத்திவைக்கப்பட்ட உள்ளூராட்சித் தேர்தலில் பெயர் குளறுபடி காரணமாக அரச தரப்பின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதனைத் தொடர்ந்து குகநாதனுக்குத் தண்டனை இடமாற்றம் கடந்த மே மாதத்தின் இறுதி வாரத்தில் வழங்கப்பட்டது.

குடாநாட்டிலிருந்து வெளி மாவட்டத்துக்கு ஆறு மாத காலத்துக்கான இடமாற்றம் செய்யப்பட்ட அவர் கொழும்பிலுள்ள தேர்தல் திணைக்களத்தில் மே மாதம் 30 ஆம் திகதி இணைந்து கொண்டார்.

இதன் பின்னர் யாழ். தேர்தல் மாவட்டத்துக்கு உதவித் தேர்தல் ஆணையாளராக இ.சு.கருணாநிதி நியமிக்கப்பட்டு அவரது கண்காணிப்பிலேயே உள்ளூராட்சித் தேர்தலும் இடம்பெற்றது. கருணாநிதி ஓய்வுபெற்று செல்வதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் முதல் மீண்டும் பொ.குகநாதன் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுக் கொண்டார். (த- 15)

# நிகழ்வுகள்

**கௌரவிப்பு நிகழ்வு**

சர்வதேச இந்து மத குருமார் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் 5 ஆம் வகுப்பு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த அந்தண மாணவர்களை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சர்வதேச இந்துகுருமார் ஒன்றிய தலைமைச் செயலகத்தில் இடம் பெறவுள்ளது.

சபா.வாசுதேவக்குருக்கள் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை அதிபர் சு.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகவும் சிற்பி.சரவணபவன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர். (ம-311)

**சிறுவர் அரங்கு**

தீவக வலயத்தின் சிறுவர் அரங்கு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வேலணை மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

கோட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்பட்டவர்களை சுற்று நிருபத்துக்கு அமைவாக அனுப்பி வைக்குமாறு தீவக வலயக் கல்விப்பணிப்பாளர் ம.ராதாகிருஷ்ணன் கேட்டுக் கொண்டுள்ளார். (ம-15)

**டயலொக்கின் சேவை**

டயலொக் நிறுவனத்தினர் கிளிநொச்சி மாவட்ட மக்களின் நலனைக் கருத்திற்கொண்டு வாடிக்கையாளர் சேவை முகாமை இன்று ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சி டிப்போவுக்கும் அருகில் ஆரம்பிக்கவுள்ளனர். இதில் தொலைபேசி இணைப்பு, பெயர்மாற்றம், தொலைந்த பழுதடைந்த சிம்களுக்கான மாற்று சிம்மும் வழங்கப்படவுள்ளதுடன் புதிய இணைப்புக்களையும் பெற்றுக் கொள்ளலாம். (ம-207)

**வெளிக்கள நாள்**

யாழ்.மாவட்ட சாரணர் கிளைச்சங்கத்தின் ஏற்பாட்டில் குருளைச்சாரணர் வெளிக்கள நாள் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட சாரணர் உதவி ஆணையாளர் திருமதி பவானி கைலாசநாதன் தலைமையில் இது நடைபெறவுள்ளது. (ம-313)

**புனரமைப்புக் கூட்டம்**

மீசாலை, புத்தூர் சனசமூக நிலையத்தின் புனரமைப்புக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இதில் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம் பெறும். (ம-207)

**சொற்பொழிவு**

வடமராட்சி ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் ஆலயத்தின் பெரியாழ்வார் ஆச்சிரம மண்டபத்தில் இடம் பெற்றுவரும் வாராந்த ஆன்மிக சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை 'உள்ளம் பெரும் கோயில்' எனும் தலைப்பில் இரா.கேதீசன் சொற்பொழிவு நிகழ்த்தவுள்ளார். (ம-236)

**செயலமர்வு**

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் தரம் 6 முதல் 11 வரையான மாணவர்களுக்கு சுகாதாரமும் உடற்கல்வியும் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு புலோலி மெ.மி.த.க. கலவன் பாடசாலையின் ஆசிரியர் வள நிலையத்தில் நடைபெறவுள்ளது. (ம-313-236)

**சுகாதார நிகழ்வு**

ஊர்காவற்றுறை லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில் மாபெரும் சுகாதார நிகழ்வு இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு புங்குடுதீவு சர்வோதயம் புஸ்பா மணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் மாணவர்களுக்கு பற்பசை, பற்தூரிகை, சத்துணவு என்பன வழங்கல் , கண்பரிசோதனையும் கண்ணாடி வழங்கலும், சலரோக இரத்தப் பரிசோதனை, உயர் குருதி அழுத் தப் பரிசோதனை, முதியோர்களுக்கு ஆடை வழங்கல், மர நடுகை போன்ற நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-313)

**நிர்வாகசபைத் தெரிவு**

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மாணிக்கவாசகர் மடாலய அன்னதான சபையின் வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத்தெரிவும் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-250)

**மாணவர் ஒன்று கூடல்**

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் உள்ள தேசிய கல்வி நிறுவகப் பிராந்திய நிலையத்தில் கல்விமாணிப் பட்டப்படிப்பைப் பூர்த்தி செய்த மாணவர்களின் ஒன்று கூடலும் பாராட்டு வைபவமும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

**செயலமர்வு**

வடமராட்சி வலயப்பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி ஏ.எல்.பியுக்குத் தெரிவு செய்யப்பட்ட 10 பாடசாலைகளில் கல்வி கற்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று ஞாயிற்றுக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ம-313)

**பொதுக்கூட்டம்**

திக்கரை இந்து இளைஞர் மன்ற பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு திக்கரை இந்து இளைஞர் மன்ற மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

***

கோப்பாய் தெற்கு கிராம அபிவிருத்தி சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு சங்கத்தலைவர் எஸ்.தங்க வேலாயுதம் தலைமையில் சங்க மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (ம-313)

### சந்நிதியான் ஆச்சிரமத்தின்

# இலவச வைத்திய சேவைகளை விஸ்தரிக்குமாறு கோரிக்கை

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிர மத்தின் இலவச வைத்திய சேவையை அச்சுவேலி இடைக்காடு மற்றும் வன்னிப் பிரதேசத்தில் கிளிநொச்சி, உருத்திரபுரம் பகுதிகளில் ஆரம்பிக்குமாறு அந்தப் பகுதிகளைச் சேர்ந்த பொது அமைப்புக்களால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இடைக்காடு, வளலாய், தம்பாலை ஆகிய பகுதிகளை உள்ளடக்கிய பிரதேசத்தில் வைத்தியசாலைகள் இன்மையால் மக்கள் சிரமங்களையும் கஷ்டங்களையும் எதிர்நோக்குகின்றனர்.

இதேபோல யுத்தத்தால் மோச மாகப் பாதிக்கப்பட்ட கிளிநொச்சிப் பிரதேச கிராம மக்கள் வைத்திய வசதிகளைப் பெற்றுக் கொள்வதில் சிரமப்படுகின்ற னர் என்று சந்நிதியான் ஆச்சிரமத்துக்கு விடுக்கப்பட்டுள்ள கோரிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-236)

## கட்டாக்காலி மாடுகள் ஏலவிற்பனை

**அரியாலை கிழக்கில் பிடிக்கப்பட்ட கட்டாக்காலி மாடுகள் எதிர்வரும் 25.10.2011 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்கு அரியாலை கிழக்குப் பகுதியில் ஏலத்தில் விடப்படும். ஏலத்தில் பங்குபற்றி வெற்றிபெற்றவர்கள் உடனடியாகவே ஏலத்தொகையினை செலுத்துவதுடன், ஏலம் விடப்படும் இடத்திலிருந்து மாடுகளை தாமதிக்காமல் எடுத்துச்செல்ல வேண்டுமெனவும் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.**

தலைவர்,
**நல்லூர் பிரதேச சபை.**

## பொதுச்சபைக் கூட்டம்

சண்டிலிப்பாய் கமநல கேந்திர நிலையத்துக்கு உட்பட்ட மானிப்பாய் மேற்கு விவசாய சம்மேளனத்துக்கான பொதுச் சபைக் கூட்டம் நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கட்டுடை அரசடி வீரகத்தி விநாயகர் ஆலய முன்றிலில் தலைவர் சி.பொ.ம.க. முதலியார் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் சண்டிலிப்பாய் பெரும்பாக அதிகாரி திருமதி பாமா மகேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார்.

இதில் விவசாய உறுப்பினர்களைக் கலந்து கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-302)

## NALRAVI
## SPOKEN ENGLISH

பயிற்சி நெறியைப் பற்றி:

- 100 மணி நேர/3 மாத கால கற்கை நெறி
- முற்றுமுழுதாக ஆங்கிலச் சூழலை ஏற்படுத்தி அதிக நேரப் பேச்சுப் பயிற்சி
- விரிவான இலக்கண விளக்கங்கள் (IELTS கற்கை நெறிக்குச் சமமான இலக்கணப் பகுதிகள்)
- வீட்டில் சுயமாக பயிற்சி பெற ஆங்கில ஆசிரியர் திரு.ஜெய நல்ரவியின் குரலில் பிரித்தானிய உச்சரிப்பு முறையில் தமிழ் விளக்கங்களுடன் கூடிய 3 AUDIO CDக்கள்
- ஒவ்வொருவரிடமும் அன்பான முறையில் தனிப்பட்ட கவனம்

**ஆங்கிலம் சற்றேனும் பேச முடியாதவர்களுக்கு விசேட வகுப்புகள்**

யாருக்காக:

- 16 வயதிற்கு மேற்பட்ட ஆங்கிலம் பேச ஆசைப்படும் அனைவருக்கும்
- பல பேச்சு ஆங்கில வகுப்புகளுக்குச் சென்று ஆங்கிலம் பேச முடியாதவர்களுக்கும்

வகுப்பு நேரங்கள்:

- BATCH 1 - சனி காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 2 - சனி மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 3 - ஞாயிறு காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 4 - ஞாயிறு மாலை மட்டும் வகுப்புகள்
- BATCH 5 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் காலை மட்டும் வகுப்புகள்
- BATCH 6 - வெள்ளி தவிர்ந்த ஏனைய கிழமை நாட்களில் மாலை மட்டும் வகுப்புகள்




**NALBON**
**INSTITUTE OF ENGLISH STUDIES**
*We are born for your bond*

| Head Office | Jaffna Branch |
|---|---|
| 527 2nd Floor | 62/20 3rd Floor |
| Galle Road Colombo 6 | Stanley Road Jaffna |
| Tel 0112 363656 Fax 2360004 | Tel 021 221 9 221 |

Website www.nalravi.com E-mail nalravi@yahoo.com

(NALRAVI ENGLISH LANGUAGE CENTRE சர்வதேச வலையமைப்பில் இணைந்து கொள்ளும் நோக்கோடு NALBON INSTITUTE OF ENGLISH STUDIES எனப் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.)

## வாடகைக்கு

யாழ். கண்டி வீதி கிளிநொச்சியில் கடை வாடகைக்கு உண்டு. (கந்தசாமி கோவிலுக்கு அண்மையிலும், மக்கள் வங்கிக்கு பக்கத்தில்)

தொடர்பு:0777 074384

## காணி விற்பனைக்கு

ஆனைக்கோட்டைச் சந்திக்கு அருகில் தொழிற்சாலைகள், நிறுவனங்கள் என்பனவற்றுக்கு ஏற்றவகையில் 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு:0776138978

## கடை விற்பனைக்கு

யாழ்ப்பாணம் கே.கே.எஸ் வீதியில் அமைந்துள்ள கடைக் கட்டடம் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 0774744016

## திருநெல்வேலி இந்து வாலிபர் சங்கம்
## T.Y.M.H.A.

### புதிய நிர்வாக சபைத் தெரிவு

எமது சங்கத்துக்கு புதிய நிர்வாக சபைத் தெரிவு எதிர்வரும் 29.10.2011 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு சங்க மண்டபத்தில் நடைபெறவிருப்பதால் அனைத்து அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**இ.பாஸ்கரன்,**
செயலாளர்.

## விரைவான பிரித்தானிய பட்டப்படிப்பு




CTH
CONFEDERATION OF TOURISM & HOSPITALITY

# Hotel Management
# Tourism Management

| O/L | A/L | | |
|---|---|---|---|
| Foundation | Diploma | Advanced Diploma | BSc (Hons) Degree |
| 4 Months | 9 Months | 9 Months | 12 Months |

**Postgraduate Diploma** in Hospitality & Tourism Management
**Qualification leads to MSc or MBA, Recognition in the Industry & Migration Opportunity**

தொ. எண்: **Prashanth - 0773 211 266**

UCB · Les Roches · Heriot Watt · ECU · University of Sunderland · Hotel School Sydney · Middlesex University · TVU London

**Thames College**
153 1/1, High Level Road, Nugegoda
011 5737307 / 011 2825895
info@thamescollege.lk
www.thamescollege.lk

# O/L, A/L தகுதியோடு நீங்களும் British Qualified Chartered Engineer / Quantity Surveyor ஆவதற்கு APSS International வழி வகுக்கின்றது.

**City & Guilds UK**
**June 2012**
**பொறியியல் வகுப்புக்கள்**

- APSS International யாழ் நகரில் 2004 ம் ஆண்டிற்கு பின்பு தனது 1st Batch ஐ சுன்னாகத்தில் பூர்த்தி செய்துள்ளது. தற்போது யாழ்நகர் மாணவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க 2nd Batch ஐ Jaffna Technical Institute (JTI) உடன் இணைந்து எதிர்வரும் நவம்பர் 7ம் திகதி ஆரம்பிக்கவுள்ளது

**Course Directors**

**Prof. K. Chandirabose** (Telecommunication, Electrical & Electronic)
**Eng. B. Thaventhirakumar** C.Eng. (Civil Engineer / Quantity Surveyor)

**APSS International Networks (Pvt) Limited**

| Head Office: | Branch Office: | Branch Office: |
|---|---|---|
| 5 Harmers Avenue, | Jaffna Technical Institute | 242 Dr. Subramaniam Rd, |
| Colombo 06. | 46, Clock Tower Road | Chunnakam. |
| T.P: 011-2361587 | Jaffna. T.P:071-8561654 | T.P: 021-2241731 |

**Hot Lines: 077-3867695, 077-2306642, 077-2418804**

- **Telecommunication**
- **Electrical & Electronics**
- **Quantity Surveying**
- **Civil Engineering**

**Entry Qualification**

**Diploma Level:** G.C.E A/L - Maths / Bio / Com.
**Advanced Diploma Level:** HNDE/ NDT/ IET/ NCT/ Open University/ BCS/ Diploma Qualified Students

**சேவை**

Singapore, UKபோன்ற நாடுகளுக்கான கற்கையுடன் கூடிய வேலைவாய்ப்பு.
தொடர்பு- 0779692434

## வீடு வாடகைக்குண்டு

யாழ்.ஆடியபாதம் வீதிக்குச் சமீபமாக திருநெல்வேலிச் சந்திக்கு அருகில் வீடு வாடகைக்குண்டு. பல்கலைக்கழக மாணவர் குடும்பத்துக்கு உகந்தது.
தொடர்பு- 0777311453

## திருத்தம்

நேற்று (22.10.2011) சனிக் கிழமை இதே பக்கத்தில் பிரசுரமாகிய திருமதி பரஞ்சோதிநாதன் சிவமலரின் மரண அறிவித்தலில் இறுதியாகவரும் அத்தையின் உறவு முறையில் அமரர் அருள் மணி, கிரிஜா (கனடா), அமரர் ஜெயேந்திரன் ஆகியோரின் பெயர்கள் கணினி தொழில்நுட்பக் கோளாறு காரணமாக இடம்பெறத் தவறிவிட்டன. அந்தப் பெயர்களையும் சேர்த்து வாசிக்கவும்.

## மரண அறிவித்தல்

### வில்வரத்தினம் புவனேஸ்வரி (சின்னபெட்டை)



புங்குடுதீவு 9 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.10 கிருஸ்ண பிள்ளை லேன், ஈச்சமோட்டையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வில்வரத்தினம் புவனேஸ்வரி (சின்ன பெட்டை) 2011.10.21 ஆம் திகதி காலமாகிவிட்டார். அன்னார் காலஞ் சென்ற நாகேஸ் - பொன்னம்மா தம்பதியரின் இளைய மகளும் வில்வரத்தினத்தின் (ஜேர்மனி) அன்பு மனைவியும் காலஞ்சென்ற ஆறுமுகம் - பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் இராசலிங்கம் காலஞ் சென்ற கந்தையா மற்றும் கமலாம்பிகை, பற்மநாதன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் இலங்கேஸ்வரி, ஊர்மிளா (கனடா), சபேஸ் (பிரான்ஸ்) ஆகியோரின் அன் புத்தாயும் கிருஸ்ணகுமார் (உள்ளூராட்சி உதவியாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை- மானிப்பாய்) புஸ்பராசா (கனடா), ஜெயந்தா ஆகியோரின் மாமியும் ஞானம்மா கமலாம்பிகை காலஞ்சென்ற பரமலிங்கம் மற்றும் நாக தேவி (சுவிஸ்) ஆகியோரின் மைத்துனியும் கமலினி, ஜெய மலர், ஜெயகுமார் ஆகியோரின் சிறிய தாயும் பார்த்தீபன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), பிரசாளினி (சென்.ஜோன் பொஸ்கோ), கீர்த்திகா (கனடா) ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் (24.10.2011) பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவு டல் தகனக் கிரியைக்காக துண்டி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
இ.கிருஸ்ணகுமார் (மருமகன்)

*இல.10, கிருஸ்ணபிள்ளை லேன், ஈச்சமோட்டை*

## கடை வாடகைக்கு

கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்னும் இடத்தில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு-
0772487852, 0774530902

## வீடு காணி விற்பனைக்கு

பருத்தித்துறை வீதியில் இருபாலைக்கு அருகில் வீட்டுடன் சேர்ந்த 8 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
தொடர்பு- 0776381776

## பணியாளர் தேவை

யாழ். நகரில் பிரபல்யமான விடுதிக்கு முன் அனுபவமுள்ள பணியாளர்கள் தேவை.

- சமையல்காரர் (Cook)
- பாதுகாவலர் (Security)
- விடுதி உதவியாளர்(Room Boys)

நேரில் சுயவிவரக் கோவையுடன் சமுகமளிக்கவும்
நேரம்:காலை 9.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை

Blue Haven
70,Racca Rood,
Jaffna.

T.P:0212229958
0772208062

## தவறி விட்டது

வவுனியாவுக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையில் கடந்த 15ஆம் திகதி காலை 8.30 மணிக்கு புறப்பட்ட பஸ்சில் நித்தியானந்தன் ஜெயதாம்பாள் என்பவருடைய தேசிய அடையாள அட்டை(575113087V) கைத்தொலைபேசி மற்றும் முக்கிய ஆவணங்கள் அடங்கிய கைபேஸ் ஒன்று தவறவிடப்பட்டுள்ளது. இதனைக்கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளுமாறு தயவுடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

T.P:0775719626

## வீடு வாடகைக்கு உண்டு

4 அறை கொண்ட வீடு யாழ். இந்து மகளிர் கல்லூரிக்கு அண்மையில் உண்டு. (குறைவான வாடகை)
தொடர்பு:- 0750422381

## காணி தேவை

யாழ். நகரை அண்டிய பகுதியில் (6Km உள்ளே) நல்ல சூழலில் வெறும் காணி தேவை. தொடர்பு:- 0750422381

## வீடு அல்லது சிறிய பகுதி வாடகைக்குத் தேவை

கிளினிக் நடத்தக்கூடிய சிறியவீடு/ பகுதியாக வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0750422381

## spectra skills

A/Lவர்த்தகப் பிரிவுகள் ஆரம்பம்:

★ 2013 பிரிவு மாணவர்களுக்கான வகுப்புக்கள்
★ 2012 பரீட்சை எழுதும் மாணவர்களுக்கான மீட்டல் மற்றும் வினாவிடை வகுப்புக்களும் ஆரம்பம்.

பலவருடங்கள் அனுபவமும், திறமையும் வாய்ந்த ஆசிரியர் குழாம்

கணக்கியல் : திரு.M.அஷோக்குமார் (B.Com.Hons.Spl.Acc)
பொருளியல் : திரு.P.பிரதாப் (B.B.A)
வணிகக் கல்வி : S.சிவா (M.Com)
பொது ஆங்கிலம் : T.குணா (M.Sc)

பதிவுகளுக்கு முந்துங்கள்

Spectra Skills
No.19, Stanley Road,
(Peoples' Bank 2nd Floor), Jaffna. Tel: 021 222 1422/1423

## மரண அறிவித்தல்

### துரைச்சாமி சிவகுமாரன்



புங்குடுதீவு 3 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனியை வசிப்பிடமாகவும் கொண்ட துரைச்சாமி சிவகுமாரன் 21.10.2011 வெள்ளிக் கிழமை ஜேர்மனியில் காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி மற்றும் கனகமணி தம்பதியரின் அன்பு மகனும் மனோன்மணி, சகுந்தலாதேவி, சிவராசா, சிவபாலன், சிவலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்ற தர்மபாலன் மற்றும் மகேந்திரன், ஜெயா, செல்வி, ராசி ஆகியோரின் மைத்துனரும் கல்பனா, மதுமதி, யேபிரதாப் ஆகியோரின் மாமனும் மயூரன், மயூரி, தமிழினி, சாகித்தியன், சாகித்தியா, சாதுரியா, வாகீசன், சுதேசன், கௌசிகன் ஆகியோரின் பெரியப்பாவும் சிவகுமாரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 25.10.2011 செவ்வாய்க் கிழமை ஜேர்மனியில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில். (9690)

தகவல்:
தாய், சகோதரர்கள்.

# சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்

## யாழ்ப்பாணம்

### (Marketing Executives - Jaffna)

நாடளாவிய ரீதியில் நிதிச் சேவைகளை வழங்கும் முன்னணி நிறுவனமான சென்றல் பினான்ஸ் கம்பனியின் யாழ்ப்பாண கிளையில் சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர் பதவிக்கான வெற்றிடம் உள்ளது. இப்பதவியை வகிப்பவர்கள் எமது நிதிச் சேவைகளுக்கான வாடிக்கையாளர்களை இனங்கண்டு சேவைகளை அபிவிருத்தி செய்யக்கூடியவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பதாரிகள் நல்ல கல்வித் தராதரப் பின்னணியுடன், உத்வேகமும், ஆர்வமும் மிக்கவர்களாக விளங்க வேண்டும். சந்தைப்படுத்தல் துறையில் தொழில்சார் தராதரங்களைக் கொண்டிருப்பது விரும்பத்தக்கது. அத்துடன், விற்பனைத்துறையில் ஆற்றலும், சந்தைப்படுத்தல் துறையில் குறைந்தபட்சம் மூன்று வருடகால அனுபவமும் கொண்டிருக்க வேண்டும். நிதிச் சேவைத்துறையில் அனுபவம் பெற்றிருப்பது ஒரு மேலதிகத் தகைமையாகக் கருதப்படும். மோட்டார் சைக்கிள் செலுத்துவதற்கான செல்லுபடியான அனுமதிப்பத்திரத்தை வைத்திருப்பது அத்தியாவசியமானதாகும்.

மூன்று மொழிகளையும் புரிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டிருப்பது மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

இப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்களுக்கு சந்தைத் தராதரங்களுக்கு அமைய நல்ல கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.

தயவுசெய்து உங்கள் விண்ணப்பத்தை உறவினர்களல்லாத இரு சான்றுபகர்நர்களின் பெயர்கள் மற்றும் தொடர்புத் தொலைபேசி இலக்கங்கள் சகிதம் 7 நாட்களுக்குள் அனுப்பி வைக்கவும்.

**பொது முகாமையாளர் (HR&D)**
**சென்றல் பினான்ஸ் கம்பனி பிஎல்சி**
270 வொக்ஷோல் வீதி, கொழும்பு 2
மின்னஞ்சல்: hrd@cf.lk

உ
வட்டக்கச்சி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமி துணை

# இரண்டாம் ஆண்டு நினைவும்

## ஆத்ம சாந்திப்பிரார்த்தனை அழைப்பும்




அன்னை மடியில்:
02.11.1948

அரனடியில்:
12.11.2009

### திதி: ஏகாதசி

புங்குடுதீவு, 3ஆம் வட்டாரத்தை நிரந்தர வசிப்பிடமாகவும் - இல.304, மாயவனூர், வட்டக்கச்சியில் வசிப்பவருமான

### திருமதி அழகேஸ்வரி (கிளி) வேலாயுதம் (தம்பு)

எங்கள் அன்புத் தெய்வத்தின் ஆத்மசாந்திப் பிரார்த்தனை இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை மு.ப.10.00 மணிக்கு எமது இல்லத்தில் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம் பெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல.304, மாயவனூர்,
வட்டக்கச்சி.

சி.வேலாயுதம் (தம்பு- கணவர்)
குடும்பத்தினர்.

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# குடிப்பது கூழ் கொப்பளிப்பது பன்னீர்!

பெரும்பொருளால் பெட்டக்க தாகி அருங்கேட்டால் ஆற்ற விளைவது நாடு -

மிக்கப் பொருள் வளம் உடையதாய், எல்லோரும் விரும்பத்தக்கதாய், கேடு இல்லாததாய், மிகுதியாக விளைபொருள் தருவதே நாடு - என்று நாட்டுக்கான வரைவிலக்கணம் தந்துள்ளார் தமிழ்மறை தந்த செந்நாப்போதார் திருவள்ளுவர்.

எங்கள் வன்னிநாடும், விளைபொருள்களை மிகுதியாகத் தந்து குடாநாட்டு மக்களின் பசி தீர்த்த காலமும் ஒன்றிருந்தது. கடந்த ஐந்து வருடங்களுக்கு முன்னரும் அந்த நிலை தாழ்வுற்றுப் போகவில்லை.

ஆனால், சுமார் மூன்று வருடங்களுக்கு முன்னர் அந்த வளநல் நாட்டை - பிரதேசத்தை - பீடித்த கொடும் போர், அங்கு வாழும் மக்களை - மீளக்குடியமர்ந்தவர்களை - ஒவ்வொரு துறையிலும், கோணத்திலும் இன்னமும் வாட்டி வதைத்துக் கொண்டே இருக்கிறது. அவற்றை வகைப்படுத்தினால் பெரும் காவியம் போன்று விரியும்.

இப்போது மாரிகாலம். வழமையாக, வன்னியில் போதியளவு மழை பெய்து, அடுத்து நான்கு மாதங்களில் வடக்கின் நெற்களஞ்சியமாக மாறிக், கடும் உழைப்புக்குப் பயன் விளைந்து நிற்கும் மாநிலம் அது. ஆனால் இப்போதோ, பட்டகாலிலேபடும், கெட்ட குடியே கெடும் என்று, அங்கு வாழும் மக்களை இயற்கை ஒரு புறமும், அரசு இன்னொரு புறமுமாகச் சோதிக்கின்றன, வாட்டி வதைக்கின்றன.

வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளில், கன மழை காரணமாக வயல்களில் நெல் விதைக்க முடியாது மக்கள் கஷ்டமுறுகிறார்கள். அதனால் பெரும்போக நெற்செய்கை பாதிப்புறுகிறது.

அதற்கு மறுபுறத்தில், மற்றொரு விதமான பாதிப்பும் சேர்ந்து கொண்டுள்ளது. ஒலுமடு போன்ற பிரதேசங்களில், செய்கை பண்ணப்பட்ட வெங்காயம் மழை வெள்ளத்தில் மூழ்கி அழிந்துவிட்டது. வங்கிகளில் கடன்பெற்று வெங்காயச் செய்கையில் ஈடுபட்ட மக்கள் தலைமேல் கைவைத்துக் கதறி அழும் நிலை தோன்றியுள்ளது.

பயிர்ச்செய்கைக்கு அடுத்த பெருந்தொழில் என்று கூறுமளவுக்கு, வன்னியில் மக்களுக்கு வருவாய் தருவது கால்நடை வளர்ப்பு. ஏற்கனவே இப்பத்தியில் சுட்டிக்காட்டியது போன்று, கோடையில் நிலவிய வரட்சியால், குடிதண்ணீர்த் தட்டுப்பாட்டால் கால்நடை வளர்ப்புப் பெரிய அளவில் பாதிக்கப்பட்டது. இப்போதோ, பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதற்கு ஏற்ப பல பிரதேசங்களிலும் பெரு மழை காரணமாக, கால்நடைகள் நோயுறுகின்றன.

விவசாயமும் கால்நடைகளும் இவ்வாறு மாறி மாறி மழையாலும் வரட்சியாலும் பாதிக்கப்படைந்து வருவது ஒரு புறமிருக்க, மக்களில் மிகப் பலரையும் மழை மிக மோசமாகப் பாதித்துள்ளது.

இறுதிப் போரின் போது, இடம்பெயர்ந்து, நீண்ட இடைவெளியின் பின்னர் சொந்த இடங்களில் மீளக்குடியமர்ந்த மக்களில் மிகப் பெரும்பாலானோர், சுமார் இரண்டு வருடங்களை அண்மித்த நிலையில் இன்னமும் பாதுகாப்பற்ற, தற்காலிகமாக அமைக்கப்பட்ட தகரக் கொட்டில்களிலும் தறப்பாள் கொட்டில்களிலும் வாழ்ந்து, இல்லை இல்லை "வசித்து" வருகிறார்கள்.

கடந்த வருட மாரியின் போதே தறப்பாள் மற்றும் தகரக் கொட்டில்கள் பாறுண்டு வீழ்ந்ததும், மக்கள் அல்லோல கல்லோலப்பட்டதும் வன்னி மக்களின் அனுபவம். ஆனால் இரு வருடங்கள் நெருங்கியும் மக்கள் கோடை காலத்தில் தானும் பாதிப்பின்றி வாழ்வதற்கான வசதிகளோ, ஏற்பாடுகளோ அரசாங்கத்தினால் இன்னும் அரைவாசியேனும் மேற்கொள்ளப்படவில்லை.

இவ்வருட, இப்போதைய மழை, சம்பந்தப்பட்ட மக்களை மீண்டும் பாதித்துள்ளது. மாரி மழை வரும்போது அவர்கள் நிலை - கொட்டில்களிலும், தகர, தறப்பாள் கொட்டில்களிலும் வசிப்போர் நிலை - என்னவாகப் போகின்றது என்று நினைத்துப் பார்க்கவே நெஞ்சு திணுக்குறுகிறது.

மாரி மழையின் போது உணவுப் பொருள்களின் இருப்பு, போக்குவரத்துத் தடைப்படுவது போன்ற கஷ்டங்களும் வன்னி மக்களை வாட்டுமோ என்ற அச்சம் எழுகிறது. இப்போதே வன்னிப் பிரதேசத்தில் உள்ள சிற்றாறுகள் பல பெருக்கெடுத்துள்ளதாகத் தகவல்கள் கிடைத்துள்ளன. மாரி காலப் பெருமழை பெய்தால் நிலைமை மோசமடையும் வாய்ப்புண்டு. அது போன்றே, மக்கள் மீளக்குடியமர்ந்த பிரதேசங்களில் பெரும்பாலான பகுதிகளுக்கு இன்னமும் மின்சார வசதி செய்யப்படவில்லை. மாரி காலத்தில் மக்கள் இருளில் எவ்வாறு நாள்களைக் கழிக்கப் போகிறார்கள் என்பதனை நினைக்கவே மனம் பேதலிக்கிறது.

இவற்றுக்கும் மேலதிகமாக -

கடந்த வருடத்தில் பெரும் போகச் செய்கையின் போது வன்னிப் பிரதேசத்தின் பல பகுதிகளிலும் நெற்செய்கை பெருமழையால் பாதிப்புற்று போதிய அறுவடை பெற முடியாது மக்கள் நட்டமுற்றனர். உப்பு விற்கப் போனால் மழை, மாவு விற்கப் போனால் காற்று என்பது போல், வன்னி மக்களை மாறி, மாறி இயற்கையும் சோதித்தும் வதைத்தும் வருகிறது.

ஆனால், இயற்கையின் சோதனைகளால் பாதிக்கப்படும் வன்னி மக்களின் வாழ்க்கையை நிவாரணப்படுத்தும் வழிமுறைகளை அரசாங்கம் உரிய பரிமாணத்தில் கையாண்டு உதவும் தன்மையைக் காணோம்.

வன்னிக்கென அனர்த்த முகாமைத்துவம் (Disaster Management), என்ன நடக்கும் ஏது நடக்கும் என்ற - நிச்சயமற்ற காலத்துக்கான முகாமைத்துவம் (Contingency Management), அவசரநிலை முகமைத்துவம் (Emerency Management) ஆகிய விசேட திட்டங்களையும், செயற்பாடுகளையும் வகித்துச் செயற்படுத்தும் பெரும் பொறுப்பு அரசாங்கத்தினுடையதே. ஏனெனில் வன்னி மக்கள் இன்றைய நிலைக்கு ஆளானதில் பெரும் பங்கும் அதற்கே உண்டு.

இத்தகைய தேவைகளுக்கு அல்லது சேவைகளுக்கு முன்னுரிமை வழங்காமல், அரசு தான் தமிழ் மக்களுக்கு செய்த கடமைகளையும் சேவைகளையும் பெரிதுபடுத்தி சர்வதேசத்துக்குப் பீற்றிக் கொண்டு திரிவதிலேயே பெரும் ஈடுபாடு காட்டுகிறது!

அதற்கான சிறு துளி உதாரணங்கள்:

★ வடபகுதியில் 22 சத வீத பொருளாதார வளர்ச்சி எட்டப்பட்டுள்ளது.

★ வடபகுதியில் நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகளை புனரமைக்கும் பெரிய அபிவிருத்தித் திட்டங்களை அரசு முன்னெடுத்து வருகிறது.

★ வடக்கில் வங்கி நடைமுறைகளில் மீள்கட்டுமான, முன்னேற்ற வசதிகளை ஏற்படுத்தவும், தனியார் துறை முதலீடுகளை விவசாயம் மற்றும் மீன்பிடித்துறைகளில் ஊக்குவித்து அத்துறைகளின் அபிவிருத்திக்கும் அரசு முன்னுரிமை வழங்குகிறது.

என்றவாறாக -

பிரான்ஸில் - பாரிஸில் - அந்நாட்டு இராஜதந்திரிகள், புத்திஜீவிகள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் பிரலாபித்திருக்கிறார் வெளிநாட்டு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ்.

பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை என்பது போன்று வன்னி மக்கள் இயற்கையினாலும், நிர்வாகப் பாராமுகத்தினாலும் பாதிப்புற்றிருக்கும் வேளையில், வெளி உலகுக்கு வர்ணப் படம் போட்டுக் காட்டும் உத்தியை மேற்கொண்டு வருகிறது அரசாங்கம். எத்தனை காலம் தான் சர்வதேசம் ஏய்க்காட்டப்படுமோ...!

---

### அரசியல் வாதிகளின் நிழல்களாகச் செயற்படும்

# ஆயுதக் குழுக்களின் வேட்டுகளுக்குப் பலியான அனைத்து சம்பவங்களுக்கும் அரசே பொறுப்பு

## சபையில் ஜோன் அமரதுங்க குற்றச்சாட்டு

கொழும்பு,ஒக்.23

சட்ட விரோத ஆயுதக் குழுக்களைச் சேர்ந்தவர்களும் பாதாள உலகத்தினரும் அரசியல்வாதிகளின் நிழல்களாகச் செயல்படுகின்றனர். இதனால்தான் நாட்டில் சட்டமும் ஒழுங்கும் சீரழிந்து விட்டன. மக்களின் பாதுகாப்பு கேள்விக்குறியாகி விட்டது என்று எதிர்க்கட்சிப் பிரதம கொறடா ஜோன் அமரதுங்க நாடாளுமன்றத்தில் குற்றம் சாட்டினார்.

இந்தச் சட்டவிரோத சம்பவங்களின் துப்பாக்கி வேட்டுகளுக்குப் பலியாகி மரணமான அனைத்து சம்பவங்களுக்கும் அரசே பொறுப்பு ஏற்கவேண்டும் என்றும் குறிப்பிட்டார்.

சபை ஒத்திவைப்பு வேளையின் போது "சட்டமும் ஒழுக்கமும் சீர்கெட்டுள்ளமை" தொடர்பான பிரேரணை ஒன்றை முன் வைத்து பேசும் போதே ஜோன் அமரதுங்க இப்படிக் கூறினார்.

இப்பொழுது பாதாள உலகத்தினரும் சட்டவிரோத கும்பல்களைச் சேர்ந்தோரும் ஆயுதங்களுடன் நடமாடுகின்றனர். இந்தக் குழுவினரை எவராலும் கட்டுப்படுத்த முடிவது இல்லை. அதற்கான அடிப்படைக் காரணம் இவர்கள் அரசியல்வாதிகளின் நிழல்களாகச் செயல்படுவதே. இதனால் அவற்றைத் தடுக்க வேண்டிய பொலிஸார் கைகட்டி வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.

கடந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலின் போது இடம்பெற்ற சம்பவங்கள் எவராலும் வரவேற்க முடியாதவை. பாதாள உலகத்தினர் இன்று அரசியல் வாதிகளின் வாகனங்களில் பயணம் செய்கின்றனர். சுதந்திரமாகத் திரிகின்றனர். ஆனால் அவர்களை கட்டுப்படுத்த எவராலும் முடிவதில்லை.

இதற்கெல்லாம் அடிப்படைக் காரணம் 17 ஆவது அரசமைப்புத் திருத்தச் சட்டத்தை அமுல்படுத்தத் தவறியமைதான். இப்பொழுது காலம் தாழ்த்தாமல் 17 ஆவது திருத்தச் சட்டத்தை மீண்டும் நடைமுறைப்படுத்த வேண்டும் - என்று ஜோன் அமரதுங்க வலியுறுத்தினார். (ஒ-02)

---

# காணிப் பதிவு வடக்கு- கிழக்குக்கு மட்டுமல்ல அனைத்து மாவட்டங்களிலும் அது நடக்கும்

## காணி அமைச்சர் ஜனக பண்டார கூறுகிறார்

கொழும்பு, ஒக்.23

காணிப்பதிவு நடவடிக்கைகள் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மட்டும் அல்ல, நாட்டின் ஏனைய மாவட்டங்களிலும் முன்னெடுக்கப்படும். எனவே சட்டரீதியாக முன்னெடுக்கப்படும் இப்பதிவு நடவடிக்கைகளுக்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஒத்துழைப்பு வழங்கவேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார் காணி, காணி அபிவிருத்தி அமைச்சர் ஜனக பண்டார தென்னக்கோன்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இடம்பெறும் காணிப்பதிவு, அத்துமீறல்கள் உட்பட தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுத் தலைவர் இரா.சம்பந்தன் கொண்டுவந்த சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீது உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியவை வருமாறு:-

காணிப்பதிவு நடவடிக்கைகளை காணி அமைச்சு தான்தோன்றித் தனமாக முன்னெடுக்கிறது என கூட்டமைப்பின் இரா. சம்பந்தன் தெரிவித்துள்ளார். அவரின் அறியாமை கவலைக்குரியது.

1998 ஆம் ஆண்டு 28 ஆம் இலக்க உரிமைகளைப் பதிவு செய்யும் சட்டப்படியே காணிகளைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

நான் ஆச்சரியமடைந்தேன். இந்தச் சட்டத்தையும், பதிவு நடவடிக்கைகளையும் முறையாக விளங்கிக் கொள்ளாமல் இரா. சம்பந்தன் உரையாற்றியமை எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

இந்தக் காணிப் பதிவு நடவடிக்கைகள் வடக்கு-கிழக்கு மாகாணங்களில் மட்டுமல்ல, நாட்டின் ஏனைய பகுதிகளிலும் முன்னெடுக்கப்படுகிறது. குறிப்பாக எனது தொகுதியான தம்புள்ளைப் பகுதியிலும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது.

இந்தக் காணிப்பதிவு நடவடிக்கைகள் தொடர்பில் மும்மொழிகளிலும் படிவங்கள் அச்சிடப்பட்டு கிராம உத்தியோகத்தர்கள் ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்டன. சட்டத்தின்படியே பகிரங்கமாக நாங்கள் இதனைச் செய்தோம் - என்றார் அவர். (த-சி)

---

# கந்தசஷ்டி விரத ஆரம்பம் குறித்த சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி வைப்பு

கொழும்பு, ஒக்.23

கந்தசஷ்டி விரதம் தொடங்கும் தினம் மற்றும் நிறைவு பெறும் தினம் தொடர்பாக நிலவிவந்த கருத்து வேறுபாடுகளுக்கு இந்துசமய, கலாசார அலுவல்கள் திணைக்களம் முற்றுப்புள்ளி வைத்துள்ளது.

கந்தசஷ்டி விரத அனுஷ்டிப்பு குறித்து திணைக்களம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

அதில் கூறப்பட்டுள்ளவை வருமாறு:-

இவ்வாண்டு கந்தசஷ்டி விரதம் தொடங்கும் தினம் மற்றும் நிறைவு பெறும் தினம் தொடர்பாகக் கருத்து வேறுபாடுகள் நிலவுகின்றன என்றும் இலங்கையில் சில ஆலயங்கள் இந்தத் தினங்களில் மாற்றம் செய்துள்ளன என்றும் தெரிவித்து இந்து சமய அமைப்புகள் பலவும் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்துக்குத் தொடர்ச்சியாக முறைப்பாடுகளைத் தெரிவித்துள்ளதோடு தீர்மானங்களை மேற்கொள்ளுமாறும் வேண்டிக்கொண்டுள்ளன.

அதற்கமைய திணைக்களம் சோதிட விற்பன்னர்கள், பிரதான சிவாச்சாரியார்கள் ஆகியோருடன் கலந்துரையாடியுள்ளதுடன் அனைத்து ஆலயங்களும், இந்துப் பொது மக்களும் ஒரே முறைமையைப் பின்பற்றுவது சாலச்சிறந்தது எனக் கருதித் தீர்மானம் ஒன்றை மேற்கொண்டுள்ளது.

பொதுவாக கந்தசஷ்டி விரதம் என்பது ஐப்பசி மாதத்துத் தீபாவளி அமாவாசையை அடுத்த வளர்பிறைப் பிரதமை முதல் சஷ்டி ஈறாகவுள்ள 6 நாள்களுக்கு முருகப் பெருமானை வேண்டி அனுஷ்டிக்கப்படும் விரதமாகும்.

இந்த ஆண்டு பிரதமை திதி ஒக்ரோபர் மாதம் 27 ஆம்திகதியே அமைவதால் அன்று தொடக்கம் கந்தசஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படவேண்டும். அதற்கமைய ஆறாம் நாளாகிய நவம்பர் முதலாம்திகதி விரதம் நிறைவுபெறும். ஆதலால் நவம்பர் மாதம் 2 ஆம் திகதியே பாரணை அனுஷ்டிக்கப்படல்வேண்டும்.

சோதிட விற்பன்னர்களும், சிவாச்சாரியர்களும் வழங்கிய ஆலோசனைக் கமைய 26 ஆம் திகதி அமாவாசை அமைவதாலும் 31 ஆம்திகதி பஞ்சமி திதி என்பதாலும் இத்தினங்களில் கந்தசஷ்டி விரதத்தை ஆரம்பித்து நிறைவு செய்தல் பொருத்தமற்றது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஆதலால் இலங்கையிலுள்ள அனைத்து ஆலயங்கள், இந்து சமய நிறுவனங்கள், இந்துப் பொதுமக்கள் ஏகோபித்து மேற்குறித்தவாறு இவ்விரதத்தை அனுஷ்டிக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

இவ்வாறு திணைக்களம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த-சி)

உதயன்
23 ஒக்ரோபர் 2011 ஞாயிற்றுக்கிழமை

## காணி கட்டடம் கூறு விலை கோரல் முடிவுத் திகதி நீடிப்பு

17.09.2011 அன்று உதயன் பத்திரிகையில் விளம்பரம் செய்த மானிப்பாய் பரிஷ் பல நோக்கு கூட்டுறவுச் சங்க காணிக் கட்டடம் விற்பனை தொடர்பான முடிவுத் திகதி 20.11.2011 வரை நீடிக்கப்பட்டுள்ளது என்பதை அறியத்தருகின்றோம்.

பொதுமுகாமையாளர்.

## மரண அறிவித்தல்



### கதிரவேலு ஆறுமுகம்

(பால பண்டிதர்)
(இளைப்பாறிய அதிபர் யாழ்/ வட்டு. சுப்பிரமணிய வித்தியாசாலை)

மூளாய் தெற்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரவேலு ஆறுமுகம் 19.10.2011 புதன்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதியார் கதிரவேலு-நாகமுத்து தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற பாக்கியம் (இளைப்பாறிய உப அதிபர், யா/மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை) அவர்களின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான க.செல்வதுரை, ப.பொன்னம்மா, இ.பாக்கியம் மற்றும் வி.இராசம்மா ஆகியோரின் அன்புச் சகோதரரும் முருகநேசன் (பேராதனைப் பல்கலைக்கழக விவசாயபீட முன்னாள் விரிவுரையாளர்), செல்வநேசன் (பொறியியளாளர்- கனடா), நேசமலர் (ஆசிரியை- யா/விக்ரோறியாக்கல்லூரி), நேசஆனந்தி (ஆஸ்திரேலியா), நேசராணி ( ஆசிரியை- யா/விக்ரோறியாக் கல்லூரி), Dr. காந்தநேசன் (யாழ். போதனா வைத்தியசாலை), நேசரஜனி (கணக்காளர்- ஆஸ்திரேலியா) , நேசபவானி (முகாமைத்துவ உதவியாளர், பிரதேச செயலகம், உடுவில்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் தாரணி (கனடா),மரியதாஸ் (CRI மாநகரசபை, யாழ்ப்பாணம்), எட்வின் நவரஞ்சன் (ஆஸ்திரேலியா), தனபாலசிங்கம் (பிரதேச சபை நல்லூர்), Dr. ரதினி (யாழ். போதனா வைத்தியசாலை), Dr. சிவன்விஜயசேகரன் ராசரட்ணம் (ஆஸ்திரேலியா), தியாகச்சந்திரன் (பிரதம முகாமைத்துவ உதவியாளர், MOH அலுவலகம், தெல்லிப்பழை) ஆகியோரின் அன்பு மாமனும் தேவகி (கனடா), கௌரிசங்கர், சுபாஸ்கர், துஸ்யந்தி, ஜனனி, பானுஜன், பைரவி, சயன்ஹறிஸ், கஸ்தூரி, துவாரகன், காயத்திரி ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணியளவில் மூளாயிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மூளாய் பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மூளாய் தெற்கு,
சுழிபுரம்.

தகவல்:
Dr. ஆ.காந்தநேசன்

## தேவை

சந்தைப்படுத்தல் உதவியாளர் தேவை. கவர்ச்சிகரமான கொடுப்பனவு வழங்கப்படும். பகுதி நேரமாகவும் பணியாற்ற முடியும். இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.
(9627) தொடர்புகளுக்கு:0750739635

## வீடு விற்பனைக்கு

கோப்பாய் மத்தி வெள்ளெருவப் பிள்ளையார் கோயிலுக்கு அண்மையில் பருத்தித்துறை வீதிக்கு சமீபமாக 2 1/2 பரப்பு காணியுடன் கூடிய சகல வசதிகளும் கொண்ட வீடு உடன் விற்பனைக்கு உண்டு.
(9916) தொடர்பு:0712330854

## German, Swiss மொழிகள்

German Embassy இல் கேட்கப்படும் Certificate க்கு ஏற்றவாறு A1-A2வகுப்புக்கள் ஆரம்பமாகிறது.Audo Book விளக்கத்துடன்.

No.10, Palaly Road,Jaffna.
T.P: 0771604823.

## கார்,ஸ்கூட்டர் விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள Nissan 15-xxxx, VAGAN னும், LML ஸ்கூட்டரும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு-0772299931

## வீடு விற்பனைக்கு

புன்னாலைக்கட்டுவன் ஆயக்கடவை பிள்ளையார் கோயில் அருகில் 4 பரப்பு காணியுடன் சகல வசதிகளுடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு.கோயில் வடக்கு புறம் இரண்டாவது காணி.
தொடர்பு-0772197194

## கடை வாடகைக்கு

கல்வியங்காடு சந்தியில் புதிய கடைத்தொகுதி வாடகைக்கு உண்டு.
தொடர்பு-0772299931

## கட்டடம் விற்பனைக்கு

சாவகச்சேரி டச்சு வீதியில் (நவீன சந்தைக்கு முன்பாக) இருவழி பாதைகள் கொண்ட, இரண்டு பரப்புக் காணியில் அமைந்துள்ள இரண்டு மாடி கட்டடம் விற்பனைக்குண்டு
தொடர்பு:- 0213201176, 0776934120

## காணி விற்பனைக்கு

கோக்குவில் பழைய புகையிரத நிலையத்திலிருந்து கோண்டாவில் பக்கமாக நூறு யார் தூரத்தில் புகையிரத பாதை ஓரமாக கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரி, மருத்துவக் கல்லூரிக்கு ஒரு கிலோ மீற்றருக்கு உட்பட்ட தூரத்தில் 4 பரப்பு 5 குழி காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை. தொடர்பு: 0212229020

## தென்மராட்சி மேற்கு பல நோ.கூ.சங்கம் (வ-து) கைதடி

### விண்ணப்பம் கோரல்

மேற்படி பதவிகளுக்கு தகுதியானவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

01. பயிற்சி கிளை முகாமையாளர்
தகைமைகள்:
கூட்டுறவுப் பணியாளர் சாதாரண தரப்பத்திரம்/ க.பொ.த. சாதாரண தரத்தில் 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக எண்கணிதம்/ தூயகணிதம், சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கியதாக ஆறு (06) பாடங்களில் சித்தி.

02. பயிற்சி விற்பனை உதவியாளர்
தகைமைகள்:
அ) கூட்டுறவுப் பணியாளர் கனிஷ்ட தரச் சான்றிதழ். அல்லது.
ஆ) 08 ஆம் வகுப்புச் சித்தியுடன் விற்பனை அலுவல்களுடன் தொடர்புடையதாக மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 18-45 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

விண்ணப்பிக்கும் முறை:
மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பத்தை சங்கத் தலைமைக் காரியாலயத்தில் பெற்றுப் பூரணப்படுத்திச் சான்றிதழ்களின் பிரதிகளுடன் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் ''விண்ணப்பிக்கும் பதவியை'' குறிப்பிட்டு பொதுமுகாமையாளர், தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி. எனும் முகவரிக்கு 07.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றது.

23.10.2011

பொதுமுகாமையாளர்,
தென்மராட்சி மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், கைதடி

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு
04 . 10 . 1925



உதிர்வு
23 . 09 . 2011

### திருமதி சிசிலியா இம்மானுவேல் (குணம்)

எமது தாயார் சுகவீனமுற்றிருந்த வேளை அவருக்கு வைத்திய உதவிகள் வழங்கிய கொழும்பு தேசிய வைத்தியசாலை வைத்தியர்கள், தாதியர்கள், ஊழியர்களுக்கும் அந்திய கால சேவை வழங்கிய கொழும்பு Lanka Florist, யாழ்ப்பாணம் White House நிறுவனங்களுக்கும் அவரது உடலை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் கொண்டு வர உதவியவர்களுக்கும் அவரது மரணச் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர்கள், உறவினர்களுக்கும் நேரில் வந்தும் தொலைபேசி மூலமாகவும் மின்னஞ்சல் மூலமாகவும் ஆறுதல் கூறியவர்களுக்கும் மலர்ச் செண்டு, மலர் வளையம் வைத்தோருக்கும் அஞ்சலி செலுத்திய அருட் தந்தையர்கள், அருட் சகோதரிகளுக்கும் குறிப்பாக திருப்பலி நிறைவேற்றிய யா/புனித பத்திரிசியார் கல்லூரி அதிபர் அருட் திரு ஜெறோ செல்வநாயகம் அடிகளாருக்கும் இறுதி ஆசீர் வழங்கிய ஊர்காவற்றுறை யா/ புனித அந்தோனியார் கல்லூரி அதிபர் ஜேம்ஸ் சிங்கராயர் அடிகளாருக்கும், மரணச் சடங்கில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது மனம் நெழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மண்ணை விட்டு நீங்கி நாள்கள் முப்பத்தொன்று ஆகினும்
எம்மை விட்டு நீங்காத எம் அன்பு அன்னையே
நாள்கள் முப்பத்தொன்றல்ல எத்தனை ஆண்டுகள் ஆனாலும்
என்றும் உம் நினைவுகள் எம் நெஞ்சில் தீபமாய் ஒளி வீசும்.

50/1, பழைய பூங்கா வீதி,
யாழ்ப்பாணம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:
குடும்பத்தினர்.

## அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனை அழைப்பும் நன்றி நவிலலும்

### திருமதி சின்னராசா பராசக்தி



மலர்வு:
22.02.1944

உதிர்வு:
09.10.2011

09.10.2011 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது அன்புத் தெய்வத்தின் செய்தி கேட்டு உடன் வந்து உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டவர்களுக்கும், மலர் வளையம், மலர்மாலை சாத்தியோர், பத்திரிகை மூலம் அஞ்சலி பிரசுரித்தோர், கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டோர், தொலைபேசிமூலம் அனுதாபம் தெரிவித்தோர் அனைவருக்கும் மற்றும் இன்றுவரை எமக்கு பல்வேறு வகைகளில் ஆறுதலும் ஒத்தாசையும் வழங்கியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதோடு நாளை (24.10.2011) திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடை பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அழைக்கிறோம்.

தனிப்பட்ட அழைப்பு கிடைக்கப் பெறாதோர் இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளுமாறு தயவாக கேட்டுக் கொள்கிறோம்.

3 ஆம் ஒழுங்கை அருகில்,
மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

க.ப.சின்னராசா (கணவர் – மிருதங்க வித்துவான்)
சு.ஜெயலக்சுமி (மகள்)
மா. சுதர்சன் (மருமகன்)
குடும்பத்தினர்.

# நயினாதீவில் 5 குடும்பங்களுக்கு கடற்படையினர் அமைத்த வீடுகள்

## கடந்த புதன் கையளிக்கப்பட்டன

காரைநகர், ஒக். 23

இலங்கைக் கடற்படையினரால் நயினாதீவில் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட ஐந்து குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதாகக் கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

கொழும்பு வோக்ஸ் ஜூவெல்லறி ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் கடற்படையினரால் சிரமதானப் பணி மூலம் அமைக்கப்பட்ட ஐந்து வீடுகள் உரிய பயனாளிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.



வடபிராந்திய கடற்படை பிரதிக் கட்டளைத் தளபதி எச்.டி. சில்வா, காரைநகர் கடற்படை பிரதித் தளபதி பிரனாந்து மற்றும் நிகழ்வில் கலந்து கொண்ட பிரமுகர்கள் பயனாளி ஒருவரிடம் வீட்டைக் கையளித்தபோது.

இந்த வீடுகளைக் கையளிக்கும் நிகழ்வு கடந்த புதன்கிழமை நயினாதீவில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் வடபிராந்தியக் கடற்படையின் பிரதிக் கட்டளைத் தளபதி பி.எச்.டி. சில்வா, கடற்படை பிரதிக்கட்டளைத் தளபதி டி. பிரனாந்து மற் றும் வோக்ஸ் ஜூவெல்லறி நிறுவன பிரதிநிதிகளான திருமதி அசலா பஸ்நாயக்கா, திருமதி சந்திரகேமா சந்திரா மற்றும் இஸ்லாமிய, பௌத்த, இந்து மத குருமார்கள், கடற்படை, பொலிஸ் மற்றும் அரச அதிகாரிகள் ஆகியோர் கலந்துகொண்டனர். நயினாதீவு ஆலய பிரதம குரு, நயினாதீவு விகார திபதி, நயினாதீவு மௌலவி ஆகியோரின் சமய அனுஷ்டானங்களின் பின் பயனாகளிடம் வீடுகள் கையளிக்கப்பட்டன. நயினாதீவைச் சேர்ந்த உமர்கான் சுலைமான், திருமதி மகாலிங்கம் கமலாவதி, திருமதி விக்னேஸ்வரன் மோகனேஸ்வரி, திருமதி நயினமூர்த்தி பாக்கியதேவி, திருமதி இளையதம்பி செல்வக்குமார் ஆகிய ஐந்து பயனாளிகளுக்குமே இந்த வீடுகள் கையளிக்கப்பட்டன. (த-250)

# லண்டனில் இருந்து வட்டுக்கோட்டைக்கு வந்தவர் விபத்தில் சாவு

வண்ணை, ஒக்.23

லண்டனில் இருந்து தாயகம் வந்து கொண்டிருந்த வட்டுக்கோட்டை வாசி மதவாச்சியில் விபத்தில் அகப்பட்டு உயிரிழந்தார்.

வட்டுக்கோட்டை தெற்கை சேர்ந்த சண்முகம் காங்கேயன் (வயது-68) என்பவர் கடந்த 20ஆம் திகதி கொழும்பு வந்து மாலை யாழ்ப்பாணத்துக்கு பஸ்ஸில் வந்து கொண்டிருந்தார்.

பஸ் மதவாச்சியில் பிரயாணிகள் தேநீர் அருந்துவதற்காக தரித்து நின்றபோது இறங்கி வீதியைக் கடக்க முற்படுகையில் வேகமாக வந்த லொறி மோதி இவர் உயிரிழந்ததாதக தெரிவிக்கப்பட்டது.

(ஒ-160)

## சூடு பிடிக்கிறது...



எதிர்வரும் 26ஆம் திகதி தீபாவளிப் பண்டிகைக் கொண்டாட்டப்படுகிறது. தீபாவளி வியாபாரத்தில் ஈடுபடுபவதற்காகத் தென்னிலங்கையில் இருந்து பெருந்தொகையான வியாபாரிகள் யாழ்ப்பாணம் வந்துள்ளனர். அவர்கள் யாழ்.முற்றவெளிப் பகுதியில் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். (த-311)

# குடாக்கடலில் கடத்தல் இடம்பெறுவதாக எவ்வித முறைப்பாடும் இதுவரை இல்லை

## சுங்க அதிகாரி தெரிவிப்பு

யாழ். குடாக்கடலில் கடத்தல் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளதாக முறைப்பாடுகள் எதுவும் இதுவரை எமக்குக் கிடைக்கவில்லை. அவ்வாறு கடலில் நடைபெறும் கடத்தல்களை கண்காணித்து நடவடிக்கை எடுக்கவும் எமக்கு அனுமதி வழங்கப்படவில்லை என யாழ். சுங்கத் திணைக்களத்தின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்த அதிகாரி மேலும் தெரிவிக்கையில்:

வடபகுதிக் கடலில் தற்போது கடத்தல் சம்வவங்கள் இடம்பெறக் கூடிய சாத்தியங்கள் இல்லை.

கடல் கண்காணிப்பை மேற்கொள்வதற்கு எமக்கு முதலில் அனுமதி வழங்கவேண்டும் பின்னர் அதற்கான படகு மற்றும் துப்பாக்கி, ஆளணி என்பனவும் வழங்கப்படவேண்டும்.

தற்போது கடல் பாதுகாப்பில் ஈடுபட்டு வரும் கடற்படையினர் அண்மையில் நெடுந்தீவுக் கடல் ஊடாக கடத்தப்பட்ட கடல் அட்டைகளைப் பிடித்து எம்மிடம் ஒப்படைத்தனர்.

அதேபோல் கச்சதீவு அந்தோனியார் பெருவிழாவிலும் இந்தியாவில் இருந்து ஏதாவது பொருள்கள் கடத்தப்படுகின்றதா என்பதை நாம் உன்னிப்பாக அவதானித்தோம்.

அப்படி ஒன்றும் இடம்பெற்றதாக தகவல்கள் எமக்குக் கிடைக்கவில்லை.

குறிப்பாகக் கடல் கண்காணிப்பை வடபகுதிக் கடலில் மேற்கொள்ள வேண்டிய தேவை இப்போது இல்லை.

வடபகுதிக்குப் பொருள்களை ஏற்றி வரும் கப்பல்களை சோதித்துப் பொருள்களுக்குத் தீர்வையிட்ட பின்னர் அவற்றை இறக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

சிமெந்து, சீனி, உருளைக்கி ழங்கு போன்றவற்றைத் தனியாருக்கு எடுத்து வரும் கப்பல்கள் மயிலிட்டித்துறையில் வைத்து சுங்கப் பகுதியின் சோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன. என்றார் அவர்.

(த-26)

# மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்கு பருத்தித்துறை பிரதேச சபை முயற்சி

வடமராட்சி, ஒக்.23

மக்கள் பங்களிப்புடன் வீதி விளக்குகளைப் பொருத்துவதற்குப் பருத்தித்துறை பிரதேச சபை முயற்சிகளை மேற்கொண்டுள்ளது.

இதற்கான தீர்மானம் சபைக் கூட்டத்தில் எடுக்கப்பட்டுள்ளது. முதற்கட்டமாக அல்வாய் கிழக்கு தெருமுடி மடம் தொடக்கம் தம்பசிட்டிச் சந்தி, சாளம்பை, திருநாவலூர் ஆகிய இடங்கள் ஊடாகப் பருத்தித்துறை கடற்கரை எரிஞ்ச அம்மன் கோயில் வரையான சுமார் இரண்டு மைல் நீளமான வீதிக்கு, அந்தப் பகுதி மக்களின் பங்களிப்புடன் வீதி மின் விளக்குகளை அமைப்பதற்கான மின்குமிழ்கள் உள்ளிட்ட ஏனைய உபகரணங்களைப் பெற்றுத்தருவதாகவும், அவற்றை மின்சார சபையினரால் இலவசமாகப் பொருத்தி, மின்குமிழ்கள் எரிவதற்கான மின்கட்டணத்தை சபை செலுத்த வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

மக்கள் பங்களிப்புடனான இந்த முயற்சி வெற்றி பெற்றால் சபை எல்லைக்குள் வேறு வேறு இடங்களிலும் இதே முறையைப் பின்பற்றி வீதி மின் விளக்குகளை அமைக்கலாம் என ஆளுங்கட்சியான தமிழ்க் கூட்டமைப்பு உறுப்பினர் பொ.திருச்செல்வம் கூறி இதற்கான பிரேரணையையும் கொண்டு வந்தார்.

சபையின் இந்த முன்மாதிரியான செயற்பாட்டை உறுப்பினர்கள் அனைவரும் வர்வேற்றனர்.

இதனைத் தொடர்ந்து ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் மற்றைய உறுப்பினரான கே. மணிதரன் மந்திகையில் உள்ள வீதிகளுக்கு மின்விளக்குகளைச் சபை நிதியில் இருந்து பொருத்த வேண்டும் . இதில் முதற் கட்டமாக பருத்தித்துறை-யாழ்ப்பாணம் பிராதன விதீயில் தெருமூடி மடத்தடி தொடக்கம் மந்திகை உள்ளிட்ட கிராமக் கோட்டுச் சந்திவரை வீதி மின் விளக்குகளை அமைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். இதனையும் சபை ஏகமனதாக ஏற்றுக்கொண்டது. வடமராட்சி கிழக்கில் மீள் குடியேறிய கிறிஸ்தவ மக்களின் வசதி கருதிதாழையடி, செம்பியன்பற்று, கட்டைக்காடு ஆகிய இடங்களில் மாட்டிறைச்சிக் கடைகளை உடனடியாக நிறுவுவதெனச் சபைக் கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. சபைக்குச்சொந்தமான இயங்க முடியாத வாகனங்களைப் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் என சபைத் தலைவர் ஞ.சஞ்சீவன் கொண்டு வந்த தீர்மானம் குறித்து வாகன நிபுணத்தும் வாய்ந்த பொறியியலாளர் ஒருவரை வரவழைத்து இயங்க முடியாத வாகனங்களை சரியான முறையில் இனங்கண்டு, இனங்காணப்பட்டதையே ஏலத்தில் விற்பனை செய்ய வேண்டும் எனச் சபை உறுப்பினர்கள்பலரும் தெரிவித்த கருத்தை ஏற்றுத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.(த-236)

# பெரும் போகத்துக்கு நல்லின விதை நெல் கிடைக்கவில்லை

## விவசாயிகள் ஏமாற்றம்

யாழ்ப்பாணம், ஒக்.23

வலிகாமத்தில் இந்த வருடம் பெரும்போக நெற்செய்கை நல்லின விதைநெல் கிடைக்காததால் பெரும்போகத்தில் பழைய விதை நெல்லை விதைத்தவர்கள் முளைதிறன் குறைவு காரணமாகப் பாதிப்படைந்துள்ளனர் என்றுவிவசாயிகள் குறைபடுகின்றனர்.

மேற்படி விடயம் தொடர்பாக தெரியவருவதாவது.

இந்த வருடம் பெரும்போக விதைப்புக்கு நல்லின விதை நெல்லைக் கமநல கேந்திர நிலையம் ஊடாகப்பெறலாம் எனப் பெரும்பாலான விவசாயிகள் நம்பியிருந்தனர்.

எனினும் இறுதி வரை விதை நெல் விவசாயிகளுக்குக்கிடைக்கவில்லை. இதனால் விவசாயிகள் தம்மிடம் ஏற்கனவே தேக்கி வைத்திருந்த விதை நெல்லை விதைத்தபோதும் அந்த விதை நெல்லினால் கூடிய பயனைப் பெறமுடியவில்லை.

இதனால் விவசாயிகள் முளைதிறன் குறைந்த விதை நெல்லை விதைத்ததினால் விதைப்பு பொய்த்து விட்டதாகக் கவலை தெரிவித்துள்ளனர்.

சண்டிலிப் பாய் கமநல கேந்திர நிலையம் உரிய காலத்தில் இதற்கான நடவடிக்கையை எடுத்திருந் தால் பெருமளவான விவசாயி கள் நன்மை அடைந்திருப்பர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை -

மானிப்பாயில் மீளக்குடியமர்ந்த விசாயிகள் 30 பேருக்கு 406 இன விதை நெல் இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக சண்டிலிப்பாய் பிரதேச விவசாய போதனாசிரியர் செல்வி. க.மீனலோசனி தெரிவித்தார்.

(த-302)

# 7 ஆம் நாள் நினைவலை



அமரர்

## பூதத்தம்பி யோகநாதன்

தோற்றம்
14.10.1953

மறைவு
17.10.2011

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும்
மாமி - நிலாமணி (இலங்கை), சித்தப்பா - பேரம்பலம் (இலங்கை),
உடன் பிறவாத சகோதர்களான செளந்தரராஜா (இலங்கை),
பத்மராஜா (லண்டன்), கிருபைராஜா (லண்டன்),
ஜோன் தேவதாசன் (அமெரிக்கா),
தொமஸ் தேவச் சேயன் (லண்டன்), செளந்தரராணி (இலங்கை),
பத்மராணி (லண்டன்), டொறாத்தி (இலங்கை), துஷ்யந்தி (இலங்கை),
டயானா (இலங்கை) மற்றும் மைத்துனர்களான சந்திரராஜா (இலங்கை),
மதனராஜா (கனடா), தவராஜா (சவுதி), திலகராஜா (இலங்கை),
சூரியராஜா (லண்டன்), தர்மதாஸ் (பிரான்ஸ்), கமலநாயகி(இலங்கை),
பிறேமகலா (லண்டன்), சசிகலா (இலங்கை), சிவமலர் (இலங்கை).

9/2, புவனேஸ்வரி அம்பாள் வீதி,
நல்லூர் கிழக்கு,
யாழ்ப்பாணம்.

நாதம் ஒன்று ஜீவன் இன்றி
வீணாய்ப் போனது - யோக
நாதன் என்ற எங்கள் சொந்தம்
சாவில் போனது

காலன் செய்த லீலை என்றா
கருத்தைச் சொல்வது - இல்லை
காலம் செய்த வேலை என்றா
கருதிக் கொள்வது

சிரித்த முகம் செல்வதனம்
நினைவிருக்க - உமக்கு
அதற்கிடையில் அவசரமேன்
விடை கொடுக்க

நெருப்பெனவே நெஞ்செரியும்
தீயைப் போக்க - நீர்
நேரில் வர வேண்டும் எங்கள்
கவலை தீர்க்க

அருகிருந்து சொந்தங்களில்
கலந்த கதை - எங்கள்
அல்லல்களை துன்பங்களை
சுமந்த கதை

அடிமனதில் புதுமலராய்
பூத்திருக்க - இப்போ
இடிவிழுந்த நிலையாச்சு
ஊர் முழுக்க

வேண்டும் உறவே நீ
மீண்டும் எமக்கு - பெரு
வேதனைதான் எம்மிடத்தில்
மீதம் இருக்கு

ஆண்டு பல கழிந்தாலும்
மறக்க மாட்டோம் - நாம்
அப்போதும் உம் பிரிவை
ஏற்க மாட்டோம்.

# இட்லிக்கும் தோசைக்கும் வித்தியாசம் வேண்டாமா?

எழுதினவன் ஏட்டைக் கெடுத்தான் பாடினவன் பாட்டைக் கெடுத்தான் என்று பழைய சொல் வழக்கு ஒன்று உண்டு.

எழுதப்படும் விடயமானது பயனுள்ளதாக இருக்கவேண்டும். பகைமையைத்தூண்டிவிடுவதாகவும், பொறாமை பொச்சரிப்புகளுக்கு இடந் தராமலும் இருக்கவேண்டும். இல்லையெனில் அந்த எழுத்தானது ஏட்டை கெடுத்ததாகவே ஆகிவிடும் என்பது நம் முன்னோரின் கருத்தாக இருந்திருக்க வேண்டும்.

இன்று எழுத்து முறைகளும் அதற்கான வசதிகளும் சிறப்பாக வளர்ந்துவிட்ட நிலையில் ஏட்டைக் கெடுப்பது என்பதில் எவருக்கும் அக்கறையில்லை. ஒரு ஏடுபோனால் இன்னொரு ஏடு, ஒரு கருத்து சொல்லாது போனால் இன்னொரு கருத்து என்று எல்லாம் மாறிக்கொண்டு போகின்றன.

ஒரே எழுத்தாளர் பல ஏடுகளுக்கு ஒரே சமயத்தில் எழுதுவதும், அந்த எழுத்துக்கள் ஏக காலத்தில் உலகம் முழுவதுமுள்ள பத்திரிகைகளில் வெளிவருவதும் இன்று சர்வ சாதாரணமாக நடைபெறும் சம்பவமாகிவிட்டது.

ஆச் புச்வால்ட் என்ற பத்தி எழுத்தாளர் உலகின் பலபாகங்களிலுமுள்ள பத்திரிகைகளுக்கு ஏக காலத்தில் தமது பங்களிப்புக்களை வழங்கியவர். சுவையாகவும் குத்தலாகவும் நகைச்சுவையாகவும் சமகால நிகழ்வுகளை அச்சிடுவதில் கைதேர்ந்தவர்.

இலங்கையில் டெய்லிநியூஸ், ஒப்சேவர் போன்ற பத்திரிகைகளிலும் அவரது ஆக்கங்கள் வெளிவந்ததுண்டு. இவ்வாறான எழுத்தாளர்களின் ஆக்கங்கள் ஏடுகளைக் கெடுப்பதாகக் கருதப்படுவதில்லை. ஏடுகளை வளர்ப்பவையாகவே எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மார்க் ட்வேயின் என்பவர் பிரபலமான அமெரிக்க எழுத்தாளர் மட்டுமல்ல நகைச்சுவையாளரும் கூட. தனது எழுத்தில் நகைச்சுவை மிளிரும்படி அவர் நடந்துகொள்வார்.

புதிதாக வீடு ஒன்றை கட்டியிருந்தார் மார்க் ட்வேயின். ஒருநாள் அவரைப்பார்த்து பேசுவதற்கு நண்பர்கள் சிலர் வந்திருந்தார்கள்.

புதிய வீட்டின் சமையலறை முன்பக்கமாக அமைந்திருந்ததைப் பார்த்துவிட்டு ''ஏன் இப்படி கட்டுவித்தீர்கள்'' என்று நண்பர்கள் கேட்டனர். அதற்கு ட்வேயின் '' எல்லாம் உங்கள் வசதிக்காகத்தான்'' என்று கூறினார்.

''இதில் எங்களுக்கு என்ன வசதி?'' என்று நண்பர்கள் கேட்க, ஆமாம், என்னை பார்க்க வருபவன் எல்லாம் என்னையா பார்க்கிறான், என் மனைவி எங்கே நிற்கிறாள் என்று எட்டி எட்டி பார்க்கிறார்கள், அதனால் அவர்களுக்கு அவளைப் பார்ப்பதற்கு வசதியாக இருக்கட்டுமே என்று குசினியை முன்பக்கமாக வைத்து கட்டுவித்தேன்'' என்றார் அவர். நண்பர்கள் முகங்களில் அசடுவழிந்திருக்கும் என்று சொல்லவேண்டுமா?. அவரைப் பற்றிய இன்னும் பல சுவையான கதைகள் உண்டு.

இவ்வாறு தமிழில் நகைச் சுவையாக கதை கட்டுரை எழுதுபவர்கள் குறைவு என்றுதான் கூறவேண்டும்.

**அசை போட ஒரு விடயம்**

நகைச் சுவையாகவும் சுவாரஷ்யமாகவும் எழுதுவதில் அமரர் கல்கி(கிருஸ்ணமூர்த்தி) அவர்கள் கை தேர்ந்தவர் என்பார்கள். ஒரு முறை இலங்கைக்கு வந்து சென்ற கல்கி தமது தொடர் பயணக்கட்டுரையில் யாழ்ப்பாணத்தில் தமிழ் படித்தவர்கள் அதிகமாக இருந்தார்கள் என்பதைக் குறிப்பிட்டபோது, யாழ்ப்பாண வீதிகளில் எங்காவது எவர் மீதாவது கால் தடுக்கி மோதிக்கொள்ள நேர்ந்தால் நிச்சயம் அவர் ஒரு தமிழ்ப் பண்டிதர் அல்லது புலவராகத்தான் இருப்பார் என்று எழுதியிருந்தமை நினைவுக்கு வருகிறது.

வனவிலங்கு சரணாலயம் ஒன்றுக்கு சென்று திரும்பியிருந்த ''கார்டூனிஸ்ட்'' மதன் அவர்கள் வாகனத்தின் கண்ணாடி ஜன்னல்களை இழுத்துமூடிவிட்டு நாங்கள் அசையாமல் இருந்தோம். பல சிங்கங்கள்-காரின் அருகில் வந்து மோப்பம் பிடித்துவிட்டு சென்றன. ஒன்று மட்டும் கண்ணாடி வழியாக உள்ளே இருந்த எங்களை உற்றுப் பார்த்துவிட்டு நாக்கை சப்புக்கொட்டிக் கொண்டு போனது, ஏதோ பீரோவுக்குள் அல்வா இருப்பதுபோலவும் எடுத்து சாப்பிட முடியவில்லையே என்று கவலைப்பட்டுக் கொண்டு போவது போலவும் இருந்தது அதன் செய்கை, என்று எழுதியிருந்தார். இதைத்தான் சுவாரஷ்யமான எழுத்து என்பார்கள். தழிழ் நாட்டில் ''சாவி'' மிகப்பிரசித்தமான நகைச்சுவை எழுத்தாளர். வாஷிட்டன் திருமணம் அவருக்கு பேரும் புகழும் தந்த தொடர்கதையாகும்.

நம் நாட்டிலும் இவ்வாறு சுவாரஷ்யமாக எழுதுபவர்கள் இருந்துள்ளார்கள்.

ஐம்பதுகளில், அறுபதுகளில் இலங்கையில் வெளிவந்த தமிழ் பத்திரிகைகளைப் பார்த்தால் அந்தக் காலத்து பத்திரிகை ஆசிரியர்கள் ஆசிரிய தலையங்கங்களை மட்டுமல்ல '' பத்தி'' கட்டுரைகளையும் எழுதியிருப்பதைக் காணலாம்.

ஊர்க்குருவி, வானம்பாடி போன்ற தலைப்புக்களில் அவர்கள் எழுதிய பத்திகள் பிரசித்தமானவை. தினகரனில் வி.கே.பி.நாதன் பிற்காலத்தில் க.கைலாசபதி, வீரகேசரியில் கே.பி.ஹரன் பிற்காலத்தில் கே.வி.எஸ்.வாஸ் சுதந்திரனில் எஸ்.டி.சிவநாயகம் போன்றவர்கள் இந்தப் பத்திரிகைகளை அலங்கரித்தார்கள்.

இன்று வயதானவர்களாகவுள்ள அந்தக்காலத்து தமிழ் வாசகர்களுக்கு அந்த ஆசிரியர்கள் எழுதிய ஆக்கங்கள் இன்றும் நினைவிருக்கலாம். அவர்கள் அந்தக் காலத்தில் ஆசிரியர் தலையங்கங்கள் எழுதுவதற்கு பயன்படுத்திய மொழி நடையும் சொற்பிரயோகமும் ஆச்சரியமானவை. பெரும்பாலான ஆங்கில சொற்களுக்கு நேர் கருத்துள்ள தமிழ் சொற்கள் கிடைக்காத நிலையிலும் கூடியவரை பொருத்தமான தமிழ் சொற்கள் அவர்கள் தேடி பிடித்து பயன்படுத்தினார்கள். கிடைக்காதவிடத்து நேர்கருத்துள்ள சமஸ்கிருத சொற்கள் பயன்படுத்தினார்கள். அம்மாதிரியான பல சொற்கள் காலப் போக்கில் வழக்கொழிந்து போன நிலையில் புதிய தமிழ் சொற்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன.

ஆசிரியர் தலையங்கங்கள் மிக நுணுக்கமான ஆய்வுகளுடன் மறுக்க முடியாத வாதங்களுடன் முன்வைக்கப்பட்டன. இதற்கெனத் தனி வசன நடைகளை அவர்கள் கையாண்டார்கள். கருத்துக்களை ஆணித்தரமாக எடுத்துரைப்பதற்கு பழமொழிகள், கவிதைகள், முன்னோர் சொல் வழக்குகள் திருக்குறள் மற்றும் இலக்கிய மேற்கோள்களை கச்சிதமாகவும் பொருத்தமாகவும் கையாண்டார்கள். எடுத்து கொள்ளும் விடயத்துக்கு ஏற்ப தமது நடையை சில சமயம் இறுக்கமாகவும் சில சமயம் எளிமையாகவும் ஏன் நகைச் சுவையாகவும் கூட அவர்கள் பயன்படுத்தியிருந்தது ஆச்சரியத்துக்குரியது.

ஆசிரியர் தலையங்கம் எழுதுவதுடன் அவர்கள் நிறுத்திக் கொள்வதில்லை. பத்தி கட்டுரைகளை வடிப்பதிலும் கைதேர்ந்தவர்களாகக் காணப்பட்டார்கள்.

இதிலும் விசேஷம் என்னவென்றால் இரண்டு ஆக்கங்களையும் ஒருவரே படைத்திருந்தாலும் இரண்டுக்கும் இடையில் நடை மற்றும் வழங்கும் முறைகளில் நேர் வித்தியாசத்தைப் பார்க்கலாம்.

இந்தக் காலத்தில் பத்தி எழுத்து என்றால் என்ன ஆசிரியர் தலையங்கம் என்றால் என்ன என்பதே தெரியாமல் எழுதுகிறார்கள்.

பத்தி எழுத்துக்கும் ஆசிரிய தலையங்க எழுத்து முறைக்கும் வித்தியாசம் தெரியும் வகையில் எழுதிப் பழகிக் கொள்ளாமை இதற்குக் காரணமாக இருக்கலாம். இதனால் தான் சில ஆசிரியர்கள் இரண்டு வகை வினாக்களையும் போட்டு குழப்பி தாம் எழுதுவதுதான் எழுத்து அதை வாசிப்பது வாசகனின் தலையெழுத்து என்றமாதிரி எழுதுகிறார்கள் போலும். கால மாற்றத்துக்கும் வளர்ச்சிக்கும் ஏற்றவகையில் எழுத்து நடை, விடயத்தை சொல்லும் முறை போன்றவற்றில் வித்தியாசமும் மாற்றங்களும் கொண்டு வரப்படுவது அவசியமே. ஆனால் ஒரு பத்திரிகை ஆசிரியர் எழுதும் இரண்டு விடயங்களுக்குமிடையில் உள்ள தாரதம்யம் வெளிப்படவேண்டும்.

தோசையும் இட்டலியும் ஒரே வகை மாவினால் தயாரிக்கப்பட்ட போதிலும் தோற்றத்திலும் உருசியிலும் வித்தியாசம் இருக்க வேண்டும் அல்லவா?

கே.பி.ஹரன் வீரசேகரியில் இருந்த காலத்தில் ஆசிரிய தலையங்கம் போக ஊர்க்குருவி என்ற பத்தியையும் எழுதி வந்தார். பின்னர் 'ஈழநாடு' பத்திரிகையில் 'ஐயாறன்' என்ற புகுதியை எழுதினார். இரண்டையும் அவர் கையாண்ட விதம் சுவாரஷ்யமானது.

அந்த ஆசிரியர்கள் ஒவ்வொருவரும் தனித்துவமான வேறு தகுதிகளையும் பெற்றிருந்தார்கள். க. கைலாசபதி ஈழத்து இலக்கியத் துறையில் தலைசிறந்த திறனாய்வாளராகவும் பிற்காலத்தில் பேராசிரியராகவும் திகழ்ந்தார். எஸ்.டி.சிவநாயகம் சிறந்த பிரயாணக் கட்டுரையாளராக மிளிர்ந்தார். கே.வி.எஸ்.வாஸ் பத்திரிகை ஆசிரியராக விளங்கிய அதேசமயம், அக்காலத்தில் நல்ல துப்பறியும் நாவல்களை தொடராக எழுதினார். விற்பணையில்தொய்வுஏற்படும் சமயங்களில் அவரது தொடர்கதைகள் பத்திரிகை விற்பனை அதிகரிக்க உதவின. கே.பி. ஹரன் மிக சிக்கலான அரசியல் விடயங் களையும் கூட மிக எளிய நடையில் விமர்சிப்பார். அதே சமயம் தமது 'பத்தி' எழுத்தை மிக நளினமாக நகைச் சுவை ததும்ப எழுதுவார். இந்தக் கால இளம் எழுத்தாளர்கள் சந்தர்ப்பம் கிடைக்கும் போது அவைகளைப் படித்துப்பார்ப்பது பயனளிப்பதாகும். ✱

■ ரம்யன்

---

# கொண்டாட்டம்



## நகர்வலம் – 2

எகிறிக்கொண்டு போகும் விலையேற்றத்துக்கு மத்தியிலும் நாகரிக மாற்றம் எல்லாவற்றையும் வாங்கத் தூண்டுகிறது.

யாழ். நகரில் இப்போது பெண்களை மயக்குவது பொன் நகையல்ல; பதிலாக மின்னும் மென் நகைகள் தான். குறைந்த விலையில் கிடைக்கும் தோடுகளும், மாலைகளுமே இன்றைய இளம் பெண்களின் தெரிவு. ஆடையின் நிறத்துக்கும் வடிவுக்கும் பொருத்தமாக கிடைப்பதால் அவர்கள் அதனையே விரும்புகிறார்கள். தீபாவளிக்கு வாங்கும் பொருள்கள் வரிசையில் இளம் பெண்களிடம் இதற்கும் முன்னுரிமை உண்டு.

புடைவை, சல்வார் இதற்கேற்றாற் போல் தோடு, காப்பு, நெக்லஸ், பொட்டு கட்டாயம் வாங்கியே ஆக வேண்டும் என்று அலையும் இளசுகளை கடை வீதி முழுவதும் காண முடியும். அப்படி அவர்கள் என்னதான் வாங்குகிறார்கள் என்று அறியும் ஆவலில் பான்சிக் கடைக்குள் நுழைந்தேன். புடைவைக்குத் தகுந்த தோடு, வளையல், நெக்லஸ் வாங்க குறைந்தது ஆயிரம் ரூபாவுக்கு மேல் கட்டாயம் தேவை என்றாள் நண்பி.

அழகு சாதனப் பொருள்கள் விற்கும் கடைக்குள் நுழையும் எந்த ஒரு இளம் பெண்ணும் முதலில் தோடுகளையே தேடுகிறார்கள்; தேர்ந்தெடுக்கிறார்கள். விதம் விதமாக அவை கடைகளில் குவிந்து கிடக்கின்றன. சீனாதான் இவற்றின் உற்பத்தியில் முக்கிய இடம்பிடிக்கிறது. இந்தியாவில் இருந்தும் சில ஐட்டங்கள் வருகின்றன என்கிறார்கள் கடைக்காரர்கள்.

யாழ். நகரின் பெரியகடை வீதி, ஆஸ்பத்திரி வீதிக்கும் இடையில் உள்ள கட்டடத் தொகுதிகளில் உள்ள கடைகள் அதிகமாக இத்தகைய பொருள்களுக்கென்றே ஒதுக்கப்பட்டுள்ளன. சாதாரணமாக கல்லுப் பதித்த தோடுகள் ஒரு சோடி 80 ரூபாவுக்கும் அதே நிறத்தில் நெக்லஸ் 200 ரூபாவுக்கு மேலும் வளையல்கள் 300 ரூபாவுக்கும் இங்கு கிடைக்கிறது.

சிவப்புக் கல்லுப் பொறித்த தோடுகள், நெக்லஸ்கள் மீதுதான் பெண்களுக்கு ஆர்வம் என்கிறார்கள் கடைக்காரர்கள். ''வாங்க வருபவர்கள் சிவப்புகல்லு தோடுகள் இருக்கின்றதா? நெக்லஸ் இருக்கின்றதா?'' என்றுதான் கேட்பார்கள் என்றார் கடையில் வியாபாரத்தைப் பார்க்கும் ஒருவர். கூடுதலாக இந்திய உற்பத்திப் பொருள்களைத்தான் விரும்புகிறார்கள். படங்களில், நாடகங்களில் நடிகைகள் அணிந்திருக்கக் கூடிய நகைகள், டிசைன்கள் போல் இருக்க வேண்டும் என்றே தேடுகிறார்களாம். வாழ்க தீபாவளி!

■ நிஸா

## பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை

கொழும்பு, கிராண்ட்பாஸ் பகுதியில் இயங்கும் அலுவலகம் ஒன்றிற்கு பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் தேவை. கடமை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை, மாலை 6 மணி தொடக்கம் காலை 6 மணி வரை. கொடுப்பனவுகள் **Shift** அடிப்படையில் வழங்கப்படும்.

ஒரு ***Shift*** க்கான கொடுப்பனவு பகலுக்கு 450 ரூபா. இரவிற்கு 550 ரூபா. இரவும் பகலும் கடமைகள் புரியக் கூடியவராக இருத்தல் வேண்டும். ஒருவாரம் இரவும் மறுவாரம் பகலும் கடமைபுரிய வேண்டும். வெள்ளவத்தைப் பகுதியில் தங்குமிட வசதிகள் வழங்கப்படும். தங்குமிடத்திலிருந்து கிராண்ட்பாஸ் வரைக்கும் வந்துசெல்வதற்கான போக்குவரத்துச் செலவு வழங்கப்படும்.

**குறிப்பு :**

ஓய்வுபெற்ற பொலிஸ் உத்தியோகத்தர்கள், ஏற்கனவே பாதுகாப்பு உத்தியோகத்தராகக் கடமையாற்றியோருக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

க.பொ.த சாதாரண தரம் வரை படித்தவர்கள் எவரும் இணைந்துகொள்ளலாம். வெளிமாவட்ட விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். நேர்முகப் பரீட்சை தொலைபேசிஊடாக இடம்பெறும். விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும்.

**தொ. இல : 0714273035 / 071 4220024.**

## வீடு வாடகைக்கு

யாழ்.நகர் மத்தியில் மாட்டின் றோட் லேனில் அரச, தனியார் நிறுவனங்களுக்கு ஏற்ற அலுவலகமாக உபயோகிக்கக்கூடிய 3 பரப்புக் காணியில் வரவேற்பறை, 4 அறைகள் (1 அறை A/C), 2 குளியலறைகள், சமையலறை, 10 வாகனத் தரிப்பிட வசதி, நீர்த்தாங்கி மற்றும் ஜெனரேட்டர் வசதிகள் கொண்ட வீடு வாடகைக்கு விடப்படும்.

**தொடர்புகளுக்கு:**
**0779184069, 021 222 8195.**

## கொள்வனவு செய்யப்படும்

தரமான திராட்சைப்பழம் (1K-180/=), இதரை வாழைக்குலை (இடைப்பழம் 1K-35/=), பழப்பாக்கு (தனியன் 3/=), சின்னவெங்காயம் (தரத்துக்கேற்ற விலை) போன்ற யாழ்ப்பாண உற்பத்திகள் கொள்வனவு செய்யப்படுகின்றன. அதே நேரம் நுகர்வோர், வியாபாரிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மேற்கூறிய பொருள்களை கொள்வனவு செய்திட *அ.தங்கராசா அன் சன்ஸ், 60, ஜும்மா பள்ளிவாசல் வீதி, யாழ்ப்பாணம்.*
தொடர்புகளுக்கு: *0778995431, 0750434277.*

## காணி விற்பனைக்கு

*சண்டிலிப்பாய்க்கும் - சுன்னாகம் சந்திக்கு அருகிலும் 11½ நிலப்பரப்பு காணி விற்பனைக்குண்டு. தரகர் தேவையில்லை.*

**தொடர்பு: 0777252159**

## இறைச்சிக் கோழி விற்பனை

*உள்ளூரில் உற்பத்தி செய்யப்பட்ட புறொயிலர், கல்பேட் தினமும் சுத்தம் செய்து காலை 6 மணி தொடக்கம் இரவு 8 மணிவரை பெற்றுக் கொள்ளலாம்.*

**புறொயிலர் இறைச்சி ரூபா 495/= மட்டுமே**
**நல்லூர் பாம் சென்ரர்,**
**இல.19, முருகேசர் லேன், நல்லூர்.**

## மணப்பெண் அலங்காரப் பொருள்கள்

மணப்பெண் அலங்காரத்தை மேலும் மெருகூட்டக்கூடிய வகையில் தரமான பொக்கே, சடைநாகம் முதலிய பூவேலைகள், அழகுசாதனப் பொருள்கள் என்பன சுவிஸ், கனடா, பிரான்ஸ் முதலிய நாடுகளில் பிரபலம் பெற்றவரால் தரமான முறையில் தயாரித்துக்கொடுக்கப்படும்.
தொடர்பு: *0777206829, 0112448743*

## மணமகன் தேவை

*யாழ்.இந்து கௌரவ குடும்பம் 1984 உத்தராடம் முதலாம் பாதம் 8 இல் செவ்வாய் உயரம் 5' 4'' HNDA படித்த மணமகளுக்கு வெளிநாட்டில் PR உடைய பொருத்தமான மணமகனை பெற்றோர் தேடுகின்றனர்.*
தொடர்பு: 0776139307

## வாகனச் சாரதிகள் தேவை

வெள்ளவத்தைப் பகுதியில் உள்ள அலுவலகம் ஒன்றில் கடமை புரிவதற்கு மோட்டார்சைக்கிள், ஆட்டோ, வான் ஆகியன ஓட்டுவதற்கு அனுமதிப் பத்திரம் உள்ள சாரதிகள் தேவை.

**குறிப்பு :**

தங்குமிட வசதி அலுவலகத்திலேயே வழங்கப்படும். கவர்ச்சிகரமான சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும். மேலதிகநேரக் கொடுப்பனவுகளும் உண்டு. கொழும்பு வீதிகளில் பரீட்சயம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும், பரீட்சையம் இல்லாதவர்களும் ஒரு வருட அனுபவம் இருப்பின் இணைந்துகொள்ளலாம். விரும்புவோர் கீழ்வரும் தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்புகொள்ளவும்.

**தொ. இல : 071 8691691 / 0714273035.**

## கண்ணீர் அஞ்சலி

யா/யாழ். இந்து மகளிர் கல்லூரி உப அதிபர்
திருமதி ஸ்ரீரமணி அருள்வேல்
அவர்களின் அன்புச் சகோதரி
**திருமதி ஸ்ரீராகினி ஸ்ரீரங்கநாதன்**
அவர்களின் மறைவையிட்டு துயரமடைகிறோம்.
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரி கழகம்,**
**யாழ். இந்து மகளிர் கல்லூரி, யாழ்ப்பாணம்.**


இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
**றோயல் குளுக்கோஸ்**
100% சுத்தமானது
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும் போது குளுக்கோஸ் என்று கேட்காமல்
**றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்**
PACKED BY:
ROYAL Industries
Colombo 12, T.P: 0777277670
அனைத்துப் பார்மஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக் கொள்ளலாம்.




ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா
நறுமணப்
பூங்கா
**288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.**

இலவசம்
**அன்பார்ந்த வாடிக்கையாளர்களே!**
எம்மிடம் 18 டசின் றோயல் குளுக்கோசினைக் கொள்வனவு செய்து 1000 ரூபாய் பெறுமதியான அழகிய வர்ண ரீ - சேட் ஒன்றினை முற்றிலும் இலவசமாய் பெற்றுக் கொள்ளவும்.


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

*திருமதி கந்தசாமி சிவக்கொழுந்து*



ஒரு துளியில் உருவாகி உனக்குள்ளே கருவாகி
உன்ரத்தம் உணவாகி உன் சதையை உடலாக்கி
உயிர்பெற்று வந்தோம் அம்மா உயிர் தந்த தாயே
உனைக் காக்க முடியவில்லை - தவிக்கின்றோம் தாயே

கடந்த 23.09.2011 இல் சிவபதமடைந்த எம் அன்னையின் வீட்டுக்கிருத்திய நிகழ்வு இன்று 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை வவுனியாவில் உள்ள அன் னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

*உஷா சிவநாதன்,* வெளிவட்ட வீதி, வவுனியா.

*அன்னையின் மடியில்: 20.06.1928*

*ஆண்டவன் அடியில்: 23.09.2011*



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்: **13.08.1932**
விண்ணில்: **03.11.2010**

*திதி: துவாதசி 23.10.2011*

## திருமதி பேரம்பலம் அன்னலட்சுமி

**(ஓய்வுபெற்ற ஆசிரியை)**

*ஆண்டொன்று ஆனதுவோ*
*உங்கள் முகம் கண்டு*
*ஆறவில்லை நம் இதயம்*
*அன்பும் பாசமும் நிறைந்த*
*பொக்கிஷமாய் திகழ்ந்தீர்கள் நீங்கள்*
*நித்தம் புலம்புகின்றோம் நாமிங்கு*
*பாரினிலே பண்புயர் தெய்வமாகத் திகழ்ந்தீரே*
*பல்லாண்டு சென்றிடினும் மறவோமே தாயே!*

மகன் :
*கேதீஸ்வரன் (பிரான்ஸ்)*

பேரப்பிள்ளைகள்:
*துஸ்யன், இந்துஜன், சஞ்ஜித், சங்கவி* } *பிரான்ஸ்*
*சௌமினி, டஸ்மினி* } *சங்கானை*
*கீர்த்தினி -லண்டன்*

மகள்மார்:
*ஜெகதீஸ்வரி (பிரான்ஸ்)*
*ஜோதீஸ்வரி (சங்கானை)*
*நிகிலாதீஸ்வரி (லண்டன்)*

மருமக்கள்:
*சற்குணதேவி (பிரான்ஸ்),*
*சிவகுமாரன் (பிரான்ஸ்),*
*பாலபாஸ்கரன் (ஓமான்),*
*யோகநாதன் (லண்டன்).*

பிளாக் வீதி, சங்கானை.

# கிராம அலுவலர்களின் ஆளுமை விருத்திக்கு மன்னார் செயலகத்தில் பயிற்சிக் கருத்தமர்வு



மன்னார்,ஒக்.23

மன்னார் மாவட்டத்தில் பணியாற்றும் கிராம அலுவலர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வு மன்னார் மாவட்டச் செயலகத்தின் கேட்போர் கூடத்தில் ஆரம்பிக்கப்பட்டது.

கிராம அலுவலர்களின் ஆளுமையை வலுப்படுத்துவதை நோக்கமாகக் கொண்டு நான்கு தினங்களை உள்ளடக்கியதாக அமைந்த மேற்படி பயிற்சிக் கருத்தரங்கை மன்னார் மாவட்ட அரச அதிபர் நா.வேதநாயகன் கடந்த வியாழக்கிழமை சம்பிரதாய பூர்வமாக ஆரம்பித்து வைத்தார்.

பிணக்குகளுக்கு மாற்றுத் தீர்வு காண்பதற்கான நிறுவனம் உள்நாட்டலுவல்கள் அமைச்சுடன் இணைந்து மன்னார் மாவட்ட கிராம அலுவலர்களுக்கு முன்னெடுத்து வரும் மேற்படி பயிற்சிக் கருத்தமர்வில் சட்டம் மற்றும் நிர்வாகம் தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சின் அரச சேவைகள் பயிற்சிப் பிரிவின் பணிப்பாளர் டபிள்யு. எம்.பி.ஜி.விக்கிரமசிங்க தலைமையிலான குழுவினரும் பிணக்குகளுக்கு மாற்றுத் தீர்வு காண்பதற்கான நிறுவனத்தின் பணிப்பாளர், சட்டத்தரணி திருமதி ஆன்பெர்னாண்டோ தலைமையிலான குழுவினரும் மேற்படி பயிற்சிக் கருத்தமர்வில் முக்கிய பங்கு வகித்தனர்.

யு.என்.டி.பி. நிறுவனத்தின் அனுசரணையுடன் இடம்பெற்று வரும் கருத்தமர்வில் இலங்கையின் சட்ட முறைமை, காலனித்துவ சட்ட முறைமை உள்ளடங்கலாகப் பல்வேறு சட்டங்கள் தொடர்பில் விளக்கமளிக்கப் பட்டது.

நாட்டில் கடந்த முப்பது வருடங்களுக்கு மேலாக இடம் பெற்று வந்த யுத்தத்தின் காரணமாக இதுபோன்ற பயிற்சிக் கருத்தமர்வுகளைக் கிராம அலுவலர்களுக்கு முன்னெடுக்க முடியாத நிலை ஏற்பட்டிருந்ததாகவும் தற்போது இவர்களுக்கான பயிற்சிகளை வழங்க வேண்டியது கட்டாயமெனவும் பிணக்குகளுக்கு மாற்றுத்தீர்வு காண்பதற்கான நிறுவனத்தின் பணிப்பாளர், சட்டத்தரணி திருமதி ஆன்பெர்னாண்டோ தெரிவித்திருக்கின்றார்.

மன்னாரில் முதல் தடவையாக இடம்பெற்ற கிராம அலுவலர்களுக்கான பயிற்சிக் கருத்தமர்வின் ஆரம்ப தினத்தில் மன்னார் மாவட்ட மேலதிக அரச அதிபர் திருமதி மோகனாதன், மாவட்டச் செயலகத்தின் நிர்வாக அலுவலர் டி.எல்.ஜே. பெர்ணான்டஸ் ஆகியோர் கலந்துகொண்டு ஆரம்பித்து வைத்தனர். இதனிடையே மேற்படி பயிற்சிக் கருத்தமர்வை மன்னார் பிரதேச செயலக கிராம சேவையாளர்களுக்கான நிர்வாக அலுவலர் எஸ்.ஏ. பெர்னான்டோ ஒழுங்குபடுத்தி நடத்தினர். இதேவேளை கருத்தமர்வில் கலந்து கொண்டிருக்கும் கிராம அலுவலர்களுக்கு இதுதொடர்பிலான சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன. (க-601)

# கணினி, ஆங்கிலப் பயிற்சிக்கு தெரிவு செய்வதற்கான பரீட்சை

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சியில் இலவச கணினி, ஆங்கிலப் பயிற்சி நெறிக்கான பயிற்சியாளர்களைத் தெரிவு செய்வதற்கான பரீட்சையொன்று நடைபெறவுள்ளது.

பாடசாலைக்கல்வியை முடித்த உயர்கல்வியைத் தொடரமுடியாத மாணவர்களுக்கு இந்த இலவசக் கணினி, ஆங்கிலப் பயிற்சி நெறிகள் வழங்கப்படவுள்ளன.

கிளிநொச்சிக் கல்வி வலய முறைசாராக் கல்விப் பிரிவினரால் நடத்தப்படவிருக்கும் மேற்படி பரீட்சை எதிர்வரும் 25 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை கிளிநொச்சி மத்திய கல்லூரியில் அமைந்துள்ள கணினி வள நிலையத்தில் நடைபெறும்.

இந்தப் பயிற்சியைப் பெற விரும்புவோர் அன்றைய தினம் காலை 9 மணிக்கு முன்பாகப் பரீட்சை மண்டபத்தில் சமூகமளித்திருக்குமாறு கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இந்தப் பயிற்சிகளை நிறைவு செய்வதன்மூலம் உயர்கல்வியை தொடர முடியாத மாணவர்கள் தமக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெறுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்படும். (க-405)

# கசிப்புக் காய்ச்ச முயன்றவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிப்பு

கிளிநொச்சி, இராமநாதபுரம் பகுதியில் 8 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கோடாவைத் தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் கிளிநொச்சிப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி இராமநாதபுரம் பகுதியில் கசிப்பு உற்பத்திக்குப் பயன்படுத்தப்படும் சுமார் 8 ஆயிரத்து 250 மில்லிலீற்றர் கோடாவை தன்வசம் வைத்திருந்த ஒருவரை கிளிநொச்சிப் பொலிஸார் கடந்த 17 ஆம் திகதி கைது செய்து மறுநாள் கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றில் நீதிவான் பெ.சிவகுமார் முன்னிலையில் முன்னிலைப் படுத்தினர். இவருக்கு 30 ஆயிரம் ரூபா தண்டம் விதிக்கப்பட்டதுடன் இதனைச் செலுத்தத் தவறின் மூன்றுமாதச் சாதாரண சிறைத் தண்டனை.அனுபவிக்க வேண்டும் எனவும் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. (க-6)

## இன்றைய தேவை...



நிறுவனத்தின் சீரிய உதவி: மாந்தை மேற்குப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட தட்சண மருதமடு அ.த.க. பாடசாலையில் நிறுவனம் ஒன்றால் அமைக்கப்பட்ட பாடசாலைக் கட்டடத்தை அமைச்சர் றிசாத் பதியுதீன் திறந்து வைக்கின்றார். (601)

# சகோதரிகள் சடலங்களாக மீட்பு

மன்னார்,ஒக்.23

மன்னார் நானாட்டான் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புதுக்காடு, பள்ளம்கோட்டை எனும் கிராமத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவர் அந்தக் கிராமத்தில் உள்ள கிணறு ஒன்றினுள் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளனர்.

43 வயதான ராசு ராஜலக்ஷ்மி மற்றும் 45 வயதான தனிநாயகம் ராஜலக்ஷ்மி ஆகிய சகோதரிகளே உயிரிழந்தவர்களாவர். நாகலஷ்மி சற்று மனநிலை பாதிக்கப்பட்டவர் எனத் தெரியவருகின்றது. ராஜலக்ஷ்மி திருமணம் முடித்தவர். இவர்கள் இருவரும் காணாமல் போனதையடுத்து உறவினர்கள் இவர்களைத் தேடியுள்ளனர்.

அப்போது அந்தக் கிராமத்திலுள்ள கிணற்றினுள் இருவரும் இறந்த நிலையில் காணப்பட்டனர். தகவலறிந்து சம்பவ இடத்துக்கு வந்த முருங்கன் பொலிஸார் இரு சடலங்களையும் மீட்டு மன்னார் வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

பின்னர் மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி வைத்தியசாலைக்குச் சென்று சடலங்களைப் பார்வையிட்டதோடு சடலப் பரிசோதனைக்கு உட்படுத்துமாறும் உத்தரவிட்டார்.

மேலதிக விசாரணைகளை முருங்கன் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (க-601)

# நெற்செய்கை பாதிப்பு

முல்லைத்தீவு,ஒக்.23

வன்னிமாவட்டத்தில் தொடர்ச்சியாகப் பெய்து வரும் கனமழை காரணமாக விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

வயல் நிலங்களில் அதிக வெள்ளம் தேங்கி நிற்பதால் இயந்திரங்களைப் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகின்றது. இதனால் காலபோக நெற்செய்கை தாமதமடைந்துள்ளது.

# அடையாள அட்டைகள்

இந்து தர்மாசிரியர்களுக்கான பரீட்சைக்கு கிளிநொச்சி திருநெறிக் கழகத்தினூடாக விண்ணப்பித்தவர்களின் அடையாள அட்டைகள் கிடைக்கப்பெற்றுள்ளன.

எதிர்வரும் 25ஆம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் 3 மணியளவில் கிளிநொச்சி மகாவித்தியாலயத்தில் வைத்து இவை வழங்கப்படவுள்ளன. (க-405)

# பாடசாலை அதிபர்கள் சிலரின் அசமந்தத்தால் பரீட்சை எழுத முடியாது ஏமாந்த மாணவர்கள்

கிளிநொச்சி,ஒக்.23

கிளிநொச்சிக் கல்வி வலயத்திலுள்ள சில பாடசாலை அதிபர்களின் பொறுப்பற்ற செயல் காரணமாக மாணவர்கள் பாதிப்புக்கு உட்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜி.சி.ஈ. உயர்தர வகுப்பில் தரம் 12 இனைப் பூர்த்தி செய்த மாணவர்கள் தோற்றும் பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் பரீட்சை (GIT) நேற்று பரீட்சைத் திணைக்களத்தால் நாடளாவிய ரீதியில் நடத்தப்பட்டது.

ஆனால், பாடசாலை அதிபர்கள் சிலரின் பொறுப்பற்ற போக்கால் பல மாணவர்கள் இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியாத நிலை ஏற்பட்டது.

ஒவ்வொரு வருடமும் பரீட்சைத் திணைக்களத்தினர் ஜி.சி.ஈ. உயர்தர வகுப்புக்கள் உள்ள பாடசாலைகளுக்கு விண்ணப்பப் படிவங்களை அனுப்பி வைப்பது வழக்கமாகும். இவற்றைப் பூர்த்தி செய்து அனுப்பி வைத்தால் மட்டுமே இந்தப் பரீட்சைக்குத் தோற்ற முடியும். ஆனால், விண்ணப்பப் படிவங்கள் கிடைக்கவில்லையென்ற காரணத்தைக் கூறிச் சில பாடசாலை அதிபர்கள் இதில் அக்கறையின்றி இருந்ததாகத் தெரிய வருகின்றது. இதனால் பாதிக்கப் படப் போகின்றவர்கள் மாணவர்கள்தான்.

மேலும் ஜி.சி.ஈ. உயர்தரப் பரீட்சைப் பெறுபேற்றுச் சான்றிதழில் பொதுத் தகவல் தொழில்நுட்பவியல் பாடத்தையும் உள்ளடக்கும் சாத்தியங்களும் அதிகரித்துக் காணப்படுகின்றன.

இந்த நிலையில் பரீட்சைக்குத் தோற்ற முடியாத மாணவர்களின் பெறுபேற்றுச் சான்றிதழில் இந்தப் பாடத்தின் பெறுபேறுகள் குறிக்கப்படாதநிலையே ஏற்படப் போகின்றது.

இதுதொடர்பாகக் கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது:

இந்தப் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவங்கள் பரீட்சைத் திணைக்களத்தால் நேரடியாகப் பாடசாலைகளுக்கு அனுப்பி வைக்கப்படுவதே வழக்கமாக வுள்ளது. கடந்த ஆண்டு இதற்கு விண்ணப்பித்த பாடசாலைகளுக்கே விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகின்றது. இருந்தபோதும் விண்ணப்பப் படிவங்கள் கிடைக்காத அதிபர்கள் உரிய நேரத்தில் அறிவித்திருந்தால் மாற்று ஏற்பாடுகளை எம்மால் மேற்கொண்டிருக்க முடியும் என்று கூறினார். (க)

# போதையில் தள்ளாடியவர் 5 ஆயிரம் ரூபா செலுத்தினார்

மன்னாரில் மது போதையில் பொது மக்களுக்கு இடையூறு விளைவித்த நபர் ஒருவருக்குக் கடந்த வியாழக்கிழமை மன்னார் நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டது.

மன்னார், தலைமன்னார் பிரதான வீதி வங்காலைப்பாடு சிறுத்தோப்பு எனும் இடத்தில் குறித்த நபர் வியாழக்கிழமை காலை மது போதையில் வீதியால் செல்லுபவர்களுக்கு இடையூறு விளைவித்துள்ளார்.

இந்த நிலையில் அந்தப் பகுதியால் வந்த தலைமன்னார் பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினார்.

விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் நீதிவான் திருமதி கே.ஜீவராணி குறித்த நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையினால் 5 ஆயிரம் ரூபாய் தண்டம் செலுத்துமாறு உத்தரவிட்டார். (க-601)

## இனி இல்லை நெஞ்சுவலி!!!




இருதய நோயாளிகள் நெஞ்சுவலி இன்றி எதிர்காலத்தில் சுகமாக வாழலாம். எமது ஆயுர்வேத மூலிகை மருந்து இரத்தவோட்டத்தை சீர்படுத்தும் பக்கவிளைவுகள் இல்லை. சுகமான எதிர்காலம் உறுதியானது.

ஏனைய நாளைய சிகிச்சைகள்
* புற்றுநோய் கவனிப்பு
* நரம் பிரச்சினைகள்
* மூட்டு முதுகுவலி
* புரொஸ்டிரேட் பிரச்சினை
* ஒற்றைத்தலைவலி
* மன அழுத்தம்
* இருமல் & சளி
* படுக்கைப்புண்
* நீரிழிவுப்புண்
* விஷ வைரஸ் பாதிப்பு

உடல் மூட்டுகளில் வலியா ?
※ கை, கால், இடுப்பு, கழுத்து இவைகளில் வலி
※ வீக்கம், பிடிப்பு, இறுக்கம் இருந்தால்
ஒரு வைத்தியரை சந்தித்து சுகம் பெறுங்கள்.

FAIR PHARMA (PVT) LTD
Sponsored by
[ஆயுர்வேத மருத்துவம்]
Level 5 / East Tower / 1C,
World Trade Centre,
Colombo 01.
0094 115 517 897,
5 551 879, 5 558 442.
Fax: 5 517 756
Website: www.ayurveda.lk
fairpharmasrilanka@yahoo.com



யாழ்ப்பாணம் விநியோகஸ்தர்கள்
ரி.ராஜவேல் மாதுஜன் மெடிக்கல்
கொடிகாமம் வீதி நெல்லியடி
077 4656428

Hotline: 0777 555 600 / 0777 708 310 / 0777 708 330
BOI APPROVED & ISO 9001 : 2008 QMS CERTIFIED COMPANY


## மகேஸ்வரி நிதியம் அலுவலகம் இடமாற்றம்

இலக்கம் 110, 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்திருக்கும் மகேஸ்வரி நிதியத்தின் வடமாகாண தலைமைக் காரியாலயம் நாளை (24.10.2011) திங்கட்கிழமையில் இருந்து இல.70, கோயில்வீதி, யாழ்ப்பாணம்(ஆஸ்பத்திரி வீதிக்கு அருகில்), என்னும் முகவரியில் தனது பணிகளை மேற்கொள்ளும்.

★ மணல்பெறும் பயனாளிகளும் மேற் கண்ட புதிய அலுவலகத்திலேயே பதிவுகளை மேற்கொள்ளமுடியும்.

த.றஜீவ்
செயற்திட்ட இணைப்பாளர்,
மகேஸ்வரி நிதியம்.

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு:
05.03.1932

உதிர்வு:
24.10.2008

திதி: அபரபக்க ஏகாதசி
(23.10.2011)

### சோமசுந்தரம் கணேசலிங்கம்

(B.A., Dip in Edu., M.A.)
(இளைப்பாறிய கொத்தணி அதிபர்)

மீசாலை வெள்ளை மாவடிப் பிள்ளையார் மலரடிசேர்ந்து
ஆண்டு மூன்று ஆயிடினும் ஆறிடுமோ எம் துயரம்

72/27, பனிக்கர் ஒழுங்கை,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்

## வீடு விற்பனைக்கு

15/3, கடற்கரை வீதி, ஈச்சமோட்டையில் 1½ பரப்பில் அமைந்த வீடு விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0750700166

## பெண்களுக்கான தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி

பெண்களுக்கான தையல் இயந்திரம் திருத்தும் பயிற்சி ஆரம்பிக்கப்பட இருப்பதால் தையல் நிலையங்களில் உள்ள பயிற்சியாளர்களும் தனியாக தைக்கும் பெண்களுக்கும் ஓர் அரிய சந்தர்ப்பம். ஆர்வம் உள்ளவர்கள் கீழ் காணும் தொலை பேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும். 0774035146
போதனாசிரியர் R.துசியந்தன்
கட்டார்பரலி வீதி,
ஆனைக்கோட்டை.

## காணி விற்பனைக்கு

நாவற்குழி உணவுக் களஞ்சியத்துக்கு முன்னால் உள்ள 6 ஏக்கர் காணி விற்பனைக்கு உண்டு.
ஒரு பரப்பு 2 லட்சம்.
தொடர்பு: 0772897881

## காணி விற்பனைக்கு

யாழ். பருத்தித்துறை வீதிக்கு அண்மையில் சிறுப்பிட்டியில் 15¼ பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு. பெற்றோல் நிரப்பு நிலையத்துக்கு அருகில்.
தொடர்பு: 0776105193, 0778155659

## செல்லா திரையரங்கு



யாழ்: ஆஸ்பத்திரி முன்பாக
25 முதல் இளைய தளபதி விஜய்,
ஹன்சிகா, ஜெனிலியா
மற்றும் பலர் நடித்த
"வேலாயுதம்"
26.10.2011 முதல்
அனைத்து காட்சிகளும்
நடைபெறும்.
தொ: 0212227973

## வாகனங்கள் விற்பனைக்கு

LEYLAND - 10. WEEL கனரக வாகனம்
LEYLAND - 06. WEEL கனரக வாகனம்
பொருள் விநியோகத்தில் இருக்கும் ISUZU கன்டர் ரக வாகனங்கள் இரண்டு விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: 0779854886
021 222 1252

## பணிப்பெண் தேவை

யாழ்ப்பாணத்தில் உள்ள வீட்டில் கீழ் கண்ட வேலைக்கு 30 வயதுக்கு மேற்பட்ட பெண்கள் தேவை
1) வீட்டில் தங்கியிருந்து வீட்டு வேலை செய்யக் கூடியவர்.
சம்பளம் :- ரூபா 12, 000/=
2) ஒவ்வொரு நாளும் போய் வந்து வேலை செய்யக்கூடியவர்.
சம்பளம்:- ரூபா. 10, 000/=
தொடர்பு :- 0771392137
தயவு செய்து வேலைக்குவர விரும்பும் நபர் மாத்திரம் தொடர்பு கொள்ளவும்.

## வீடு விற்பனைக்கு

ஊரெழு கிழக்கு, பலாலி வீதியிலிருந்து 50 யார் தொலைவில் 2 ஆவது காணி 6 பரப்பு நவீன வசதிகள் கொண்டதும் 2000 சதுர அடிக்கு மேற்பட்டதும் சுற்று மதிலுடன் கராஜ் கொட்டில் வசதிகளுடனுமான வீடு, வளவு விற்பனைக்குண்டு.
தொடர்பு:
0776553701, 0775099332, 0776522098

## மணமகன் தேவை

யாழ். இந்து கௌரவ குடும்பம் 1967 ஆயிலியம் பொதுநிறம் இளமைத்தோற்றமுள்ள மணமகளுக்கு 49 வயதுக்குட்பட்ட மணமகன் தேவை. தாரமிழந்தவர்களும் பிள்ளைகள் இல்லாவிடின் விரும்பப்படும். சீதனம் உண்டு தரகர்களும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: வி.இல.4187, C/o உதயன்,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## திருமணக்கார் (A/C) வாடகைக்கு



-ரட்ணம்-
22, சோமசுந்தரம் அவெனியு,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
0777903090.

## காணி விற்பனைக்கு

மானிப்பாய் றோஸ் பிராண்ட் தொழிற்சாலைக்கு அண்மையில் மருதடி பிள்ளையார் கோயில் பக்கமாக முகாந்திரம் ஒழுங்கையில் தனித்தனி பாதையுடன் கூடிய வெறும் காணிகள் நான்கு-
1.6 பரப்பு, 1.6 பரப்பு (கிணற்றுடன்), 1.75 பரப்பு மற்றும் 4.5 பரப்பு அளவுகளைக் கொண்ட காணிகள் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:- 0776548933
(மு.ப. 10 மணி தொடக்கம் இரவு 10 மணிவரை)

## தொழில் முனைவோருக்கு இதுவொரு அழைப்பு

விற்பனைப் பிரதிநிதியாக தங்களின் எதிர்காலத்தை அமைத்திட விரும்புகின்றீர்களா?
மிகவும் வித்தியாசமான எங்கள் முயற்சியை மக்களிடம் கொண்டு செல்வதற்காகவே இந்த தொழில் வாய்ப்பு உருவாக்கப்பட்டுள்ளது.
பொதுவான விற்பனை முகவர்களுக்குக் கிடைக்கும் விற்பனைத் தரகுக் கொடுப்பனவு மட்டுமன்றி தங்களின் முயற்சிக்கு ஏற்ப வருமான ஊக்கத் தொகையையும் எதிர்கால பதவி உயர்வுகளையும் வியாபாரப் போட்டி களின் மூலம் பரிசுப் பொருள்களையும் பெற்றுக்கொள்ள இதுவொரு அரிய வாய்ப்பாகும். [ஆனால் இது காப்புறுதித் துறை இல்லை]
தினமும் 5 முதல் 10 நபர்களிடம் வியாபார நோக்கத்துக்காக தொடர்புகளை தாங்கள் மேற்கொண்டாலே போதுமானது.
தகுதி - குறைந்தபட்சம் க.பொ.த. சாதாரணதர சித்தி.
இத்துடன் தன்னம்பிக்கையும், விடாமுயற்சியும், நேர்மையும், தங்களின் மூலதனமாக இருக்கிறது என தாங்கள் நம்பினால்.... உடனடியாக விண்ணப்பியுங்கள்.
விண்ணப்ப முடிவு திகதி: 30.10.2011
வாழ்க வளமுடன்
குரு கிர்பா விற்பனைப் பிரதிநிதி
மே/பா- உதயன்- 4189,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## அமெரிக்கா வீஸா லொத்தர்

[இன்ரநெற் தெரியாதவர்களுக்கான சேவை]
விரையுங்கள் மு.திகதி 04.11.2011. எமது விண்ணப்பப் படிவங்களை உடன் நிரப்பியனுப்புங்கள். எம்மூலம் விண்ணப்பிக்க ரூபா 15/- முத்திரை, பெயர், விலாசத்துடன் எழுதவும்.
BBS Netting, 3/14,
Pinwatta Road, Dehiwala
0775811106

## சிங்கப்பூரில் தங்குமிட வசதி

சிங்கப்பூருக்கு குடும்பமாக விடுமுறையைக் கழிக்கவும் திருமணத்துக்கு வருபவர்களுக்கும் சகல வசதிகளுடன் கூடிய வீடு குறைந்த வாடகைக்கு கிடைக்கும்.
தொடர்புக்கு:006597514941
லிங்கம்
www lingam wedding.com


## தீபத் திருநாளை முன்னிட்டு மாபெரும் மலிவு விற்பனை

(ராசி சில்க்ஸ் & நல்லி சில்க்ஸ் இணைந்து வழங்கும் மாபெரும் மலிவு விற்பனை)

நல்லி சில்க்ஸ்
121/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5573

15.10.2011 தொடக்கம் 26.10.2011 வரை
திருமணச் சாறி, கொட்டன்சாறி, சல்வார்கள், சல்வார்த் துணிகள் (கொட்டன் சில்க்ஸ்) மற்றும் அனைத்து உடுபுடைவைகளையும் ஒரே இடத்தில் மிக மலிவாகப் பெற்றுக்கொள்ளலாம்.

ராசி சில்க்ஸ்
70, 71A, நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 5571



# இலக்கியத்துக்கு இலக்கியமான நளமகாராசன் கதை

இலக்கியக் காட்சி – 107

(சென்றவாரத்தொடர்ச்சி)

நளன் இப்பொழுது உடல் ஊனம் பெற்றுள்ளமையால் யாரும் அடையாளம் காணமாட்டார்கள் என்றும், வேண்டிய பொழுது உன் பழைய உருவம் பெறுவதற்கு இதோ இந்த உடுப்பை வைத்துக் கொள் என்றும் கூறிக் கொடுக்கிறது அந்தப் பாம்பு! பின்னர், நளன் அயோத்தியை அடைந்து அந்த ஊர் அரசனுக்குத் தேர்ப்பாகனாகவும் சமையற்காரனாகவும் அமர்கிறான்.

நளனைத் தேடிச்சென்ற அந்தண ஒற்றர், அந்த ஊரில் சென்று ''ஒரு வேந்தன், தனது காதலியை ஆழ்ந்த உறக்கத்தில் இரவில் விட்டுப் பிரிந்து செல்லத் துணிவானோ? என்று சொல்லிக் கொண்டு போக, அது தனது செயலைக் குறிப்பதாக இருக்கிறது; அதனைச் சொல்பவர் யாரென அறியமுற்பட்டு, வாசலுக்குச் சென்ற நளமகாராசன்

*''ஒண்டொடி தன்னை உறக்கத்தே நீத்ததுவும்*
*பண்டை விதியின் பயனே காண்...''*

என்று ஒற்றனை வினாவுகிறான். ஒற்றன் தமயந்தியிடம் போய்,

*''வாக்கினால் மன்னவனை ஒப்பான் மதித் தொருகால்*
*ஆக்கையே நோக்கின் அவனல்லன்''*

என்று கூறுகின்றான்.

இதனைச் செவிமடுத்த தமயந்திக்கு ஐயம் ஏற்படுகிறது. குறிப்பிட்ட வாகுகனை (நளன்) தனியே அழைக்க இயலாது என எண்ணித் தந்தையோடு ஆராய்ந்து, இரண்டாம் சுயம்வரம் தமயந்திக்கு' என்று அந்த ஊரிலே போய் முரசு அறையும் படி செய்கிறாள். முன்னர் தமயந்தியின் சுயம்வரத்தில் தோற்றுப் போன அரசன், இரண்டாவது சந்தர்ப்பம் கிடைத்த மகிழ்ச்சியில் நளமகாராசன் தேர் செலுத்த விதர்ப்ப நாடு செல்கிறான். தன்னையன்றி வேறோர் மணமகனைத் தமயந்தி தேடமாட்டாள்; தன்னை அழைப்பதற்கான சூழ்ச்சியே இது என எண்ணிக் கொண்டு போகிறான் நளன். அரண்மனை வாயிலில் அரசன் இறங்கி உள்ளே செல்ல, நளன் குதிரைகளைக் கட்டிவிட்டு, தேரிலே தனது சமையல் வேலையில் ஈடுபடுகிறான். அயோத்தி அரசனான இருதுபன்னன், உள்ளே சென்ற பொழுது அங்கே சுயம்வரத்துக்கான எந்த ஓர் அடையாளமும் இல்லையெனக் காண்கிறான். வீமராசன் அரசனை வரவேற்று உபசரித்து வந்த நோக்கம் என்ன என்கிறான். ''தங்களைக் கண்டு அளவளாவ வந்ததாகச் சொல்லிப் பலவும் பேசிக் கொண்டிருக்கிறான் அரசன். அந்த நேரம் தமயந்தி தன் பிள்ளைகளைத் தேர்ப்பாகனிடம் அனுப்பிவிட்டு அங்கே நடப்பவைகளை அவதானித்து வரும்படி தோழிப் பெண்ணையும் அனுப்புகிறாள்.



*''மக்களை முன்காணா மனநடுங்கா வெய்துயிராப்*
*புக்கெடுத்து வீரப்புயத் தணையா-மக்காள் நீர்*
*என்மக்கள் போல்கின்றீர்யார் மக்கள் என்றுரைத்தான்*
*வன்மக்களியானை மன்'' [நளவெண்பா]*

தன் எதிரிலே தன் மக்களைக் கண்டதும் பிள்ளைப் பாசத்தினால் அவர்களைத் தூக்கியணைத்து, ''என் பிள்ளைகளைப் போல இருக்கும் நீங்கள் யார் மக்கள்?'' என்று கேட்டு கண்கலங்குகிறான். ஆயினும் தன்னை வெளிப்படுத்தாமல் இயல்பாக உரையாட வைக்கிறார் புகழேந்திப் புலவர். தொடர்ந்து, ''நிடத நாட்டு மன்னனுடைய பிள்ளைகள் நாம் அம்மாவை கானகத்தில் விட்டுவிட்டு அவர் செல்ல, நாம் இங்கே வந்து இருக்கிறோம், எங்கள் நாட்டையும் யாரோ ஆள்கிறான்'' என்று பிள்ளைகள் கூறவும்,

''உங்கள் அரசை ஒருவன் ஆள, நீங்கள் இங்கே இருப்பது குற்றம் அல்லவா?'' என நளன் கேட்டதும் விவாதம் சூடுபிடிக்கிறது! கோபங்கொண்ட பிள்ளைகள் இப்படி ஒரு கேள்வியை நீ சமையல் செய்பவன் கேட்கிறாய்; பெரிய அரசர் கூட இப்படிக் கேட்கப் பயப்படுவார்களே என்கிறார்கள். பிள்ளைகளின் அன்புக்கு அடிமையான நளன், உணர்ச்சி பொங்க,

*''மன்னர் பெருமை மடையர் அறிவரோ?*
*உன்னை அறியாது உரை செய்த- என்னை*
*முனிந்தருளல் என்று முடிசாய்த்து நின்றான்*
*கனிந்துருகி நீர் வாரக் கண்'' [நளவெண்பா]*

(மடையர் = சமையல்காரர், அறிவற்றவர்)

இப்படியாக சமையல்காரனுக்கும் பிள்ளைகளுக்குமிடையில் நடந்த உரையாடல் மூலம் சந்தேகப்பட்ட தமயந்தி, அந்தச் சமையற்காரனை வரவழைத்து, உண்மை நிலை என்ன என்பதை அறியத்தருமாறு கேட்கிறாள். கலிநீங்குங் காலமும் காதலர்களின் அன்பும் சேர்ந்து வர, நளமகாராசன், பாம்பு கொடுத்த உடையை அணிகிறான். பழைய உருவம் வருகிறது. பிள்ளைகளோடு நளனும் தமயந்தியும் மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி நிற்கின்றனர். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமோ?

இதுவரை எஜமானாக இருந்த இருதுபன்ன மன்னன் எழுந்து நளமகாராசனிடம் மன்னிப்புக் கேட் கிறான். நீங்கள் செய்த உதவி பெரியது என்று நளமகா ராசன் நட்புப் பாராட்டி வழியனுப்பிவைக்கிறான். கலி நீக்கத்தின் போது மக்களைக் கண்டு, அன்பு மிகுதியால் கண்ணீர் மல்கித் தன்னை வெளிப்படுத்தியமைப் பாடும் போது, சோமேசர் முது மொழிவெண்பா பாடிய புலவர்,

*''தோன்றா வகை கரந்தும் தோன்றலைக் கண்டு*
*உள்நெகிழ்ந்து*
*தோன்ற நின்றான் முன்பு நளன் சோமேசா-தோன்றுகின்ற*
*அன்பிற்கும் உண்டோ அடைக்குந் தாழ்? ஆர்வலர்*
*புன்கண்ணீர் பூசல் தரும்''*

என்று பாடி, வள்ளுவரின் அன்புக்கு நளமகா ராசனை இலக்கியமாக்கியிருப்பது மிகுந்த சுவை பயப்பதாகும்.

மற்றும், சிறந்த சுவையுள்ள சமையலுக்கு ''நளபாகம்'' என்று சொல்லும் வழக்கம் நளனுடைய சமையல் நுணுக்கத்திலிருந்து பிறந்ததாகும். நளவெண்பாவினூடாக ஆடவர் சமையற்கலையில் வல்லவராகவும் இருந்தமையை அறிய முடிகிறது. ஆக, இலக்கியத்துக்கு இலக்கியமாக விளங்கும் நளமகா ராசன் கதையில் சில சுவையான முக்கிய இடங்களை விளக்கினோம். மாணவர்கள் நளவெண்பா வின் முழுப் பாடல்களையும் படித்துப் பயன்பெறுவாராக. ✱

நா.நல்லதம்பி, மட்டுவில்

---

# நிலையாமை

சிறுகதை



காரிலும் ஸ்கூட்டரிலும் பவனி வரவேண்டிய கோகிலப்பிரியா கால்கடுக்க நடந்து அலுவலகத்திலிருந்து திரும்பிக் கொண்டிருந்தாள். அவளுடைய பெற்றோர் கோகிலப் பிரியா எனப் பெயரை வைத்துக் கொண்டாலும் '' கோகிலா'' எனத் தந்தையும் தாயும் ''பிரியா'' என் நண்பிகளும் அழைப்பது வழக்கம். அவள் தந்தை பெரிய ஒரு தொழிற்சாலைக்கு முதலாளி. கஷ்ட காலமோ என்னவோ தொழிற்சாலை தீப்பற்றி எரிந்ததில் கடன்களைத் திருப்பிக் கொடுக்க முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டார். தணிகாசலம் முதலை விட வட்டி அதிகரிப்பைத் தாங்க முடியாத காரணத்தால் நகை, வீடு, காணி யாவற்றையும் விற்று கடனாளி என்ற கட்டத்திலிருந்து தப்பிக் கொண்டார் அவர்.

பதினெட்டு வயதுவரை சொகுசாக வாழ்ந்த கோகிலப்பிரியாவால் திடீரெனத் தொடர்ந்து விரட்டிய வறுமையைப் பழகிக் கொள்வதற்கு வெகு நாள் பிடித்தது. ஒரு நாள் '' அம்மா! இப்படி ஒரு வாழ்க்கை தேவை தானா? பஸ்ஸிலை ஒரே நெருக்கடி, காரிலை என்ன சுதந்திரமாய் சந்தோஷமாய் போய் வந்தன்; இப்ப....'' எனச் சொல்லிக் கொண்டே பெருமூச்செறிந்தாள் கோகிலா. கோகிலாவின் அன்னை பரம்பரைப் பணக்காரியல்ல, அதனால் கோகிலாவின் வார்த்தை அவளுக்குச் சிறிது எரிச்சலை உண்டுபண்ணியது. அதனைச் சமாளித்தவளாக ''கோகிலா! செல்வம், அழகு இது இரண்டுமே நிலையானதில்லையம்மா..'' அன்னை கூறி முடிக்கும் முன் ''பிளீஸ் அம்மா, என்னைச் சும்மா விட்டு விடுங்கோ'' எனத் தாய்க்கு ஒரு கும்பிடு போட்டுக் கொண்டே விலகிக் கொண்டாள்.

கோகிலாவுக்கு பட்டப்படிப்புக்கு அனுமதி கிடைத்ததும் புக முடியாமல் வறுமை தடுத்தது. பணத்தில் நீந்தியபோது அண்டிய உறவினர் இப்பொழுது வறுமையைக் கண்டதும் அஞ்சி ஓடினர். இரண்டு மூன்று வருட இடைவெளியில் கோகிலாவும் வறுமைக் கோட்டுக்குள் வாழப்பழகியதுடன் எட்டாப்பழம் புளிக்கும் என்ற நிலைக்கும் வந்து விட்டாள். கோகிலாவின் நற்பலன், பெறுபேறு கிடைத்த சில மாதங்களில் பிரதேச செயலகம் ஒன்றில் கிளார்க் வேலையை ஏற்றுக் கொண்டாள். இதனால் குடும்பம் ஓரளவு வசதியாக வாழ்ந்தது.

கோகிலா உயர் கல்வி கற்ற காலத்தில் ஒன்றாகப் படித்தவன் கௌசிகன் அமைதியான சுபாவம், படிப்பில் உள்ள கெட்டித்தனம், பெரியவர்களைக் கனம் பண்ணும் பண்பு, நண்பர்களிடம் பழகும் விதம் இவையாவும் கௌசிகனின் மேல் கோகிலாவுக்கு ஒரு வித மரியாதையை உண்டுபண்ணியது. கௌசிகனும் கோகிலாவின் வறுமையைக் கண்டு பலவழிகளில் உதவி புரிந்தான்.

இவ்வாறாகத் தொடங்கிய இவர்களது நட்பின் வலிமை காரணமாக கௌசிகனுக்கும் கோகிலா வேலை பார்க்கும் செயலகத்திலேயே கணக்காளராக வேலை கிடைத்தது. நட்பு காதலாக மலரும் என்பார்கள். அதுபோல கோகிலாவின் மனதிலும் நண்பிகள் சிலர் கௌசிகன் மேல் காதல் ஏற்படும் வகையில் கதை பரப்பி விட்டார்கள். கௌசிகனுக்கு கோகிலா மீது அன்பிருந்தாலும் நெருங்காது விலகியே நின்றான். கோகிலா ஒரு காலத்தில் பணத்திலே மிதந்தவள் என்ற எண்ணம் அவனை அவளிடத்திலிருந்து விலக்கியே வைத்திருந்தது.

கோகிலா '' கௌசிகன்! உங்களையும் என்னையும் பற்றித்தான் இந்த அலுவலகத்தில் ஒரே கதை சகலதிலும் பொருத்தமாம். அழகு, அறிவு, குணம்... ஏன் வறுமையில் கூட'' என்று ஆரம்பத்தில் சந்தோஷத்துடன் கூறிய கோகிலாவின் முகத்தில் வறுமையில் கூட என்று சொல்லும் போது ஒருவித மாறுதல் ஏற்பட்டது. இதனை அவதானித்த் கௌசிகன் '' பார்த்தீரே பார்த்தீரே வறுமை பிளஸ் வறுமை சமன் வறுமைதான் ஆர் என்னென்டாலும் சொல்லட்டும் நாங்கள் நண்பர்களாகவே பழகுவம்'' '' சீ..சீ.. நான் வறுமையைப் பெரிசு படுத்த இல்லைக் கௌசிகன்; என்னுடைய பிறண்ட்ஸ் தான்'' என்று சமாளிக்க முயன்றாள்.

கோகிலா மீது கௌசிகன் கொண்டிருந்தது நட்பா, காதலா என்று உணர முடியா நிலையில் அவர்களின் சந்திப்புக்களில் சலனங்கள் படர்ந்தன. அந்தக் காலத்தில் பிரதேச செயலரின் வெற்றிடத்தை நிரப்புவதற்குப் புதிதாக வந்திருந்தான் ரவிக்குமார். கோகிலாவும் அவளது நண்பிகள் யாவருமே எதிர்பார்த்தது நாற்பத்தைந்து வயதுக்கு மேற்பட்ட ஒருவரைத்தான். காரில் வந்திறங்கிய வாட்டசாட்டமான வாலிபனைக் கண்டதும் யாவர் முகத்திலும் ஆச்சரியம். '' குட்மோர்னிங் எவ்றி பொடி'' என்று ரவிக்குமார் வணக்கம் சொல்லிய போது கோகிலாவின் சீற் முன்னே ஒரு செக்கன் நின்றான். இருவர் கண்களும் சந்தித்துக் கொண்டன. கோகிலா தன்னைத் திடப்படுத்திக் கொண்டாள் . வீடு சென்ற பின்னும் ரவிக்குமார் நின்ற விதமும் நேருக்கு நேர் சந்தித்த பார்வையும் மீண்டும் மீண்டும் அவள் நினைவுகளில் வந்து போன வண்ணமே இருந்தது. கண்ணை மூடினால் ரவிக்குமாரே வந்து நின்றான். இதுதான் காதலா? அப்படியாயின் கௌசிகன் மீது செலுத்துவது கேள்விகள் பலவாக அவள் நெஞ்சத்தைத் துளைத்த வண்ணம் இருந்தன. கௌசிகன் மீது அன்பைச் செலுத்துவது நட்புக்காகவா?

திருமதி ஆனந்தராணி நாகேந்திரன்

(20 ஆம் பக்கம் பார்க்க)

# உங்களுக்கு இந்த வாரம் எப்படி.........

## 23.10.2011 முதல் 29.10.2011 வரை

தருபவர் - வித்யா



### மேடம்

ஒன்றுக்கு மேற்பட்ட வழிகளில் செலவுகளைச் சந்திக்கலாம். சோர்வு, சோம்பல் ஆள்கொள்ளும். சிலருடன் வாக்குவாதங்களில் ஈடுபடலாம். எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். முக்கியமான சில வேலைகளை திட்டமிட்டபடி செய்து முடிப்பீர்கள். பெரிய மனிதர்கள் வழியில் உதவி கிடைக்கலாம். ஊக்கம் உற்சாகம் கூடும். தொழில் ரீதியாக வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும், வாய்ப்புகள் உருவாகும். இழுபறியாக இருந்த கடன் பிரச்சினைகளைத் தீர்ப்பீர்கள். வழக்கு விவகாரங்களில் சாதகமான நிலைமை காணப்படும். எதிர்ப்புகள் போட்டிகளை முறியடித்து வெற்றி காண்பீர்கள். பிள்ளைகள் உடல் நலத்திலும் கவனம் அவசியம். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம்.



### இடபம்

சில வேலை நெருக்கடிகளால் அவதிப்படலாம். பெண்கள் வகையில் சிறு உதவிகள் கிடைக்கலாம். சந்தோஷமான அனுபவங்களைப் பெறலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்ற கணிசமான பணத்தைச் செலவு செய்வீர்கள். தற்காலிகமாக பணப்பற்றாக் குறையைச் சந்திக்கலாம். திட்டமிட்ட சில வேலைகளைச் செய்ய முடியாமல் தடை ஏற்படலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். பெண்கள் சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். கடன் பெற மேற்கொண்ட முயற்சிகளில் பலன் கிடைக்கும். பணிபுரிவோர் நிர்வாகத்தினரின் முன்வைத்த கோரிக்கைகள் நிறைவேறும். எந்த விடயத்திலும் உடனுக்குடன் முடிவெடுக்க முடியாமல் அவ்வப்போது குழப்பம், தடுமாற்றத்தைச் சந்திக்கலாம். ஊக்கம், உற்சாகம் கூடும். பணம் வரும். அலைச்சல், திரிச்சல் உண்டு.



### மிதுனம்

சேமிப்புக்கள் கரையும் வகையில் புதிய செலவுகள் உருவாகலாம். குறைந்த செலவில் முடியும் என நினைத்த வேலைகளுக்கு அதிகமாகச் செலவாகும். வீண் அலைச்சல்களால் சோர்வு, சோம்பல் உண்டாகும். கோபம், எரிச்சலை அதிகரிக்கும் வகையிலான சில நிகழ்ச்சிகள் நடக்கலாம். நீங்கள் எதிர்பாராத சிலர் உங்களைத் தேடி வரலாம். புதிய அனுபவங்களைப் பெறலாம். பொறுப்பான வேலைகளாலும், அதிக நேரம் பணிபுரிவதாலும் உடல் அசௌகர்யம், சோர்வு ஆள்கொள்ளும். கொடுக்கல் வாங்கல்களில் கவனம் அவசியம். நீண்ட தூரப் பயணங்கள் செல்லும் வாய்ப்பு கிடைக்கும். பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உழைப்பை சாதகமாகப் பயன்படுத்தி வருமானத்தை அதிகரித்துக் கொள்வீர்கள். மாமன், மைத்துனர்கள், நண்பர்களை நம்பி எந்தக் காரியத்திலும் இறங்க வேண்டாம்.



### கடகம்

பணவரவுகளைப் பெறலாம். ஆசைப்பட்ட பொருள்களை வாங்குவீர்கள். வீட்டுக்குத் தேவையான காரியம் ஒன்றைச் செய்து கொடுப்பீர்கள். செலவுகளையும், அலைச்சல்களையும் சந்திக்கலாம். ஆன்மிக விடயங்களில் நாட்டம் செல்லும். திடீர் வெளியூர்ப் பயணங்கள் செல்லலாம். சந்தோஷம் தரும் அல்லது சங்கடம் தரும் செய்தியை கேட்கலாம். தொழிலில் முன்னேற்றமான நிலைமை காணப்படும். கையில் பணப்புழக்கம் அதிகரிக்கும். சிறிய விடயத்துக்கு எல்லாம் சிடு,சிடுவென கோபம் கொள்ளாமல் பொறுமையாகச் செயற்பட வேண்டும். உடன் பிறப்புக்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்வது நன்மை தரும். பிள்ளைகள் வழியில் கல்விச் செலவுகளோ அல்லது பெரிய அளவிலான வேறு செலவுகளோ உருவாகலாம். மாமன், மைத்துனர்கள் உதவிகரமாக இருப்பர். அவர்கள் மூலம் சில காரியங்களைச் சாதிக்கலாம்.



### சிங்கம்

திட்டமிட்ட காரியங்கள் சரியான நேரத்துக்கு நடக்கலாம். தொழில் ரீதியாக வரவேண்டிய பணவரவுகள் வரலாம். சந்தோஷம் தரும் செய்திகளைக் கேட்கலாம். கடன் மிகுதிகள் வசூலாகும். நீண்ட நாள்களாகச் சந்திக்காத உறவினர்கள், நண்பர்கள் சிலரைப் பார்க்கலாம். யாருக்கும் வாக்குறுதி கொடுப்பதைத் தவிர்க்க வேண்டும். கடன் விவகாரங்களிலும் கவனமாகச் செயற்படுவது நல்லது. உறவுப் பெண்கள், சகோதரிகள் வழியில் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலமாக முடியும். அரசியல்வாதிகள் நினைத்ததைச் சாதிக்கலாம். தந்தை வழியில் உதவி கிடைக்கலாம். செலவு, அலைச்சல், திரிச்சல் உண்டு. காரிய வெற்றி உண்டு. இழுபறியாக இருந்த வேலைகள் முடிவுகள் வரும். தம்பதியர் பாசம் மேலிடும். பணவரவுகளைப் பெறலாம்.தைரியம், தன்னம்பிக்கையுடன் செயற்படுவீர்கள்.



### கன்னி

கலகலப்பான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக நீங்கள் மற்றொருவரிடம் உதவி கேட்கலாம். மருத்துவச் செலவுகளைச் சந்திக்கலாம். மனைவி, குழந்தைகளின் விருப்பங்களை நிறைவேற்றி வைப்பீர்கள். சிரமங்கள் இருந்தாலும், நினைத்த காரியங்கள் முடிவுக்கு வரும். தொழில் ரீதியான விடயங்களில் சிரமங்கள், இடர்பாடுகள் தொடரும். எந்த வேலையையும் நினைத்த வேகத்துக்கு முடிக்க முடியாமல், தடை, தாமதங்களைச் சந்திக்கலாம். ஆதாயமில்லாத அலைச்சல் அதிகரிக்கும். கொடுத்த கடன்கள் திரும்ப வரலாம். பணப் பிரச்சினைகளால் உருவான கவலை குறையும். மாமன், மைத்துனர்கள் கேட்ட உதவிகளை மறுக்காமல் செய்வீர்கள். விவகாரமான பேச்சுக்களைக் குறைக்க வேண்டும். ஆதாயகமான பணவரவுகளை, பொருள் வரவுகளைப் பெறலாம்.



### துலாம்

மறதி, கவனக்குறைவு, தண்டச் செலவு, பயணங்களில் தடை, தாமதங்கள் போன்ற பிரச்சினைகளைச் சந்திக்கலாம். உடல் ரீதியான உபாதைகளால் உற்சாகம் குறையலாம். சில விடயங்கள் குறித்து பெரிய அளவில் மனக் கோட்டை கட்டுவீர்கள். அவ்வப்போது ஏற்படும் செலவுகள் மட்டுமின்றி, புதிது புதிதாகவும் செலவுகள் உருவாவதால், சமாளிக்க கடும் பிரயத்தனம் மேற்கொள்ளலாம். ஓய்வாக இருக்க முடியாத அளவுக்கு ஏதாவது வேலை நெருக்கடிகள் உங்களை விரட்டிக் கொண்டே இருக்கும். சகோ தரர்கள், நண்பர்கள் உதவிகரமாக இருப்பர். மற்றவர்கள் பாராட்டும் வகையில் எந்தக் காரியத்தையும் செய்வீர்கள். பகட்டான ஆடை, ஆபரணங்கள் வாங்குவீர்கள். பணப்புழக்கம் குறையும். எதிர்பார்த்தது நடப்பது தள்ளிப் போகும்.



### விருச்சிகம்

முக்கியமான வேலைகளுக்கான முன்னேற்பாடுக்ளைச் செய்து கொள்ளவும், எதிர்பார்த்த உதவிகள் கிடைப்பதற்கும் எந்த விடயத்திலும் முந்திக் கொண்டு செயற்படுவதைத் தவிர்க்க வேண்டும். வாக்குவாதங்களால் சிலருடன் மனக்கசப்பு உருவாகலாம். ஏதோ ஒரு வழியில் தண்டச் செலவுகளை எதிர்கொள்ளலாம். வெறுப்பு, விரக்தி ஆள்கொள்ளும். அரசு தொடர்பான காரியங்களில் அலைச்சல்கள் நேரும். தொழில் ரீதியாக நீண்ட தூர பயணங்கள் செல்லலாம். பிள்ளைகள் வழியில் கல்விச் செலவுகள் உண்டாகலாம். மருத்துவ காரியங்களும் அலைக்கழிப்புகளை உண்டாக்கலாம். மாற்று மதத்தினர் தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். அடிக்கடி குழப்பம், தடுமாற்றங்களுக்கு ஆள்படலாம். கலகலப்பான அனுபவங்களைச் சந்திக்கலாம்.



### தனுசு

எதிர்பார்த்த அல்லது எதிர்பாராத பணவரவுகளைப் பெறலாம். உறவினர்கள் சந்திப்பால் உற்சாகம் பெறுவீர்கள். அலைச்சல் இன்றி காரியங்கள் கைகூடும். நாள் முழுவதும் பரபரப்பாகச் செயற்படலாம். வேலை நெருக்கடிகள் தொடரும். உறவுப் பெண்கள் உதவிகள் கிடைத்தல் போன்ற நல்ல பலன்களைக் காணலாம். கணவன், மனைவி உறவில் அன்யோன்னியம் அதிகரிக்கும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர்களின் அறிமுகம் கிடைக்கும். தந்தையுடன் ஏற்பட்ட மனஸ்தாபம் அகன்று பாசம் கூடும். விலைமதிப்பு மிக்க பொருள்களை வாங்கலாம். சகோதரர்களால் மன அமைதி பாதிக்கலாம். எதிலும் கவனம், முன்னெச்சரிக்கையுடன் செயற்பட வேண்டும். ஆதாயமில்லாத அலைச்சல் உண்டு.



### மகரம்

பிள்ளைகள் வழியில் செலவு, அலைச்சல்களைச் சந்திக்கலாம். எதிலும் சரியான முடிவுக்கு வர முடியாமல் தவிக்கலாம். நடக்காத சில விடயங்களைப் பற்றி கவலைப்படுவீர்கள். பணவரவுகளைப் பெறலாம். கடன் மிகுதிகளைச் செலுத்துவீர்கள். திட்டமிட்ட காரியங்கள் தங்கு, தடையின்றி நடக்கும். ஒருவரை ஒருவர் குறைசொல்லி அடிக்கடி வாக்குவாதங்களில் ஈடுபடலாம். சகோதரர்கள், நண்பர்கள் தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும். எந்த முடிவை எடுக்கும் முன்னர் பல முறை யோசிப்பீர்கள். உதவிகள் கிடைத்து உற்சாகம் பெறுவீர்கள். பிரியமானவர்களின் சந்திப்பு நிகழும். பணவரவுகளைப் பெறலாம். காரியத்தடை, தண்டச்செலவு நேரும். கோபம், பதற்றம் உருவாகலாம். பக்தி நாட்டம் கூடும்.



### கும்பம்

உங்கள் மூலம் சிலர் காரியம் சாதிக்க நினைப்பர். கடன் மிகுதிகள் வசூலாகும். வெளிவட்டாரத் தொடர்புகள் விரிவடையும். நீண்டதூரப் பயணங்கள் செல்லப் போட்ட திட்டம் நிறைவேறும். எதிர்பாராத செலவுகள் நேரும். முக்கியமான செய்திகளைக் கேட்கலாம். சில விடயங்களை நினைத்து அதிக அளவில் பயம் கொள்வீர்கள். சகோதரர்கள், பங்காளிகள் உதவிகரமாக இருப்பர். சுபகாரிய நிகழ்ச்சிகளில் பங்கேற்கலாம்.எந்தக் காரியமும் திட்டமிட்டபடி நடக்காமல் நினைத்தது ஒன்றாகவும், நடப்பது ஒன்றாகவும் அமையலாம். பெண்கள் வழியில் உதவி கிடைக்கலாம். பணவரவுகளைப் பெறலாம். அலைச்சல் இருந்தாலும், காரியங்கள் விறுவிறுவென முடிவுக்கு வரும். சந்தோஷமான அனுபவம் உண்டு. சந்தோஷமான செய்தியைக் கேட்கலாம். பணவரவு உண்டு.



### மீனம்

பக்குவமாகப் பேசி சிரமம் இல்லாமல் சில வேலைகளை முடிப்பீர்கள். நண்பர்கள் நலனில் அக்கறை காட்டுவீர்கள். புதிய முயற்சிகளில் வெற்றி கிட்டும். ஆதாயமில்லாத அலைச்சல்களால் வெறுப்பு, விரக்தி உருவாகும். சிலர் உங்களின் மனம் நோகும் வகையில் பேசலாம். பிள்ளைகள் வழியில் செலவுகள் உண்டாகலாம். அவர்களின் ஏட்டிக்குப் போட்டியான செயற்பாடுகளால் எரிச்சல் அடையலாம். பண விடயங்களில் பற்றாக்குறை நிலவரமே அதிகரிக்கும். கணவன் அல்லது மனைவி உடல் நிலை தொடர்பான விடயங்களில் கவனம் அவசியம். தொழிலில் திருப்தி இல்லாமல், வேறு தொழிலுக்கு, வேறு இடத்துக்கு மாறி விடலாமா என யோசனை உருவாகும். உடல் உபாதைகளால் உற்சாகம் குறையலாம். பணவரவு உண்டு. உறவினரால் நன்மை அடையலாம்.

# வணிகக் கல்வி



ஆ.ஆர்த்திகா 10ஏ,
யா/ஸ்ரான்லிக் கல்லூரி

மனிதத் தேவைகளையும் விருப்பங்களையும் பூர்த்தி செய்து கொள்ளும் எந்தவொரு செயற்பாடும் வணிகம் ஆகும். நேர் உற்பத்தி, பண்டமாற்று, வியாபாரம், துணை நிலைச்சேவை, கைத்தொழில் புரட்சி, தகவல்தொழில்நுட்பம் போன்றவற்றை வணிகத்தின் வளர்ச்சிப்படி முறைகள் என லாம். பண்டமாற்று முறைக்கு அடிப்படையாக அமைவது மிகை உற்பத்தி ஆகும். வியாபாரத்துக்கு அடிப்படையாக அமைவது பணத்தின் அறிமுகம் ஆகும். அதாவது தாள், உலோக நாணயங்கள் உருவாக்கப்பட்டமை ஆகும். தற்போதைய வணிகம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் காரணமாக இலத்திரனியல் வணிகமாக மாறியுள்ளது.

# பலன் பெற பொறுமை வேண்டும்

ஒரு குரங்கு காட்டுக்குள் இருந்த மாமரத்தில் பழம் பறித்தது. அந்தப் பழத்தைத் தன் இருப்பிடத்துக்கு கொண்டு வந்து, பழத்தைச் சுவைத்துவிட்டு விதையைக் கீழே போட்டது. பின்னர் அதற்கு ஒரு யோசனை தோன்றியது. இந்த விதையை ஊன்றி மரமாக வளரச் செய்தால் நம் இஷ்டத்துக்கு மாம்பழங்களை உண்டு மகி ழலாமே என்று எண்ணியது. கொட்டையை மண்ணுக்குள் புதைத்து வைத்து நீரூற்றியது. எண்ணம் எல்லாம் மாமரத்தை வளர்ப்பதிலேயே இருந்தது. மறுநாள் செடி ஏதும் வரவில்லை. அதற்கோ அவசரம். அந்தமுட்டாள் குரங்கு, மண்ணில் புதைத்த விதையை எடுத்துப் பார்த்தது. விதை பத்திரமாக இருப்பதைப் பார்த்ததும் நிம்மதிப் பெருமூச்சு விட்டு, மீண்டும் புதைத்து வைத்து நீரூற்றியது.

இப்படி தினமும் அதை எடுத்துப்பார்ப்பதும், புதைப்பதும், நீர் ஊற்றுவதுமாக இருந்தது. இப்படிச் செய்தால் என்னாகும்? மா விதை முளை விடவே இல்லை. குரங்குக்கு கோபம் வந்து விட்டது. அதனைத் தூர எறிந்து விட்டு வருத்தப்பட்டது. குரங்கின் ஆசை நியாயமானது என்றாலும் அதன் அவசரம் நியாயமானதல்ல.

காலம் என்ற நியதி இல்லாமல், எந்தச் செயலும் நிறைவேறுவதில்லை. எதிர்பார்த்த விளைச்சல் கிடைக்க வேண்டும் என்றால் விதையை விதைத்து நீரூற்றி, சில காலம் பொறுமை காக்க வேண்டும். அது போல, நம் செயல்கள் வெற்றி பெற வேண்டுமானால் பொறுமை யுடன் கூடிய முயற்சி வேண்டும்.




-சோபனா







வி.லோகினி,
தரம்- 10 'ஏ'
யா/ ஆவரங்கால் நடராஜ
இராமலிங்கம் வித்தி.



ச.திவாகர், தரம்- 2
யா/ ஆவரங்கால் நடராஜ இராமலிங்கம் வித்தி.



ஆர்.சாரங்கன், தரம்- 8 'பி'
யாழ். இந்துக் கல்லூரி.

# பியூஜியாமா மலை




இலங்கையில் உள்ள புனித மலை சிவனொளிபாதம் ஆகும். அது போல யப்பானில் உள்ள புனித மலையாக பியூஜியாமா கருதப்படுகிறது. இது ஜப்பானில் கொன்க தீவில் உள்ள 3776 மீற்றர் உயரமான ஒரு எரிமலை ஆகும். ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கான யாத்திரிகர்கள் இந்த மலையின் உச்சிக்கு ஏறி தங்களின் காணிக்கைகளை இந்த எரிமலை வாயில் இடுகின்றனர். அடிக்கடி ஜப்பானில் புவி நடுக்கத்தை உண்டாக்கும் பாதாள தேவதைகளைத் திருப்பதிப்படுத்துவதற்காக இந்தக் காணிக்கை இடம்பெறுவதாகக் கூறப்படுகிறது.



## விடை தெரியுமா? 130

### உங்களுக்கும் பரிசில்கள்

1. விபுலானந்தர் இயற்றிய சிறந்த நூல் எது?
2. அதிகளவு பூக்கும் மலர்களைக் கொண்ட தாவரம் எது?
3. பீரங்கி மரத்தை கண்டறிந்த தாவரவியலாளர் யார்?
4. உலகின் மிகச் சுதந்திரமான நாடு எது?
5. மூன்றறிவுள்ள உயிரினங்கள் எவை?




### விடைகள் 128

1. வேதவியாசர்
2. வில்லியம் ஹார்வி
3. 5037
4. UNICEF
5. மாக்மிலன்

### வெற்றி பெற்றோர் விவரம்

★ ப.யாழினி, தரம்-8 கே,புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
★ அ. தயாசாகரி , தரம்-8 வி, வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை.
★ ச.ஐஸ்வர்யா , தரம்-8 கே, புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தாக் கல்லூரி.
★ ந.யசோதா , தரம்-10 ஏ, அத்தியார் இந்துக் கல்லூரி.
★ வி.டிலோஸ், தரம்-9 சி, யாழ்ப்பாணக் கல்லூரி.
★ கு.பிரியதக்யா, தரம்-7 சி, மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை.

**விடை தெரியுமா?**
தெரிந்தால் 15.10.2011 இற்கு முன்னர் சரியான விடைகளை அனுப்பும் 6 மாணவர்களுக்குப் பரிசில்கள் வழங்கப்படும். முதல் மூவருக்கும் முறையே ரூபா 150, ரூபா 125 மற்றும் ரூபா 100 வீதமும் ஏனைய மூவருக்கும் தலா ரூபா 75 வீதமும் பரிசில்கள் நூல்களாக வழங்கப்படும்.


# வடக்கின் வருத்தம்?

கையொழுங்கைகளும் தப்பாது ''தார்'' அணைய,
''பீதி'' வழிந்து பெருகிக் கிடந்தன.
உறங்கா விளக்குகளும்,
விடிந்தும் வெளிவராத 'மீசை'க் குழந்தைகளும்,
''ஏழுமணி என்ன நிறம்?'' என்றறியா வீதிகளும்
இப்போதைக்கு மீளவும் 'புதுசு'!
''வெருட்டல் விருத்தித் திட்டத்தின்''
முதற்காலாண்டு ஏறக்குறைய வெற்றி!!
'அடக்குமுறை', 'அழிதுவேஷம்', 'இனக்குரோதம்'
இவற்றின்,
ஒன்றுவிட்ட சோதரர்கள் வந்திருந்தார்!!
முறம் எடுத்துப் புலி விரட்டியவனின்
முன் தசைக் குருதி, 'கேள்வி அறிவித்தல்'
திறந்து விடப்பட்டிருந்த முகவர்கள்- முகாம்களில்?

'சுடி', 'மிடி' வருங்காலம் முன்னரே
சுத்தமாய் கணுக்கால் மறைத்த விறைத்துணியில்,
சுருக்கி மடித்த பின்னலோடு - சுடலைமாடன்களை
''சுளுக்கெடுத்த'' விந்தைப் 'பெண்'ணொருத்தியின்
சித்தப்பா மகளின் நெஞ்சில்,
'கூர்முனை' அலகால் இழித்து விட்டோடியவர்க்கு
''சுக்கிர திசை'' நடப்பதாய்க் கேள்வி
இக்கணம் வரை!!
வந்த 'மனு'வெல்லாம் கிழித்து முறைத்திருப்பாள்
வழி தொடர்ந்த போதெல்லாம் காறி உமிழ்ந்திருப்பாள்
வரை தாண்டும் நாள் ஒன்றில், 'காலணி' கையெடுத்தாள்
குவேனியிடம் கேள்!
குலப் பொறுப்பை ,- இனத் தலைப்பை
பூவையர் தலையில் பூட்டிவிட்டு,
'காத்தலே' காளையர் கடனென்று
வீற்றிருந்த முன்னினமே! - ஏன்
வீழ்ந்தாய் குறுந்துகளாய்?
மிச்சமிருக்கும் ''கலாசாரக் கந்தை''யையும்
'வெற்றிவிழா' விதானத்துக் 'குத்தகை'க்குக்
கேட்போரே!
நாலாம் பசிக்காய், துரத்தும் 'நரி'யிலும்,
நாளையும் வாழ்வதற்காய், ஓடும் 'முயல்'- விரைவு!!
''அவையளையும் விடப்பெரிசாய்!''- அற்பத்துப் பவிசில்
'தேன் கனிச் சோலை'ப் புதரடர்ந்த வெளிகளிலே,
துரத்தும் 'கமெரா' முன், ''துப்பட்டா'' படபடக்க
'வெட்கம்' விலக்கி விரைந்தோடும் அப் புதுமலரின்' தந்தை

வாசலின் ஓரமாய், வாடகை வாகனத்துள்
''நாளை 'அடகு'க்கு நகை எதுவென்று?''
நாடி விழுந்திருக்கையில், அவரிடம் கேளுங்கள்...?'
'உள்ளபடி' சொல்லக் கூடும்!!
''அகர முதல எழுத்தெலாம்'' போல்,
''அன்னை முதல இழக்கெலாம்'' - எனினும்
அதுவும் மெய்!
''தாயிடம் உரைக்கையில் தோள் நிமிராச் செயல் எல்லாம்
தாழ் செயலே இன்னாளில்''!
பிழைத்து அழைத்த எண்ணில்
பெண் குரல் பேசுகையில்,
உழைத்துக் களைத்தொருத்தி பேருந்தில்
தவறியுன் தோளுரசுகையில்,
முளைத்துச் சனம் விளையும்
ஆண்டவன் வீதிகளில்,
''ஓமோன்'' ஊற்றுக்களை ஒட்டமூடு!
''சரசமுகம்'' முனைப்பின்
சவரஞ்செய் கழுத்தோடு!!
எம் ''பண்பாட்டு ஓசோனில் '' ஏற்கனவே
கீறல்கள் போதும்!
கிழிசல்கள் வேண்டாம்!!

அபிதவன்



# கடிதம்

புதுக்கவி.

அன்புள்ள அம்மாவுக்கு
ஏதோ ... இருக்கிறேன்
நீ கவலைப்படாதே
சுகமாகத்தான் இருக்கிறேன்
எனது அறையில்.....
நீளப்பக்கமாக பதின்நாலு கம்பிகள்
அகலப் பக்கம் ஆறு கம்பிகள்
என்னுடன் சேர்ந்து
என்னோடு இருக்கும்...
பன்னிரண்டு பேருக்கும்
இது இன்று - மனப்பாடம்
கசங்கி இற்றுப் போன
ஒரு பேப்பர் துண்டு கிடைத்தால்
எங்கள் எல்லோருக்கும்
மிகப் பெரும் குதூகலம்
உலகப் புதினத்தில்
ஒன்று இரண்டையாவது
அறிந்து கொள்ளுவோம்
காய்ச்சல் வருமென்று
நீ பேசப் பேச
கிணற்று நீர் வற்றும் வரை
அள்ளிக் குளித்த நாள்கள்
நிறையக் குழம்புடன்
நடுத்துண்டு மீன் போட்டு
பொரித்த மீன் துண்டும்
இரண்டு வேண்டும் என்று
ஒற்றைக் காலில் நின்று
அடம்பிடித்த நாள்கள்
எனது உடுப்பையும்
ஏன் தோய்க்கவில்லை என்று
தங்கச்சி மாருடன்
சண்டை போட்ட நாள்கள்
உனக்குத் தெரியாமல்
இன்னும் எத்தனையோ செய்த
மறக்க முடியாத - அந்த நாள்கள்
எல்லாமே இன்று மறந்து போய்விட்டன
ஒரு துண்டுப் பாணும்
உப்பில்லாப் பருப்பும்
அரை அவியல் சோறும்
கழிநீர்த் தண்ணீர் குழம்பும்
பழக்கப்பட்டுவிட்டன
வீட்டில் இருக்கையில்
இரண்டு மெத்தைக் கட்டிலில்
கால் கையை நீட்டி
சுகமாகப் படுத்தவன்
இப்போ- மூன்றடிப் பரப்பில்
முடங்கிக் கிடக்கவும்
பழகிக் கொண்டேன்
நிமிர்ந்து படுக்கவும் முடியாது தான்
முதுகுக் காயங்கள் சீழ் பிடித்திருப்பதால்
ஒவ்வொரு பொழுதும்
விடியும் போது
ஏங்கிக் கொண்டு எழுகிறோம்
எம் விடியலுக்காக
சப்பாத்துக் கால்களின்
தப்பாத லய ஒலி
தூரத்தில் கேட்பதால்
இத்துடன் முடிக்கிறேன்
கடைசியாக ஒன்று....
ஒருவேளை நான்
வராமலே போய்விட்டால்
தங்கச்சிகள் இரண்டையும்
நீ கவனமாய் பார்த்துக் கொள்
கூட இருக்கும் போது
நான் செய்யாத கடமையை
நான் வராவிட்டால்
நீ எனக்காகச் செய் அம்மா.

# கைத்தொ(ல்)லைபேசி காதல்




கைத்தொ(ல்)லை பேசி வழியாக
கைகவசம் வந்தது என் காதல்
ஓர் இலக்கம் மாறி அழைத்ததால்
ஒரு மலராய் மலர்ந்தது என் காதல்
நானும் பேச அவளும் பேச
நமது இதயங்களும் பேசிக் கொண்டன
அன்றிலிருந்து அந்தரத்தில் மிதந்தேன்
அப்போது உணர்ந்தேன்!
நியூட்டனின் விதி பொய்யாகிப் போனதென்று

சுரண்டினேன் கிற்காட்டை
அது சுரண்டியதோ எனது பிற்பாக்கெட்டை
அவளுக்கு அழைப்பு ஏற்படுத்தக் கூட - நான்
பணமில்லாதவன் ஆனேன்
அவளும் உணர்ந்து கொண்டாள்
என்னிடம் பணம் இல்லையென
அப்போது உணர்ந்தேன்!
எந்தன் பணம் நாசமாகிப் போனதென்று

முப்பது ரூபாய் கடன் பெற்றேன்
டயலொக்கிடம்
அழைப்பு ஏற்படுத்தினேன் - என்
காதலியிடம்
அப்போது ஒரு குரல்!
" நீங்கள் அழைத்த இலக்கமானது
இடைநிறுத்தப்பட்டுள்ளது" என்றது
அப்போது உணர்ந்தேன்!
எந்தன் காதலும் இடை நிறுத்தப்பட்டுள்ளது
என்று.

கீ.பு. கரிலிராஜ்;
யாழ்ப்பாணம்.



# சீதன இருளதனை நீக்குதற்கு!

பட்டப் படிப்பும் பதவியொடு பேரழகும்
மட்டான காணியிலே மாடிவீடும் மாருதியும்
பட்டியல் காட்டும் பணமும் பெற்றிருப்பின்
கட்டாயம் கன்னியவள் கல்யாணம் கைகூடும்

தொட்டுத் தாலிகட்ட தட்டு நிறை நோட்டுகளை
கட்டுக் கட்டாய் காட்டுகின்றார் காசிருப்போர்
வட்டியின்றி வருவதனை வரவேற்று வாலிபன்
கட்டுகிறான் தாலிதனை கன்னியவள் கழுத்தினிலே

தடுப்பதற்குச் சீதனத் தடைகள் பல வந்தாலும்
கொடுப்பதற்கு ஆளிருந்தால் எடுப்பதற்கும் ஆளிருக்கும்
உடுபதியாய் சீதன இருளதனை நீக்குதற்கு
எடுத்திடுவீர் பெற்றோரே ஏற்ற நல்ல நடவடிக்கை

அடுக்காக நற்குணங்கள் எத்தனைதான் இருந்தாலும்
கொடுத்தால் இலட்சங்கள் கைகூடும் திருமணங்கள்
தடுக்கும் திருமணத் தடைக்கல்லை எடுத்திட்டால்
துடுப்பொடு மகளிரை கண்டிடலாம் மணவறையில்



குளப்பிட்டி க. அருமைநாயகம்.

# பொங்கி வெடிக்கும் உட்கட்சிப் பூசல்கள்

ஞாயிறு காரம்

சந்திரசேகர ஆசாத்

முரண்பாடுகள் சர்வ வியாபகமானவை. நல்லதற்கும் கெட்டதற்குமான முரண்பாடு, பழையனவற்றுக்கும் புதியனவற்றுக்குமான முரண்பாடு, வளரும் அம்சங்களுக்கும் தேயும் அம்சங்களுக்குமான முரண்பாடு, அடக்குமுறைக்கும், அடக்குமுறைக்கு எதிரானதற்குமான முரண்பாடு எனப் பல்வேறு இடங்களிலும் பல்வேறு வடிவங்களிலும் முரண்பாடுகள் விரவி நிற்கின்றன.

எந்த ஒரு பொருளும் எந்த ஓர் அம்சமும் எந்த ஒரு நடவடிக்கையும் எந்த ஓர் அமைப்பும்கூட இந்தப் பொது விதிக்கு உட்பட்டே இருக்கும். ஒரு தனிமனிதன், ஒரு தனி இனம், ஒரு தனி நாடு என்பனகூட ஏனைய மனிதர்கள், இனங்கள், நாடுகள் என்பனவற்றுடன் முரண்பாடுகளைக் கொண்டிருப்பதுடன் தமக்குள்ளேகூட உள் முரண்பாடுகளால் நிறைக்கப்பட்டிருக்கும்.

### முர்ண்பாடுகளின் வளர்ச்சி

எப்படியிருப்பினும் குறிப்பிட்ட ஒரு சந்தர்ப்பத்தில் ஒன்று பிரதான முரண்பாடாகவும் ஏனையவை உப முரண்பாடுகளாகவும் விளங்குகின்றன. பிரதான முரண்பாடு தீர்க்கப்படும்போது அடுத்த உப முரண்பாடு பிரதான முரண்பாடு என்ற நிலையை எட்டுகிறது.

ஓர் அம்சத்தின் பிரதான முரண்பாடுகளின் மோதலே வளர்ச்சியாகிறது. இந்த மோதல்கள் முற்றி வெடிக்கும்போது மாற்றங்கள் உருவாகின்றன. சரியான அம்சத்துக்கும் பிழையான அம்சத்துக்கும் இடையேயான மோதலில் சரியான அம்சம் மேலெழுந்தால் வளர்ச்சியை நோக்கி நகர்கிறது. பிழையான அம்சம் மேலெழுந்தால் அழிவை நோக்கி வளர்கிறது. எப்படியிருப்பினும் முரண்பாடுகளின் மோதல் முற்றி வெடிக்கும் போது மாற்றம் தவிர்க்க முடியாததாகி விடுகிறது.

### மாற்றம் நிச்சயம்

இந்த மாற்றங்கள் எதுவும் ஒரு நாளிலோ அல்லது ஒரு கணத்திலோ நிகழ்ந்து விடுவதில்லை. முரண்பாடுகளின் மோதல்கள் படிப்படியான மாற்றங்களை உருவாக்குகின்றன. இவை அளவு மாற்றங்கள் எனப்படும். இவை பெரிதாக வெளிப்படுவதில்லை. ஆனால் இந்த முரண்பாடுகளின் மோதல் வளர்ச்சியடைந்து உச்சக்கட்டத்தை எட்டும் போது முற்றி வெடிக்கிறது. அது ஒரு பெரிய மாற்றத்தை, இயல்பு மாற்றத்தை ஏற்படுத்துகிறது.

இந்த வகையில் முரண்பாடுகளும் முரண்பாடுகளுக்குமிடையான மோதல்களும் அவற்றின் வளர்ச்சியும் அதனால் ஏற்படும் மாற்றங்களும் என்ற பொது விதிக்கு அரசியல் கட்சிகளும் ஏன் விடுதலை இயக்கங்கள் கூட உட்பட்டே உள்ளன. ஏனெனில் இது இயற்கையின் தவிர்க்க முடியாத விதி.

### இலங்கையில் முரண்பாடு

உதாரணமாக 1948 இல் இலங்கை சுதந்திரம் பெற்றபோது பிரதான முரண்பாடு ஐக்கிய தேசியக் கட்சிக்கும் லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியவற்றுக்குமிடையே அமைந் திருந்தது. 1952இல் சிங்கள தேசிய வாதிகள் எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டார நாயக்கா தலைமையில் திரண்டு எழுந்தபோது பிரதான முரண்பாட்டின் மையம் ஐ.தே.கட்சிக்கும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் இடையே என மாற்றமடைந்தது. ஐ.தே. கட்சிக்கும் இடதுசாரிகளுக்குமிடையேயான முரண்பாடு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்பட்டது. இடதுசாரிகள் மெல்ல மெல்ல ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குள் கரைந்து போகும் நிலை தோன்றியது.

இப்படியான நிலையில் இடதுசாரிகள் மத்தியில் இருந்த தேயும் அம் சத்துக்கும் வளரும் அம்சத்துக்குமான முரண்பாடு முற்றி வெடிக்கவே ஜே.வி.பி. உருவானது.

இதுபோலவே தமிழ் மக்கள் தரப்பிலும் நிலவிய பல்வேறு முரண்பாடுகளும் மோதல்களும் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தி ஆயுதப் போராட்டம் வரை விரிவடைந்தன.

இப்படியான ஒரு பார்வையிலேயே இன்று இலங்கையில் அரசியல் கட்சிகள் மத்தியில் நிலவி வந்த உட்பூசல்கள் முற்றி வெடிக்கும் நிலைக்கு வந்து விட்டமையும் அதைத் தடுக்கும் முயற்சிகளும் இடம்பெறுவதை நாம் நோக்க வேண்டியுள்ளது.

### உட்கட்சி முரண்பாடு

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு, ஜே.வி.பி. ஆகிய முக்கிய கட்சிகளுக்கிடையேயான உட்பூசல்கள் வலுத்து வருவதுடன் எந்த நேரமும் பிளவுகள் ஏற்படலாம் என்ற நிலையும் தோன்றியுள்ளது.

ஏற்கனவே ஐ.தே.கட்சி, ஜே.வி.பி, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகியன பிளவுபட்டு ஒரு பகுதியினர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பில் இணைந்து விட்டனர். ஏன் இப்படியான ஒரு நிலைமை தோன்றியது என்பதுதான் இப்போது கேள்வியாக எழுகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியே இலங்கையின் மூத்த அரசியல் கட்சி. சிங்களவர், தமிழர், முஸ்லிம்கள் என அனைத்து மக்களையும் கொண்ட இலங்கைத் தேசிய காங்கிரஸ் என்ற முதல் இலங்கையரின் அமைப்பிலிருந்து உருவானது அது. சேர்.பொன். அருணாசலம், சேர். பொன். இராமநாதன் ஆகிய தமிழ் தலைவர்கள் இலங் கைத் தேசிய காங்கிரஸை விட்டு வெளியேறிய பின்பு உருவாக்கப்பட்ட ஐக்கிய தேசியக் கட்சியில் மூவினத்தவரும் அங்கம் வகித்தனர்.

### ஐ.தே.க. வரலாறு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமை கண்டிச் சிங்களவர் வசம் இருந்த நிலையில் கண்டிச் சிங்களவர்களுக்கும் கரையோரச் சிங்களவர்களுக்குமான உள் முரண்பாடு நிலவியே வந்தது. எனினும் இது ஒரு பகை முரண்பாடாக இல்லாமல் ஒரு நட்பு முரண்பாடாகவே விளங்கியது. இந்த முரண்பாடு மெல்ல மெல்ல வளர்ச்சியடைந்து டட்லி சேனநாயக்காவின் இறப்பின் தலைமையை ஜே.ஆர். ஜெயவர்த்தனா கைப்பற்றும் நிலைமை உருவாகியது. இதன் பின்பு ஐ.தே.கட்சிக்குள் கண்டிச் சிங்களவரின் ஆதிக்கம் மங்கி மறைந்து போனது. இந்த முரண்பாடு அழிந்து போக மேற்குலக நேசரான ஜே.ஆர். ஜெயவர்த்தனாவுக்கும் தேசிய நலன் விரும்பியான பிரேமதாஸாவுக் குமான முரண்பாடாக வடிவெடுத்தது. ஜே.ஆர். ஜெயவர்த்தனாவின் பதவிக் காலம் முடிவடைய பிரேமதாஸா அதிகாரத் துக்கு வந்தார். அதன் பின்பு முரண்பாடு ரணில் விக்கிரமசிங்க, பிரேமதாஸாவுக்கு இடையிலானதாக மாற்றமடைந்தது. பிரேமதாஸாவின் இறப்பின் பின் ரணில் அதிகாரத்தைக் கைப்பற்றிய பின்பு பிரேமதாஸாவின் ஆதரவாளர்கள் சிறிசேன குரே உட்படப் பலர் புறமொதுக்கப்பட்டனர்.

இன்று, ரணில் ஆதரவாளர் களுக்கும் பிரேமதாஸா ஆதரவாளர் களுக்குமான முரண்பாடு முனைப் படைந்து வருகிறது.

அடிப்படையில் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் ஐ.தே. கட்சிக்கும் அரசகட்சி யான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்குமான முரண்பாடே கூர்மையடையவேண்டும்.

> கட்சிகளுக்கிடையேயுள்ள முரண்பாடு குடும்ப ஆதிக்கத்துக்கும் ஏனையோருக்குமிடையான முரண்பாடு, ராஜபக்ஷ சகோதரர்களிடையேயுள்ள உள் முரண்பாடு, ஜனநாயக சக்திகளுக்கும் வன்முறையாளர்களுக்குமிடையேயான முரண்பாடு எனப் பல்வேறு முரண்பாடுகளால் நிரம்பி வழிகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதன் ஒரு வெளிப்பாடுதான் முல்லேரியாவில் இடம்பெற்ற கொலைகளும் அதன் எதிரொலிகளும்.

### விட்ட தவறு

ஆனால் ஐ.தே.கட்சி அரசுக்கு எதிரான போராட்டங்களைத் தீவிரமாக முன்னெடுக்கத் தவறிவிட்டது. தெளிவான கொள்கைகளுடனும் குறிப்பிட்ட இலக்குட னும் திட்டமிட்டுத் தொடர் போராட்டங்கள் நடத்தப்படவில்லை. ஐ.தே. கட்சிக்கும் அரசுக்குமான முரண்பாடு மழுங்கடிக்கப்படும்போது இரண்டாவது முரண்பாடான உட்கட்சி முரண்பாடு முனைப்படைந்து வருகிறது. இந்த நிலைமையைச் சரியாகக் கணக்கெடுத்த தந்திரசாலியான மஹிந்த ராஜபக்ஷ அமைச்சர் பதவிகளை அள்ளிக் கொடுத்து உடைப்பு வேலையைக் கனகச்சிதமாக நிறைவேற்றி வருகிறார்.

முரண்பாட்டின் பிரதான மையத்தை ஐ.தே.கட்சிக்கும் அரசுக்குமானதாக மாற்றாது விட்டால் மேலும் ஐ.தே.கட்சி பிளவுபடுவது தவிர்க்க முடியாததாகும்.

ஜே.வி.பி. நாடாளுமன்றத் தேர்தல்களில் பெரும் வெற்றியை எட்ட முடியாவிட்டாலும் மக்கள் மத்தியில் ஸ்திரமான பலம் கொண்ட ஒரு அமைப்பாகும். இது சந்திரிகா ஆட்சியில் பங்கு கொண்டதன் மூலம் மேற் மட்டத்துக்கும் கீழ் மட்டத்துக்குமான முரண்பாடு கூர்மையடையத் தொடங்கியது. ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் கொள்கைகளை அமுல்படுத்தும் நிலைக்கு அமைச்சர்கள் மாற மேலும் முரண்பாடு வலுவெடுத்தது. கட்சிக்குள் அதிகார பீடம் உருவாகியது. மீண்டும் கூட்டை உடைத்து ஜே.வி.பி. வெளியேறிய போது அதிகாரத்தைச் சுவைத்த விமல் வீரவன்ச போன்றோரால் அதை ஜீரணிக்க முடியவில்லை. அவர்கள் ஜே.வி.பியை உடைத்து அரசுடன் இணைந்து கொண்டனர். பின்பு சரத் பொன்சேகாவுடன் இணைந்தமை உள் முரண்பாட்டை வேறு ஒரு வடிவத்துக்குத் தள்ளியது. இன்று மீண்டும் ஒரு பிரிவு நிலையை எதிர்நோக்க வேண்டிய நிலை எழுந்தது.

### தவிர்க்க முடியா முரண்பாடுகள்

ஒரு புரட்சிகர அமைப்பு அதிகாரத்துக்கு வரும்போது கொள்கைகள், நடைமுறைகளில் ஏற்படுத்தும் மாற் றங்கள் இப்படியான முரண்பாடுகளைத் தோற்றுவிப்பது தவிர்க்க முடியாது. தலைமை தமக்கும் எதிரிகளுக்கும் உள்ள முரண்பாடுகளையும் தம்மி டையே எழும் முரண்பாடுகளையும் புத்திசாலித்தனமாகக் கையாள்வதன் மூலம் மட்டுமே இத்தகைய பிளவு களைத் தவிர்க்க முடியும். ஆனால் இப் போது ஜே.வி.பி.யைப் பொறுத்தவரை அது காலங்கடந்து விட்ட நிலைமை போலவே தோன்றுகிறது.

### மு.காவின் முடிவு

முஸ்லிம் காங்கிரஸ் ஏற்கனவே பிளவுபட்டு இரு பகுதியினர் அரசுடன் சங்கமமாகி விட்டனர். அடுத்து இடம்பெறவிருந்த விரிந்த பிளவை ஒட்டுமொத்தமாகவே அரசுடன் சேர்வதன் மூலம் ரவூப் ஹக்கீம் தடுத்து விட்டார்.

இதேவேளை, ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஓர் ஒட்டுமொத்தமான கதம்பம். இன சமத்துவம் பேசும் இடதுசாரிகளும் இனவெறி அரசியல் நடத்தும் ஜாதிகஹெல உறுமய, விமல் வீரவன்ச போன்ற எதிரெதிர் சக்திகள் இதில் அங்கம் வகிக்கின்றன. அதே போன்று ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியிலும் தேசிய வாதிகளுக்கும் மேற்குலகத்தவர்களுக்குமிடையே முரண்பாடு உண்டு.

கட்சிகளுக்கிடையேயுள்ள முரண்பாடு, குடும்ப ஆதிக்கத்துக்கும் ஏனையோருக்குமிடையான முரண்பாடு, ராஜபக்ஷ சகோதரர்களுக்கிடையேயுள்ள உள் முரண்பாடு, ஜனநாயக சக்திகளுக்கும் வன்முறையாளர்களுக்கும் இடையேயான முரண்பாடு எனப் பல்வேறு முரண்பாடுகளால் நிரம்பி வழிகிறது. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அதன் ஒரு வெளிப்பாடுதான் முல்லேரியாவில் இடம்பெற்ற கொலைகளும் அதன் எதிரொலிகளும்.

### மஹிந்தவின் சக்தி

ஆனால், எதிர்க்கட்சிகளுக்கு எதிரான ஒடுக்குமுறை, தமிழ் மக்களுக்கு எதிரான ஒடுக்குமுறை என்ற பொதுக் கொள்கையின் அடிப்படையிலும் சர்வாதிகாரம், மிரட்டல், பதவி போன்ற ஆயுதங்களாலும் மஹிந்த ராஜபக்ஷ இம்முரண்பட்ட சக்திகளைக் கட்டி வைத்துள்ளார். ஆனால், முரண்பாடுகள் முற்றி வெடிப்பதற்கான பல்வேறு அறிகுறிகள் தென்பட ஆரம்பித்துள்ளன. இலங்கை அரசுக்கு சர்வதேச அளவில் எழுந்துள்ள நெருக்கடிகள் உள்முரண் பாடுகளையும் வலுவடையச் செய்யும் என்பதில் சந்தேகமில்லை.

### கூட்டமைப்பின் தேவை

தமிழ் தேசி யக் கூட்டமைப்பு என்பது தமிழரசுக் கட்சி, ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எப். தமிழர் விடுதலைக் கூட்டணி, புளொட் ஆகியவற்றைச் சேர்ந்த ஒரு கூட்டணி. இவற்றில் ஒவ்வொரு அமைப்புக்கும் தனித் தனி கொள்கைகள் இருந்தபோதும் தமிழ் மக்களின் உரிமைப் போராட்டம் என்ற பொதுக் கொள்கையில் ஒன்றிணைந்துள்ளன. எனவே உள் முரண்பாடுகள் இருப்பது தவிர்க்க் முடியாததே. ஆனால் இவை நட்பு ரீதியான முரண்பாடுகள் என்ற வகையில் ஐக்கியத்தை அடிப்படையாகக் கொண்டு கையாளப்படவேண்டும். சர்வாதிகாரப் போக்குகளோ ஒரு தலைப்பட்ச நடவடிக்கைகளோ இந்தக் கூட்டமைப்பைப் பலவீனப்படுத்திவிடும் என்பதில் நாம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும்.

எனவே எமக்கும் எதிரிக்குமிடையிலான முரண்பாடுகள், பகை முரண்பாடுகள். அவை எதிரெதிர் நிலையில் நின்றே தீர்க்கப்படவேண்டும். எமக்குள்ளே உள்ள முரண்பாடுகள் நட்பு முரண்பாடுகள் அவை ஐக்கியத்தின் அடிப்படையில் அணுகித் தீர்க்கப்பட வேண்டும். தென்னிலங்கையில் உட்கட்சிப் பூசல்கள் பொங்கி வெடிக்கின்றன. இந்த நிலையில் எமது ஐக்கியம் எமக்கு மேலும் சாதகமான வாய்ப்புக்களை வழங்கும் என்பதை நாம் நம்பிக்கையுடன் எதிர்பார்க்கலாம். ★

# நாட்டின் மிகப் பெரிய தன்னியக்கக் குத்தகை வலையமைப்புக்குள் நுழையும் இலங்கை வங்கி

இலங்கையில் அரசாங்கத்துக்குச் சொந்தமான மிகப்பெரிய வங்கியாகிய இலங்கை வங்கி இன்று அதன் நேரடி குத்தகை அமைப்புடன் பிரவேசிக்கின்றது. வங்கியின் தொகுதி முகாமைத்துவ மூலோபாயத்தின் ஒரு பகுதியாக வங்கி அதன் முன்வரிசை மற்றும் பின் வரிசை வாடிக்கையாளர் சேவையை ICT நெறிப்படுத்தல்கள் ஊடாக திறமையாகவும் துரிதமாகவும் அதன் வாடிக்கையாளருக்கு வழங்குவதற்கு மீள் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.

அத்தகைய பல்வேறு பூர்வாங்க வேலைகளுக்கிடையே புதிய குத்தகை முகாமைத்துவ தீர்வு இலங்கையில் பிரதான குத்தகை மென்பொருள் தீர்வுகள் வழங்குநர் திறந்த வட்டத்திலிருந்து ''ஸ்கைலீஸ்'' அமைப்பை இலங்கை வங்கித் தலைவர் கலாநிதி காமினி விக்ரமசிங்ஹவின் ஆதரவின் கீழ் வைபவ ரீதியாக ஆரம்பித்து வைத்தது. இத்துடன் முழுவதும் தன்னியக்கச் செய்முறை வேலைக்கு இணைக்கப்பட்ட நேரடித் தொடர்புள்ள 300 இற்கு மேற்பட்ட கிளைகள் நாட்டில் மிகப் பெரிய நேரடித் தொடர்பு குத்தகை வலையமைப்புக்குள்ளாகுவதற்கு உரிமை பெறுகின்றது.

புதிய மென்பொருள் தீர்வு வங்கியின் தற்போதைய வியாபாரச் செய்முறைக்கு சிறந்த சேவைகளை வழங்குவது மட்டுமன்றி அதன் எதிர்கால வளர்ச்சித் திட்டங்களை அடைவதற்கு ஒரு உண்மையான வியாபார பங்குதாரராக வங்கியை நிலைப்படுத்துவதற்கு சக்தியை வழங்குகின்றது. ''ஸ்கைலீஸ்'' ஆனது சந்தையில் ஒழுங்கான வியாபார செய்முறைகளையும் கட்டுப்பாடுகளையும் ஸ்தாபித்து துரிதமானதொரு விஸ்தரித்தலில் நேரடிச் சந்தைப்படுத்தலை அடிப்படையாகக் கொண்ட இணையத்துடன் சந்தை நிலையத்தில் வங்கியை தொடர்வதற்கு முடியுமாகும் விதத்தில் இலங்கை வங்கியானது ஒப்பற்ற போட்டிகர அனுகூலங்களை வழங்கும்.

புதிய அமைப்பானது குத்தகைச் செய்முறை வாழ்க்கைக் கூற்றின் ஒவ்வொரு கட்டம் மீதான பரிசீலனைகளையும் சீராக்கல்களையும் மேம்படுத்தி உண்மையிலேயே முற்றிலும் செய்முறை நேரத்தை குறைத்து முழுவதும் தன்னியக்கப்படுத்திய கடன் அங்கீகாரம் பணம் மீளளிப்புச் செய்முறை சிறந்த கணக்காய்வுப் பின்பற்றல்கள் ஆகியவற்றுடன் தரவு ஒதுக்க சுயாதீன மென்பொருள் தீர்வு மற்றும் செய்முறை வடிவமைப்பு முறை, பகுப்பாய்வுத் தகவல் வலு ஆகியவற்றுடன் 100% இணைய அடிப்படையைக் கொண்டுள்ளது.

இதன் பின்பு கணினி மயப்படுத்தாத முறை (மெனுவல் முறை) மூலம் மேற்கொள்ளும் அங்கீகாரம் காணப்படமாட்டாது. வாடிக்கையாளர் பதிவு தொடக்கம் கடிதம் வழங்கல் மற்றும் பணம் மீளளிப்பு வரையான சகலதும் தன்னியக்கப்படுத்தியுள்ளதுடன் உள்ளக மெனுவல் ஆவணப்படுத்தல் இலவசமாக மேற்கொள்ளப்படும். பல திறமைகளைக் கொண்டுள்ள அமைப்பானது வாடிக்கையாளர்கள் வசதியாகக் கையாளக் கூடிய மத்திய இடமொன்றில் மையப்படுத்தப்பட்ட சேகரிப்பு அலகு அமைக்கப்பட்டுள்ளது. இது வியாபாரத் தொடர்புகளையும் சம்பந்தப்பட்ட செயல் நிறைவேற்றங்களையும் கண்காணிக்கக்கூடிய இணையம் மற்றும் அழைப்பு நிலைய விநியோக அலைவரிசைகளுடன் சகல செயல்முறைகளையும் எளிதாக்கும் சிறந்ததொரு அமைப்பாகும். என விற்பனைகள் மற்றும் நெறிப்படுத்தல் முகாமைத்துவ பிரதிப் பொது முகாமையாளர் திரு.எச்.எம் முதியான்சே குறிப்பிட்டார். (த)

## பூநகரியில் 35 பயனாளிகளுக்கு இலங்கை வங்கியின் கடனுதவி

தென்மராட்சி, ஒக்.23

இலங்கை வங்கி பூநகரி விரிவாக்கற் கிளை திறப்பு விழாவின் போது அந்தப் பகுதியைச் சேர்ந்த 35 பயனாளிகளுக்கு பல்வேறு கடன்கள் வழங்கப்பட்டன. கடற்றொழில், நெற்செய்கை, வீடமைப்பு போன்றவற்றுக்கு கடன்கள் வழங்கப்பட்டதாகவும் இவர்களில் 10 பயனாளிகள் மீன்பிடித் தொழிலில் ஈடு பட படகுகள் கையளிக்கப்பட்டதாகவும் இலங்கை வங்கியின் சாவகச்சேரி கிளை முகாமையாளர் கோ.சேது காவலர் தெரிவித்தார். பூநகரி விரிவாக்கற் கிளை திறப்பு விழாவில் வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி, பிராந்திய முகாமையாளர் கே.மாணிக்க்சிங்கி, முன்னாள் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் தி.இராசநாயகம் உட்பட பலர் கலந்துகொண்டதாகவும் தெரிவித்தார். (த-207)




எல்.பி. பினான்ஸ் நிறுவனத்தின் யாழ். கிளையின் முதலாம் ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு இடம்பெற்ற நிகழ்வில் புதுமுறிப்பு, கிளிநொச்சியைச் சேர்ந்த அனுசியன் குணாலிசாவுக்கு சைக்கிள் ஒன்றை பிராந்திய முகாமையாளர் எஸ்.தவசீலன் வழங்குகிறார். அருகில் எல்.பி. பினான்ஸ் பணியாளர்கள்.

# சீ.ஐ.எப்.எல்.நிறுவனத்தின் நுண்கடன் திட்டம் அறிமுகம்

யாழ்ப்பாணம், ஒக்.23

யாழ். மாவட்டத்தில் சுயதொழில் முயற்சியாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் சென்றல் இன்வெஸ்மன்ட் அன்ட் பினான்ஸ் பி.எல்.சி (CIFL) நிறுவனத்தின் மைக்றோ பினான்ஸ் பிரிவினால் நுண்கடன் வழங்கும் செயற்றிட்டம் ஆரம்பிக்கப்பட உள்ளது.

இந்தச் செயற்றிட்டத்தின் முதல்கட்டமாக கொட்டடி, வேலணை ஆகிய பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுயதொழில் முற்சியாளர்களுக்கு 25000 ரூபாவைக் கடனாக வழங்கும் நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை நடைபெற உள்ளது.

கொழும்பைத் தலைமைக் காரியாலயமாகக் கொண்ட இந்த நிதி நிறுவனத்தின் நுண்கடன் பிரிவுக்குப் பொறுப்பான அதிகாரிகள் நேரடியாக யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்து கடன் தொகையை உரிய பயனாளிகளிடம் வழங்க உள்ளனர்.

யாழ். மாவட்டம் மட்டும் அல்லாது கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்தும் சுயதொழில் முயற்சியாளர்கள் தெரிவு செய்யப்பட்டு கடன் உதவிகள் வழங்கப்படவுள்ளன.

தாமாக சுயதொழில் களை மேற்கொண்டு வரும் முயற்சியாளர்கள் மேலும் தமது சுயதொழிலை மேம்படுத்த விரும்பின் யாழ். மாவட்டத்தின் நுண்கடன் பிரிவுக்குப் பொறுப்பாக உள்ள எஸ்.கஜமுகனுடன் தொடர்புகொண்டு மேலதிக விவரங்களைப் பெற்று சுயதொழில் கடனைப் பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட் டுள்ளது.

(த-313)

# 'மினிட் மெய்ட் அப்பிள்' சுவை பானத்தை அறிமுகப்படுத்தியுள்ள கொக்கா-கோலா

கொக்கா-கோலா இலங்கையால் அறிமுகப்படுத் தப்பட்ட மினிட் மெய்ட் ஓரஞ்ச் மற்றும் மினிட் மெய்ட் மங்கோ சுவையூட்டப்பட்ட பானங்களின் வெற்றிகரமான நுகர்வோர் வரவேற்பைத் தொடர்ந்து புதிய அப்பிள் சுவை பானத்தை மினிட் மெய்ட் அடையாளச் சின்னத்தின் கீழ். கொக்கா-கோலா அறிமுகப்படுத்தியது. இலங்கையில் உள்ள சுவை விரும்பிகளின் தெரிவு களை நிறைவேற்றி வைக்கும் பொருட்டு கொக்கா-கோலா நிறுவனத்தினால் இந்த புதிய பானம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. தமது நுகர் வோருக்கு அளவற்ற சுவை அனுபவத்தை வழங்கி வரும் நிறுவனம் மினிட் மெய்ட் அப்பிள் சுவையூட்டப்பட்ட பானத்தை 'வாழ்க்கைக்கான சுவை-' என்ற தொனிப் பொருளுடன் சந்தைக்கு வெளிக் கொண்டு வந்துள்ளது.

200 மி.லீ.கொள்ளளவு கொண்ட திரும்பி வழங்க வேண்டிய கண்ணாடிப் போத்தல்களில் அடைக்கப்பட்டு நாடெங்கிலும் உள்ள கடைகளில் கிடைக்கக்கூடியதாக உள்ள மினிட் மெய்ட் அப்பிள் ரூ.40 க்கு விற்பனை செய்யப்படுகின்றது. மினிட் மெய்ட் ஓரஞ்ச் மற்றும் மினிட் மெய்ட் மெங்கோ போன்ற சுவை பானங்களின் பின்னர் புதிதாக அறிமுகப்படுத் தப்பட்டுள்ள மினிட் மெய்ட் அப்பிள் அனத்து வகைப்பிரிவினரையும் சேர்ந்த நுகர்வோர்க ளின் சுவைத் தெரிவை இலக்கு வைத்துள்ளது. ஏனைய மினிட் மெய்ட் உற்பத்திகளைப் போன்றே மினிட் மெய்ட் அப்பிள் சுவையூட்டப்பட்ட பானமும் தெரிவு செய்யப்பட்ட பழங்கள், சுவை என்பவற்றுடன் அன்பு, அரவணைப்பு வழங்கக் கூடியதாக இலங்கை நுகர்வோர்களுக்காக விசேடமாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. மினிட் மெய்ட் அப்பிள் சுவையூட்டப்பட்ட பானத்தின் அறிமுகத்துக்கு , தொலைக்காட்சி வர்த்தகம், வானொலி மற்றும் அச்சு விளம்பரங்கள் , ஊடகத்துக்கு வெளியேயான மற்றும் மொத்த விளம்பரங்கள் உள்ளடங்கலாக தொடர்ச்சியான நுகர்வோர்தொடர்பாடல் நிகழ்ச்சிகளின் ஊடாக ஆதரவு வழங்கப்படுகின்றது.

அறிமுக நிகழ்வில் கலந்து கொண்ட கொக்கோ - கோலா பெவரேஜஸ் ஸ்ரீலங்கா லிமிட்டடின் வதிவிட முகாமையாளர் பெட்ரிக் பெக் ' எமது வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் சிறந்த தரமான உற்பத்திகளை வழங்குவதனை உறுதி செய்வதற்கு நாம்தொடர்ந்தும் அர்ப்பணிப்புடன்செயற்பட்டு வருகின்றோம். மினிட் மெய்ட் ஓரஞ்ச் மற்றும்மெங்கோ குளிர்பானத் தெரிவுகளைக் கொண்ட வாடிக்கையாளர்களுக்குத் தெரிவுக்கான சந்தர்ப்பத்தை வழங்குவதற்கு இன்று அப்பிள் சுவையூட்டப்பட்ட மினிட் மெய்ட் பானத்தை அறிமுகப் படுத்தப்படும் மினிட் மெய்ட் அப்பிள் பானமானது நிறுவனத்தின் செயற்பாடுகளுக்கு ஒரு மைல்கல்லாக அமைவதோடு எங்களுடைய குளிர்பான வர்த்தகத்தின் அர்ப்பணிப்பையும் உறுதி செய்துள்ளது' எனக் குறிப்பிட்டார்.



இலங்கை வங்கியின் பூநகரி விரிவாக்கற் கிளைக் கட்டடத்தை வடமாகாண உதவிப் பொது முகாமையாளர் கே.ஈ.டி.சுமணசிறி திறந்து வைக்கிறார். அருகில் கிளிநொச்சி மாவட்ட முன்னாள் அரச அதிபரும், வடக்கு மாகாண பிரதிப் பிரதம செயலாளருமான தி.இராசநாயகம் மற்றும் விருந்தினர்கள் உள்ளனர். (த-207)



'சொப்ற்லொஜிக்' காட்சி அறை நேற்று முன்தினம் யாழ்.கன்னாதிட்டி வீதியில் திறந்து வைக்கப்பட்டது. நிறுவனத்தின் பொது முகாமையாளர் டினேஷ் தர்மரட்ண நாடாவைவெட்டிக் காட்சியறையைத் திறந்து வைக்கிறார். அருகில் கிளை முகாமையாளர் எஸ்.நிஷாந்தன் உள்ளார். (த)

# மிருதங்க நாதத்தின் தலைமகன் தண்ணுமை வேந்தன் மா.சிதம்பரநாதன்

உலகில் பலநூற்றுக்கணக்கான தோற்கருவிகள் காணப்படினும் தமிழர் கருவியாகிய மிருதங்கமானது இனிமையான செவிக்கினிய நாத சுகத்தைத் தரும் நுட்பம் நிறைந்த அழகிய கருவியாக விளங்குகின்றது. இசை அரங்குகளில் முக்கியமான லயக் கருவியாகப் பயன்படுத்தப்பட்டு வரும் இந்தக் கருவியின் மரபு வழியான ஆற்றுகை முறையும் வரன்முறை வழுவாத கற்பித்தல் பண்பாடும் மிருதங்கப் பேராசான் சிதம்பரம் ஏ.எஸ்.இராமநாதனின் வரவுக்குப் பின்னரே ஈழத்தில் வேரூன்றத் தொடங்கியது. இவரால் உருவாக்கப்பட்ட நன் மாணாக்கர்களில் ஒருவராகவும் இந்தத் துறையின் ஒப்பற்ற ஆற்றுகையாளராகவும் ஏராளமான திறன் கொண்ட மிருதங்கக் கலைஞர்களை உருவாக்கிய தலைசிறந்த ஆசிரியராகவும் கடந்த நாற்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அர்ப்பணிப்புடன் கலைப் பணியாற்றி வருபவர் சங்கீதரத்தினம் மா.சிதம்பர நாதன்.

மறைந்த மாரிமுத்து - அபூர்வரத்தினம் தம்பதியரின் மகனாக 18.07.1946 இல் தொல்புரத்தில் இவர் பிறந்தார். கலைஞானம் மிகுந்த பரம்பரையில் தோன்றிய இவர் கல்வியிலும் கலையிலும் சிறு வயதில் இருந்தே திறன் கொண்டவராக விளங்கினார். தொல்புரம் அமெரிக்கன் மிஷன் பாடசாலையிலும் விக்ரோறியா, ஸ்கந்தவரோதயா கல்லூரிகளிலும் கல்வி கற்ற இவர் இயற்கையாகவே இருந்த கலைஞானத்தாலும் பெற்றோரின் ஊக்கத்தாலும் பெருவிருப்பாலும் கலைத்துறைக்கென்றே தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்டார்.

லயக் கருவிகளின் பால் அதிகமான ஈடுபாடு கொண்டிருந்த இவர் தனது ஒன்பதாவது வயதில் பல்லியக் கலைஞர் சுப்பையா பிள்ளையிடம் மிருதங்கக் கலையைக் கற்கத் தொடங்கினார். சில ஆண்டுகள் இவரிடம் கற்றபின் லயஞானதிலகம் ஏ.எஸ்.இராமநாதனிடம் இக்கலையின் நுட்பங்களைத் தொடர்ச்சியாகப் பல ஆண்டுகள் கற்றுத் தேறிப் பட்டை தீட்டிய வைரமாக இசை அரங்குகளில் ஒளி வீசி வந்தார்.

எனினும் இந்தக் கலையை மேலும் கற்றுக் கொள்ளும் நோக்குடன் 1967இல் இராமநாதன் நுண்கலைக் கழகத்தில் நான்கு ஆண்டுகள் கற்று சங்கீதரத்தினம் என்னும் பட்டத்தைப் பெற்றுக் கொண்டார். இதன்பின் 1970இல் இவரது மிருதங்க அரங்கேற்றமானது சங்கீதபூஷணம் பொன்.சுந்தரலிங்கத்தின் குரலிசை அணிசெய்ய, நல்லை ஆதீனத்தில் ஏராளமான கலைச் சுவைஞர்கள் முன்னிலையில் சிறப்புற நடைபெற்றது.

எல்லா விதமான இசை அரங்குகளிலும் தனது லயக் கருவியை நுட்பமாகவும் இனிமையாகவும் இசைத்து வந்த இவர் சங்கீதபூஷணம் சி.பத்மலிங்கம், சங்கீதவித்துவான் ஏ.கே.கருணாகரன் திருமதி. சத்தியபாமா இராஜலிங்கம் போன்றவர்களது குரலிசை அரங்குகளைப் பல ஆண்டுகளாகத் தனது மிருதங்கத்தின் இன்னோசையால் சிறப்புச் செய்தவர். பாடல் தருகின்ற உணர்வை உள்வாங்கி, பாடகரின் பலம், பலவீனத்தை உணர்ந்து சபையோரின் தரத்தையும் அறிந்து தனது கருவியைத் திறம்பட இசைப்பதில் வல்லவராகத் திகழும் இவர் பல புதிய பல்லவிகளையும் இசைப் பாடல்களையும் இயற்றவல்ல தூய தமிழறிவு கொண்டவராகவும் காணப்படுகிறார்.

அத்துடன் கணக்கு வழக்கு முறைமையின் நெறிமுறை வழுவாமல் புதிய கோர்வைகளை உருவாக்கும் ஆற்றல் கொண்ட ஒருவராகவும் கஞ்சிரா, கடம் போன்ற துணைக் கருவிகளை இசைக்கும் திறன் கொண்டவராகவும் காணப்படுகின்றார்.

சாதனைக் கலைஞரைச் சந்திப்போம் சிந்திப்போம் 15



பல விதமான அரச விருதுகளையும் பட்டங்களையும் பெற்றுக்கொண்ட இவர் தமிழகத்தின் இசைக் கலைஞர்களான தஞ்சாவூர் எஸ்.கல்யாணராமன், கோ.இராமநாதன், ரி.கே.கலா போன்றவர்களது இசை அரங்குகளில் நாத மழை பொழிந்து அனைவரது பாராட்டுக்களையும் பெற்றுக்கொண்டவர். வானொலி, தொலைக்காட்சி போன்ற ஊடகங்களில் முதன்மைக் கலைஞராக அழைக்கப்பட்டு வருபவர். அத்துடன் வதிரகானம், பொன்னாலய கீதங்கள், கண்ணன் பாடல்கள் போன்ற ஒலிப்பதிவுகளையும் தனது மிருதங்க நாதத்தால் மெருகூட்டிய பெருமைக்குரியவர்.

தான் பெற்ற அனுபவத்தையும் கலைத்திறனையும் மாணவர்களுக்குப் பொறுமையுடனும் அன்புடனும் கற்பிக்கும் திறன் கொண்ட இவர் அண்ணாமலை இசைத்தமிழ் மன்றம், சாவகச்சேரி இயலிசை ஆடல் மன்றம் போன்ற இடங்களில் மிருதங்க வகுப்புக்களைப் பல ஆண்டுகளாக நடத்தி எண்ணற மாணவர்களை உருவாக்கியவர். தற்போது காரைநகர் கிளவன்காடு கலாமன்றத்தின் மிருதங்க ஆசிரியராகவும் பணியாற்றி வருகின்றார். இவரிடம் இந்தக் கலையைப் பயின்ற பன்னிரண்டு மாணவர்கள் இதுவரையில் அரங்கேற்றம் கண்டுள்ளனர். பலர் கலாவித்தகர்களாக உருவாக்கப்பட்டுள்ளனர். இவ்வாறு உருவாக்கப்பட்டவர்கள் தமது குருவின் வழியில் ஈழத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் திறன் கொண்ட மாணவர்கள் பலரைத் தற்காலத்தில் உருவாக்கி வருகின்றனர்.

1985ஆம் ஆண்டிலிருந்து 2007ஆம் ஆண்டு வரை யாழ்.பல்கலைக்கழக இசைத்துறையில் தற்காலிக விரிவுரையாளராகவும் பரீட்சகராகவும் பணியாற்றிய இவர் வெளிநாடுகளுக்கும் சென்று இசைப்பணியாற்றி வருகின்றார். ஆசிரியத் துறையின் இலக்கணமாகத் திகழும் இவர் யாழ். இளங்கலைஞர் மன்றத்தை உருவாக்கிய மூலவர்களுள் ஒருவர் என்பதும் தொடக்க காலத்தில் இந்த மன்றத்தின் செயலாளராகத் திறமையுடன் செயற்பட்டவர் என்பதும் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

ஆற்றுகையாளர் ஒவ்வெருவரும் ஆசிரியப் பணியில் ஈடுபடும் போது தனது கலைப் பயணத்தில் பெற்றுக்கொண்ட அனுபவத்தினூடாகவும் பட்டறிவினூடாகவும் மாணவரின் தரமறிந்து, உள்வாங்கும் விதமறிந்து, பொறுமையுடனும் அன்புடனும் சலிப்பின்றிக் கற்பிக்க வேண்டும். இசையரங்குகளில் மிருதங்கத்தை லயத்துடன் இசைந்து வாசிக்க வேண்டிய சந்தர்ப்பங்களே அதிகமாக இருப்பதால் இந்தத் துறைக் கலைஞருக்கு லயஞானம் என்பது மிகமிக அவசியம் என்பதை மாணவர்களுக்கு செயன்முறை வாயிலாக எடுத்துரைக்கும் வல்லமை கொண்டவராக மிருதங்க ஆசிரியர் இருக்க வேண்டும்.

**வசாவிளான் தவமைந்தன்**


அத்துடன் கீர்த்தனை, கற்பனாஸ்வரம், நிரவல், எளிமையான பாடல்கள் போன்றவற்றுக்குப் பக்கவாத்தியம் என்னும் எல்லை தாண்டாமல் வாசிக்கும் பழக்கத்தையும் தனியாவர்த்தனத்தை நறுக்காக, விறுவிறுப்பாக, சிறப்பாக, அடிக்காமல் இனிமையுடன் வாசிக்க வேண்டிய முறைகளையும் மாணவர்களுக்கு ஊட்ட வேண்டும். மேலும் அவர் எனது மாணவர், இவர் எனது மாணவர் என்று ஆசிரியரே சொல்லிக் கொள்வதை விட அவர் எமது ஆசான் என மாணவர்கள் கூறும் நிலையை ஏற்படுத்தவல்ல நற்பண்புகள் கொண்டவராக மிருதங்க ஆசிரியர் இருக்க வேண்டும் என்று தனது கருத்துக்களை இவர் கூறுகின்றார். ★

# உடல் சூடு தணிவடைய முசுட்டை

**முசுட்டை**
வேறுபெயர்- முசுட்டை
தாவரவியற்பெயர்- Rivea Ornata
(ரிவியா ஓனேற்றா)
குடும்பம்- Convolvalaceae
(கொண்வொல்லுலேசியே)

இது கொடிவகுப்புக்குரியது. தனி இலைகள் இதயவடிவானவை இலைக்கக்கத்தில் பூக்கள் உண்டாம்.

வெண்ணிறமானவை. நள்ளிரவில் மலரும்.



இதன் இலையைக் கறியாக சமைத்து உண்டுவர மலச்சிக்கல் நீங்கும். சிறுநீரெரிச்சல் தணியும், உடலுக்குக் குளிர்ச்சியை உண்டாக்கும்.

இலையை அரைத்து நல்லெண்ணைய் / தேங்காயெண்ணையுடன் சேர்த்துக் காய்ச்சி சொறி, சிரங்கு, கரப்பனுக்கு பூசிவர மாறும்.

கொடியைக் குடிநீரிட்டு பருகிவர நீர்க்கடுப்பும், மலச்சிக்கல், வெள்ளைபடுதல் என்பன நீங்கும்.

## நலம்தரும் தெய்வீக மூலிகைகள்

**சடைச்சி**
வேறு பெயர்-சடைச்சி, தனுவிருட்சம்.
தாவரவியற் பெயர்-Grewia tiliifolia
(கிரிவியா ரைலியை போலியா)
குடும்பம்-Tiliaceae (ரைலியேசியே)
சிங்களப் பெயர் -பருஷக
சமஸ்கிருதப் பெயர்-பருஷக, தர்மன
ஆங்கிலப் பெயர்-String Bark

முற்காலத்தில் வில் செய்வதற்கு இந்த மரத்தின் கிளையே பெரிதும் பயன்படுத்தப்பட்டதால் இதற்குத் தனுர் விருட்சம் என்று பெயர். இது நடுத்தர உயரமுடையது. உச்சியில் அடர்ந்த கிளைகள் சடைத்துக் காணப்படும்.

தனி இலைகள் இதயவடிவானவை. இலை விளிம்பு அழுத்தமற்றுப் பற்களுடையதாகக் காணப்படும். மாசி-சித்திரையில் பூக்கும் பூக்கள் மஞ்சள் நிறம் சிறியவை இதன் இலையைக் குடிநீரிட்டுக் கொடுக்க சீதக்கழிச்சல் குணமாகும் மரப்பட்டையைக் குடி நீரிட்டுக் கொடுத்தாலும் கழிச்சல், வயிற்றுக் கடுப்பு என்பன மாறும்.




இதன் வேர்க் குடிநீர் கர்ப்பாசய ரோகங்களை நீக்கும் என்று கூறப்படுகிறது.



Dr. சே.சிவசண்முகராஜா M.D (S),
சிரேஷ்ட விரிவுரையாளர், சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 185



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. நித்தியம்/ நிலையானது
6. குழி
7. அவசர செய்திக்கு இதுவும் சிறந்தது.
9. ஏவல் சொல்
10. இராஜினாமாச் செய்
12. கணக்கு வகைகளில் ஒன்று.
13. இந்தப் போட்டியில் நீங்கள் நிரப்ப வேண்டியது இதைத்தான்.
14. ஒரு வகை மீனினம்.
15. சோதிடம்
16. கட்டியணை
17. ஒ்ரு முற்காலப் பாத்திரம்
18. மணி, நிமிடம், செக்கன் போன்றவை இதன் அளவீடுகள்.
19. சாப்பிடு
20. இது இனிப்புச் சுவை தரும்.

### மேலிருந்து கீழ்

1. விளைச்சல்
2. அளவீட்டு அலகுகளில் ஒன்று.
3. ஒரு திசையின் சுருக்கம்.
4. தன் திறமை குறித்து பீற்றிக் கொள்வதையும் இப்படிக் கூறுவர்.
5. விளையாட்டு உபகரணம்
7. தோல் வாத்தியம்
8. தகுதி பற்றிய ஆராய்வு
11. சுவடு
12. பல அல்லது பலர் ஒன்று சேர்வதால் வருவது
13. செம்பருந்து, விஷ்ணுவின் வாகனம்.
14. இலங்கையின் மாநகரங்களில் ஒன்று.
15. ஓமகுண்டலத்தில் சொரியப்படுவது
16. பாடசாலை வகுப்புகளுக்கு இதுதான் பெயர்.
18. இந்தியாவின் முதல் பிரதமர்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.
6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

*சொற்சிலம்பம்போட்டி - 185*
*நியூ உதயன் பப்ளிகேஷன்*
*(பிறைவேற்)லிமிட்டெட்,*
இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 02.11.2011 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாகத் தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப் படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.185 இற்கான விடைகள் 06-11-2011 ஞாயிறு உதயனில் பிரசுரமாகும்.

### பாராட்டுப் பெறுவோர்

**சி.ஆறுமுகம்,**
கலைவாணி பவனம், கரணவாய் மத்தி கரவெட்டி.

**க.செல்லையா,**
1010/12 'பி' கே.கே.எஸ்.வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம்.

**ம.ஸ்ரெல்லா ஜீவநாயகி,**
43/2 சிவன் கோயில் வீதி, தோனிக்கல், வவுனியா.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ **சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 183 இற்கான சரியான விடைகள் வருமாறு:**

### இடமிருந்து வலம்

(1) அகவை (4) உபசரி (8 கண்ணகி (10) கட்சி (11) வழிகாட்டி (13) பாகம் (15) தடு (17) வடை (18) கலி (19) கரு (20) தூண் (21) கல்வி (22) மண்டபம் (23) வேண்டும். (24) பிச்சை.

### மேலிருந்து கீழ்

(1) அகம்பாவம் (2) கண் (3) வைணவம் (5) பகட்டு (6) சட்டி (7) ரிஷி (9) கிழி (12) காதலி (14) கடை (16) குரவிச்சை (18) கண்டம் (19) கல் (20) தூண்டு (21) கம்பி (22) மண்

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 183 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல்மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்ட சாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

1 ஆம் பரிசு — **ஏ.ஜெகதீஸ்வரன்,** வலந்தலை, காரைநகர்.

2 ஆம் பரிசு — **வ.இரத்தினசிங்கம்,** கம்பர் மலை, வல்வெட்டித்துறை.

3 ஆம் பரிசு — **திருமதி ம.சிறிஸ்கந்தராசா,** குச்சம் ஒழுங்கை, வல்வெட்டித்துறை.

4 ஆம் பரிசு — **யனந்தனி சத்தியமூர்த்தி,** யா/ கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில்.

5 ஆம் பரிசு — **கு.வேகாவனம்,** வித்தியானந்தக் கல்லூரியடி, முள்ளியவளை, முல்லைத்தீவு.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம். யாழ். மாவட்டத்தைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கான பணப்பரிசில்கள் காசோலை மூலம் காலக்கிரமத்தில் அவர்களது விலாசத்துக்குப் பதிவுத் தபால்மூலம் அனுப்பிவைக்கப்படும்.

# நிலையாமை

*(13 ஆம் பக்கத் தொடர்ச்சி)*

அப்படியெனில் இது வாழ்க்கைக்கானதாக அமைந்து விடலாமோ?

நாள்கள் உருண்டோட ரவிக்குமாரும் கோகிலாவைத் தனது ரூமுக்கு அழைப்பதும் தேவையற்றுச் சீண்டுவதும் கோகிலாவுக்கு ஏனோ பிடித்தமாக இருந்தாலும் மனதில் சிறு நெருடலை ஏற்படுத்தியது. குடிசையில் வாழ்பவள் கோபுரத்தை எட்ட முடியுமா? அந்த நினைவுகளை அவள் ஒதுக்கியே வந்தாள்.

அன்று தணிகாசலத்தாரின் தொழிற்சாலை தீப்பற்றியதற்கான நஷ்டஈடாக 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. மறுமாதமே கோகிலா கொண்டாவில் அலுவலகத்துக்கு வரத் தொடங்கிவிட்டாள். நடை உடையிலும் மாற்றம். கௌசிகனைக் கண்டதும் ஒரு வித பதற்றம் ஏற்பட்டாலும் ''ஹலோ கௌசிகன்'' அப்பாவுக்கு நஷ்டஈடாக 5 லட்சம் கிடைத்திருக்கு; இனி இந்த பஸ் நெருக்கடி கால் கடுக்க நடப்பது எல்லாம் தீர்ந்து விடும். போகக்கை உங்களை ட்ராப் பண்ணிப் போவன்.... ஆனால்...'' அலுவலகத்தில் உள்ளவை என்று இழுத்தவளை வைத்த கண் வாங்காமல் பார்த்தான் கௌசிகன். ''குறிப்பாய் செயலர் என்ன நினைப்பார் அது தானே பிரச்சினை'' வெளிப்படையாகக் கேட்டுவிட்டான். ''பரவாயில்லை பிரியா எனக்கு நெரிசல் எல்லாம் பழக்கம். உனக்குத் தான்.. என்ன முழிக்கிறாய் பிரியா? இனி உனக்கு பிரியா தான் பொருத்தம்... அது தான் நாகரீகமான பெயருங்கூட '' எனக் கூறிவிட்டு விறுவிறுவென அந்த இடத்தைவிட்டு நகர்ந்து விட்டான். கௌசிகனின் வார்த்தைகளால் கோகிலாவுக்கு நெஞ்சு குறுகுறுத்தாலும் அதனை அவள் பெரிது படுத்தவில்லை. இதன் பின்னர் கௌசிகன் கோகிலா சந்திப்பில் ஒரு சரிவு, ஆனால் அவளை உறுத்தும் நினைவுகளிலிருந்து அவளால் வெளியேற இயலவில்லை. ஒரு நாள் கோகிலாவே வந்து ''கௌசிகன், அப்பா உங்களைப் பார்க்க விரும்புகிறார். கஷ்டத்தைப் பார்க்காமல் வந்தால் நல்லதாம்'' என்று சொல்லிச் சென்றாள். கோகிலா மீது கொண்ட நட்பின் பிணைப்புக்களை அறுத்தெறியத் துணியாத நிலையில் கோகிலா வீட்டுக்கு வருவதற்கு முன்னாகவே கௌசிகனைக் கண்ட தணிகாசலத்தாருக்கு அதிர்ச்சி. '' இன்றுதான் மகளிடம் சொன்னேன்; அதற்கிடையில் வந்து நிற்கிறானே, என்ன தங்கமான பிள்ளை; கோகிலாவுக்குக் கொடுத்து வைக்கவில்லை '' என மனதுக்குள் நினைத்தவராக '' வாங்க தம்பி உட்காருங்க'' என்று பலத்த வரவேற்புடன் வரவேற்றார். அதனைக் கேட்டு வெளியேவந்த அவளுடைய அன்னையும் '' ஆர், கௌசிகனா? உமக்கு 100 வயது'' என்றவாறு அருகில் இருந்த கதிரையில் உட்கார்ந்தாள். தணிகாசலம் பேச்சைத் தொடங்கினார்; ''தம்பி கௌசிகன்; கோகிலாவுக்கு ஒரு பெரிய இடத்தில சம்பந்தம் வந்திருக்கு கோகிலாவுக்கும் சாதுவான விருப்பம் போல தெரியுது.'' தணிகாசலம் கூறிய வார்த்தை கௌசிகனை ஒரு கணம் திக்குமுக்காடச் செய்தாலும் '' வாழ வேண்டிய கோகிலா. அவளது விருப்பப்படி.... '' இழுத்தவனை ''தம்பி கோகிலாவின் குணம் உங்களுக்குத் தெரிஞ்சிருக்கும். பணம்தான் வாழ்க்கை என்டு நினைக்கிறவள். அவள் உங்களோட வாழுறதில உங்களுக்கும் நிம்மதி இராது '' அன்னை கூறினாள். செயலராக இருக்கிற ரவிக்குமார் குடும்பம்தான் வலியவந்து கேட்டினம். உங்களுக்கு ஆட்சேபனை இல்லையெண்டால்....'' தொடர்ந்தார் தனிகாசலம். கௌசிகனுக்கு இருந்த சந்தேகம் ஒன்று நீங்கியது. இந்த சமூகத்தின் நிலைப்பாடுகளை அறியும் போது அவமானமாகவும் இருந்தது. '' நாங்கள் ஆரம்பத்தில் நண்பர்களாகப் பழகினது உங்களுக்குத் தெரியும். கோகிலா அதோடையே விட்டிருக்கலாம். பரவாயில்லை.'' என்று எழுந்தவனை '' தம்பி உங்கடை மனம் புண்படும்படி செய்ததுக்கு....'' தணிகாசலம் வார்த்தைகளை இழுக்க ''அங்கிள் உங்கள மன்னிக்கிறதா கோகிலாவ மன்னிக்கிறதா? என் விதி அங்கிள் என்றவாறு வீட்டில் இருந்து வெளியேறினான்.

கோகிலாவின் திருமணம் நன்றே நிறைவேறியது. அன்றிலிருந்து கோகிலா வேலையால் நிறுத்தப்பட்டாள். கணவன் ரவிக்குமார் பாட்டிகளில் மட்டும் குடித்தவன் தினமும் அதனை வழக்கமாக்கிக் கொண்டான். இரவில் நேரம் செல்ல வீட்டுக்கு வந்தான். தகாத நண்பர்கள் பெண்களுடனான தொடர்பு தொடர்ந்தது. சரி பிழை கதைத்தால் அடி உதை எனக் கோகிலாவின் நாள்கள் இருண்டன. தினமும் வீட்டிலேயே அடைபட்டுக் கிடக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை. வேலை செய்தாலும் பொழுதாவது போகும். இத்துடன் இந்த வாழ்க்கை முடிந்து விட்டதா. இன்னும் 50 வருடமாவது வாழ்ந்து தீரவேண்டும். 50 வருடமானால் 600 மாதம் 18,000 நாள்கள். கணக்குப் போட கோகிலாவின் தலை சுற்றியது. '' தந்தை தாயுடன் இருந்த காலங்களில் வறுமையிலும் சந்தோஷத்துடன் வாழ்ந்தேன்'' நினைத்தவளுக்கு கௌசிகன் மீதான எண்ணம் விரிந்த போது வாயிலில் அழைப்பு மணி. திடுக்கிட்டவளாக வாயிற் கதவைத் திறந்தாள். அங்கே கௌசிகன். காதலில் தோல்வி கண்டவர்கள் தாடி, சோகத்துடன் காணப்படுவார்கள். மாறாக கௌசிகனின் முகம் அன்றலர்ந்த தாமரை போல் பிரகாசமாகக் காட்சியளித்தது. மலைத்து நின்றவளை,

'என்ன பிரியா வந்தவர்களை வரவேற்க மாட்டீர்களா?'' கௌசிகன் கேட்டதும். ''வாங்க வாங்க... உட்காருங்க'' என்று புன்முறுவலுடன் வரவேற்றாள். ''பிரியா என்னுடைய இரண்டாவது தங்கைக்குத் திருமணம்; நீரும் உம்முடைய கணவரும் கட்டாயம் வரவேணும்.'' கௌசிகன் கூறவும் '' கௌசிகன் நீங்கள்...! என இழுத்தாள் எதையோ எதிர்பார்த்தவளாக! '' கோகிலா என்னுடைய வாழ்க்கை எப்பவோ முடிஞ்சிட்டுது. திருமணம் செய்துதான் அந்தப் பந்தத்துடன் வாழ வேண்மெண்டதில்லை.

சகோதரிகளுக்கு நல்ல வாழ்க்கையை அமைச்சுக் கொடுத்து அதுகளின்ர சந்தோஷத்தைப் பார்த்து வாழ்வதுதான் என்னுடைய் இலட்சியம். அத்தோடை இன்னொரு பெண்ணை ஏமாற்றவும் நான் விரும்ப இல்லை.

கட்டாயம் திருமணத்துக்கு வந்திடுங்கோ'' என்று கூறி எழுந்தவனை ' இவ்வளவு தூரம் வந்திட்டு ஒண்டும் குடிக்காமல் ...'' பரவாயில்லை நேரிலை அழைப்பைத் தரவேணும் எண்டுதான் நான் வந்தனான். இண்டைக்கு உங்களைப் பார்த்த சந்தர்ப்பத்தாலை வீண்கதைகள் உருவாகலாம். அது உமக்கும் நல்லதில்லை, எனக்கும் நல்லதில்லை நான் வாறன் '' எழுந்து சென்ற கௌசிகனையும் அவனது வார்த்தைகளில் இருந்த அர்த்தத்தையும் உணர்ந்துகொண்ட கோகிலா பணத்தையும் பெருமையையும் விரும்பி ஆசைப்பட்டு உண்மை அன்பு வாழ்வை இழந்ததை எண்ணி வருந்தினாள். தனது தலையிலே தனது கையாலேயே மண்ணை வாரி அள்ளிக் கொட்டியது போலிருந்தது அவளுக்கு. ✱

நித்தியசுகத்தை நோக்கி... உதயன் வைத்தியமலர் 41

# மண்ணெண்ணெய் அருந்துதல்: குழந்தைகளுக்கு ஏற்படும் அவலம்

''இனியவன் ஒரு வயதும் ஐந்து மாதமும் நிறைந்த குழந்தை. அவன் தனது தாயுடன் அவர்களது குடிசை வீட்டில் ஒரு மாலைப் பொழுதில் சமையல் பகுதியில் இருக்கிறார்கள். அம்மா, மாலை நேரம் என்பதால் வீட்டு விளக்குகளுக்கு மண்ணெண்ணையை நிரப்பி விளக்கேற்றுவதற்கு ஆயத்தம் செய்கிறாள். மண்ணெண்ணையானது ஒரு சிறிய ''கொக்காகோலா'' போத்தலில் உள்ளது. அம்மா கவனக்குறைவால் மூடியை இறுக்கி மூட மறந்து விட்டு, சமையல் வேலைகளில் மும்முரமாகிறார். பக்கத்தில் விளையாடிக் கொண்டிருந்த இனியவன் நிலத்தில் வைக்கப்பட்ட அந்தப் போத்தலிலிருந்த மண்ணெண்ணையில் கொஞ்சத்தை குடித்தும் மிகுதியை உடலெங்கும் ஊற்றி விடுகிறான்.

திரும்பிப் பார்த்த அம்மா அலறுகிறார் ''ஐயய்யோ இனியவன் மண்ணெண்ணையைக் குடித்து விட்டான். யாராவது வாங்கோ'' என்று. அயல் வீட்டிலிருந்த பாட்டியும், சின்னம்மாவும் ஓடி வருகிறார்கள். பாட்டி உடனடியாக திருவி வைத்த தேங்காயை பிழிந்து அதன் பாலை இனியவனை இறுக்கிப் பிடித்து பருக்கினாள். இனியவன் புரக்கேறி, இருமி சிறிது நேரத்தில் மூன்று முறை சத்தி எடுத்து விடுகிறான். பயந்துவிட்ட அம்மா அழுது கொண்டே சந்தியிலுள்ள ஆமிக் கேம் பக்கம் ஓடுகிறாள். அவர்களின் உதவியுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கு குழந்தையைக் கொண்டு வருகிறாள்.

அவசர சிகிச்சைப் பிரிவில் உடனடியாக அனுமதிக்கப்பட்ட இனியவனின் மண்ணெண்ணை நனைந்த உடை மாற்றப்பட்டு, உடலைக் கழுவி கட்டிலில் வளர்த்துகிறார்கள் தாதியர். இனியவனுக்கு சரியான இருமலும் மூச்சு விடுவதில் கஷ்டமும் ஏற்படுகிறது. இப்போது இனியவனுக்கு நினைவு குறைந்து மயக்கமடைகிறான். வைத்தியர் சோதிக்கும் போது அவனின் உடலில் ஒட்சிசன் அளவு குறைந்திருக்கிறது. எனவே அவனுக்கு ஒட்சிசன் கொடுக்கப்பட்டு சுவாசத்தை இலகுவாக்கக் கூடிய மருந்தும், ஊசி மருந்துகளும் கொடுக்கப்படுகின்றன.

அவனை அடிக்கடி சோதித்துப் பார்க்கிறார்கள். அவனிற்கு நினைவு குறைவானதால் சேலைன் ஏற்றப்படுகிறது. மூச்சுக் கஷ்டம் என்ப தால் எக்ஸ்ரேயும் எடுக்கப்பட்டது. அவனுக்கு புரக்கேறி மண்ணெண்ணை சுவாசப்பைக்குள் சென்றதால் நியூமோனி யாவும் வந்து விட்டது என்று வைத்தியர்கள் கூறுகின்றார்கள். இனியவனுக்கு சுமார் பத்து பன்னிரண்டு மணித்தியா லங்களுக்கு பிறகு நினைவு வந்தாலும் மூச்சு விடுவதில் கஷ்டம் தொடர்ந்து கொண்டே இருந்தது. இப்போது காய்ச்சலும் வந்து விட்டது அதனால் வைத்தி யர்கள் ஊசி மருந்தும், ஒட்சிசனும் சுவாசத்தை இலகு படுத்தும் மருந்துகளையும் தொடர்ந்து கொடுக்கிறார்கள். மூன்றாம் நாள் இனியவனது உடலில் மண்ணெண்ணை ஊற்றிண்ட இடங்களில் சுடுதண்ணீர் பட்டு வெந்த புண்போல் தோல் அவிந்து, ஆறாம் நாள் அளவில் மாறி விடுகிறது. அவனுக்கு இருந்த சுவாசக் கஷ்டமும் இருமலும் எட்டாம் நாள் அளவில் மிகவும் குறைந்து விடுகிறது. இதற்கிடையில் இனியவனின் அப்பா தனது மேசன் வேலைக்கு போகாமல் ஆஸ்பத்திரியும், வீடுமாக ஒருகிழமை உழைப்பை இழந்துவிட்டார். ஒருமாதிரியாக ஒன்பதாம் நாள் இனி யவன் வீடு செல்கிறான். அம்மாவுக்கு வைத்தியர்கள் நிறைய ஆலோசனை சொல்லி அனுப்பினார்கள்.

இது போன்று, பெரியவர்களின் கவனக் குறைவால் குழந்தைகள் தற்செயலாக மண்ணெண்ணை குடித்து எமது கிளிநொச்சி வைத்தியசாலைக்கு ஆனி 2010 தொடக்கம் வைகாசி 2011 வரை 44 பேர் சிறுவர் விடுதியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். அதாவது மாதத்துக்கு 3-4 சிறுவர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்.

எனவே இந்தக் கதையிலிருந்து நாம் அறியவேண்டியவை என்ன? அதற்கான விடையை கீழ்வரும் பந்தி களில் நீங்கள் தெரிந்து கொள்ளலாம்.

மண்ணெண்ணை ஒரு ஐதரோகாபன் எனப்படும் இரசாயனப் பதார்த்தம். குழந்தைகள் தற்செயலாக அருந்தும் நச்சுப் பதார்த்தங்களில் மிகவும் பொதுவானது மண்ணெண்ணை. இது ஒரு பாரதூரமான விபத்து என்பதும் எம் அனைவருக்கும் தெரிய வேண்டும்.

மண்ணெண்ணையால் ஏற்படும் நச்சுத்தன்மையானது, அதை அருந்துவதால் மட்டுமல்லாது சுவாசத்தினால் உள்ளெடுக்கும் போதும் ஏற்படுகின்றது. ஒரு சாதாரணமாக வளர்ந்த மனிதனுக்கு 100 ml மண்ணெண்ணை உயிராபத்தை உண்டாக்கக் கூடியது.

### மண்ணெண்ணையால் உடலுக்கு ஏற்படும் பாதிப்புக்கள்

01. மண்ணெண்ணை இலகுவாக ஆவியாகக் கூடியதால், அது சுவாசத்துடன் சேர்ந்து சுவாசப் பைக்குள் இலகுவாகச் சென்றுவிடும்.

இதனால் மூச்சுத் திணறல், இருமல் என்பன உடனடியாக ஏற்படலாம். மண்ணெண்ணை சுவாசப் பையில் தாக்கத்தை ஏற்படுத்தி உடலுக்கு குறிப்பாக மூளைக்குச் செல்லும் ஒட்சிசனின் அளவைக் குறைத்து விடுவதால் மூச்சுக் கஷ்டமும், வலிப்பும் (Fits) ஏற்படலாம். அதைவிட முட்டு, இழுப்பு போன்ற சுவாசம் சம்பந்தமான பிரச்சினைகள் சில நாள்களுக்கு தொடரலாம். சுவாசப் பையில் மண்ணெண் ணையால் ஏற்படும் தாக்கத்தை Chemical Pneumonitis என்பர்.

02. மண்ணெண்ணை போன்ற ஐதரோகாபன் பதார்த்தம் கொழுப்புடன் கலக்கக் கூடியது. எனவே, இது தோலில் உள்ள கொழுப்பைக் கரைத்து தோலைக் காயவைத்து கொப்பளங்களையும், எரிவுக் காயங்களையும் சில சமயம் உண்டாக்கலாம்.

03. மூளையும், நரம்புத் தொகுதியும், மயலின் எனப்படும் கொழுப்பிலான பதார்த்தத்தைக் கொண்டுள்ளன. எனவே மண்ணெண்ணை இலகுவாக மூளையையும், நரம்புத் தொகுதியையும் அடைந்து நரம்புத் தொகுதியின் செயற்பாட்டை பாதிக்கச் செய்யும். இதனால் மண்ணெண்ணை அருந்தியவர் சுயநினைவு குறைந்து சில சமயங்களில் வலிப்பும் ஏற்படலாம். சுவாசமும் நிற்கவும் கூடும்.

04. சில வேளைகளில், இருதயத்துக்கான நரம்புச் செயற்பாட்டில் ஏற்படும் ஒழுங்கீனத்தால் இருதயத் துடிப்பிலும் பாதிப்பு ஏற்படலாம்.

05. மண்ணெண்ணை சிறு நீரகங்களையும் தாக்கக்கூடியதால், சில நேரங்களில் அதன் தொழிற்பாடும் பாதிக்கப்படலாம்.

06. அதை விட எந்த வகையான நச்சுப் பதார்த்தத்துக்கும் உள்ளதான அருந்தியவுடன் ஏற்படும் வயிற்றுநோ, சத்தி, வயிற்றோட்டம் என்பனவும் ஏற்படலாம்.

**ந.ஸ்ரீசரவணபவானந்தன்,**
குழந்தை வைத்திய நிபுணர்,
மாவட்ட பொது வைத்தியசாலை,
கிளிநொச்சி.

*உதயனின் இந்த வைத்திய மலர் யாழ்.போதனா வைத்தியசாலையின் நீரிழிவுச் சிகிச்சைப் பிரிவால் தொகுத்து வழங்கப்படுகிறது. மலர் சம்பந்தமான உங்கள் அபிப்பிராயங்களையும் மருத்துவம் சம்பந்தமான உங்கள் சந்தேகங்களையும் - நித்திய சுகத்தை நோக்கி... நீரிழிவு சிகிச்சை நிலையம், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வையுங்கள். உங்கள் வினாக்களும் அதற்கான பதில்களும் இந்தப் பகுதியில் பிரசுரமாகும்.*

## உயிர்ச்சத்து E

* கொழுப்பில் கரையும் விற்றமின்ஆகும். ஆகவே இதன் அகத்துறிஞ்சலுக்கு பித்த உப்பு அவசியம்.
* இது ஒட்சியேற்ற வெதிரியாக தொழிற்படுகின்றது. இதனால் இது பல் நிரம்பாக் கொழுப்பமிலங்களின் ஒட்சியேற்றத்தடுத்து கலமென் சவ்வுகளைப் பாதுகாக்கின்றது.
* உயிர்ச்சத்து E குறைபாடானது கொழுப்பு அகத்துறிஞ்சல் குறைவடையும் போது ஈரல் கால்வாய்களில் தடை ஏற்படும்போது, ஈரல், சதையி, பித்தப்பைகளில் ஏற்படும் நோய்களின் போது ஏற்படலாம்.
* உயிர்ச்சத்து E இன் தேவையானது உடலில் உள்ள பல் நிரம்பா கொழுப்பமிலங்களின் அளவில் தங்கியுள்ளது.
* குழந்தைகள் தாய்ப்பாலில் இருந்து உயிர்ச்சத்து E ஐ பெறுகின்றன. எனவே சில தாய்ப்பால் கொடுக்கப்படாத குழந்தைகளுக்குக் குருதிச் சோகை ஏற்படுகின்றது. பல் நிரம்பாக் கொழுப்பமிலத்தை அதிகளவு கொண்ட புட்டிப்பாலை குழந்தைகள் குடிப்பதால் குருதிச் சோகை ஏற்படுகின்றது.
* உயிர்ச்சத்து E குறைப்பாட்டால் மலட்டுத் தன்மை ஏற்படும்.
* உயிர்ச்சத்து E கோதுமை, முளைய எண்ணெய், மரக்கறி எண்ணெய், பச்சை இலை மரக்கறிகள், நல்லெண்ணெய், ஈரல், முட்டை, தக்காளி, பூசணி, தானிய முளையங்கள் என்பனவற்றில் காணப்படுகின்றது.

உயிர்ச்த்து E இன் நாளாந்த தேவை.

| | | |
|---|---|---|
| குழந்தைகளுக்கு | 0-6 மாதங்கள்- | 4 மி.கி/நாள் |
| | 7-12 மாதங்கள்- | 5 மி.கி/நாள் |
| சிறுவர்களுக்கு | 1-3 வருடங்கள்- | 6 மி.கி/ நாள் |
| | 4-8 வருடங்கள்- | 7 மி.கி/நாள் |
| | 9-13 வருடங்கள்- | 11 மி.கி/ நாள் |

வயது வந்தவர்களுக்கு (A dult) 25-30 மி.கி/ நாள்

* நாளொன்றுக்கு 2144mg இற்கு அதிகளவான உயிர்ச்சத்து E ஐ உட்கொள்வதால் உடலில் கோளாறுகள், மார்பகப் புண்கள் என்பன ஏற்படலாம். ( more than 3200 IU/ day [IU= 067 mg] )

**செல்வி கே. காபிலா,**
மருத்துவப்பீட மாணவி.

திருமதி மஞ்சு, வயது 27

**கேள்வி:** கடந்த ஒரு வருட காலத்தில் 3 தடவைகள் எனது சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டது. 3 தடவையும் நான் வைத்தியசாலையிலிருந்து சிகிச்சை பெற்று வந்தேன். இது ஏன் ஏற்படுகிறது என்றும் மேலும் இவ்வாறு சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதைத் தடுக்க நான் என்ன செய்யவேண்டும் என்று கூறுங்களேன்?

**பதில்:** உங்களுக்கு ஏற்பட்டது சலத்தில் அடிக்கடி ஏற்படும் கிருமித் தொற்றாகும்.(Recurrent urinary tract infection ) இது பொதுவாகப் பக்ரீரியாவால் ஏற்படுகிறது. உங்களுக்குப் பொதுவாக ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு விதமான பக்ரீரியாவால் கிருமித் தொற்று ஏற்பட்டிருக்கும்.

* * *

2 தடவைகளுக்கு மேல் சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால் 80% ஆன பெண்களில் மீண்டும் இவ்வாறு ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு அதிகம். எனவே நீங்கள் கவனமாக இருக்க வேண்டும்.

ஆண்களிலும் பார்க்க பெண்களுக்கு சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுதுவதற்குரிய சாத்தியக் கூறு அதிகம். அத்துடன் கர்ப்பிணிப் பெண்கள், சலரோக நோயாளிகள், சிறுநீரகக் கற்களால் பாதிக்கப்பட்டோர், சிறுநீரக வழியில் ஏற்படும் சுருக்கம், சிறுநீரகத் தொகுதியில் ஏற்படும் பாதிப்பு (Anatomical abnormalities) , புற்று நோய்கள், HIV நோயாளிகள் ஆகியோரின் சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதற்கான சாத்தியக் கூறு அதிகம்.

உங்களுக்கு அடிக்கடி சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டபடியால் வைத்தியர்கள் பெரும்பாலும் எல்லாப் பரிசோதனைகளையும் செய்திருப்பார்கள். எனவே நீங்கள் எந்தக் காரணத்தால் உங்களுக்கு அடிக்கடி சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டது என்பதை அறிந்து கொள்ளவேண்டும்.

இவ்வாறு மீண்டும் சலத்தில் கிருமித் தொற்று ஏற்படுவதைத் தடுக்க நீங்கள் செய்ய வேண்டியவைகளாவன:-

1. போதுமானளவு நீர் அருந்த வேண்டும். (2-3 L /Day)
2. சலத்தை கட்டுப்படுத்தக்கூடாது சலம் கழிக்கவேண்டுமென்ற உணர்வு ஏற்படும்போது சலம் கழிக்கவேண்டும்.
3. மலம் கழித்த பின் முன்பக்கமிருந்து பின்பக்கமாக கழவ வேண்டும். (Front to back washing the genetalia)
4. (Sexual intercoune) இற்கு முன் பெண்ணுறுப்பை கழுவி சுத்தம் பேண வேண்டும்.

உங்களுக்கு மீண்டும் சலத்தில் கிருமித் தொற்று ஏற்பட்டால் சிலவேளைகளில் நீங்கள் தொடர்ச்சியாக சில காலங்களுக்கு கிருமிக் கொல்லி மாத்திரைகள் (Low dose antibiotics) பாவிக்கவேண்டியிருக்கும்.

**Dr.J.தர்சிகா,**
நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை.




# முரண்

## விமர்சனம்

வாழ்க்கையில் பல சம்பவங்களை ஒவ்வொருநாளும் நாம் எதிர்கொண்டு வருகின்றோம். அப்படிப்பட்ட சில சம்பவங்களில் எமது நிம்மதியே தொலைந்திருக்கும். சில சம்பவங்களில் இனிமையான அனுபவங்கள் கிடைத்திருக்கும். இன்பமான அனுபவம் என்றால் குறுகிய நாள்களில் மறைந்து போய்விடும். துன்பமான அனுபவம் என்றால் ஊரே பேசும். அப்படியொரு வாழ்க்கையில் அனுபவச் சிக்கலுக்குள்ளாகும் படம்தான் இந்த 'முரண்' படத்தின் கதையாகும். பெங்களூரில் இருந்து சென்னைக்குப் போகும் சேரனின் கார் நடுவழியில் கோளாறு காரணமாக நின்றுவிட அவரின் போக்குவரத்துக்கு உதவி செய்கிறார் பிரசன்னா. எது செய்தாலும் அதில் ஒரு திரில் இருக்க வேண்டும் என்று நினைக்கும் பிரசன்னாவின் குணத்தைப் பார்த்து வியக்கும் சேரன் போகப்போக பிரசன்னாவின் நடவடிக்கைகளை ரசிக்கவும் செய்கிறார். இரண்டுபேரும் தாங்கள் யார், தங்களுடைய வாழ்நாள் எப்படிப் போகிறது என்பதைப் போக்குவரத்தில் பகிர்ந்து கொள்கிறார்கள். இதில் சேரனுக்கு அவருடைய மனைவி பிரச்சினையாகவும் பிரசன்னாவுக்கு அவருடைய அப்பா பிரச்சினையாகவும் இருக்கிறார்கள். சென்னையை நெருங்கும் தறுவாயில் பிரசன்னாவுக்கு ஒரு யோசனை வருகிறது. 'உங்களுடைய் மனைவியை நான் கொலை செய்கிறேன். என்னுடைய அப்பாவை நீங்கள் கொலை செய்யுங்கள், இப்படிச் செய்தால் நாம் இருவரும் தப்பித்துக் கொள்ளலாம்'' என்று பிரசன்னா சேரனிடம் சொல்கிறார். இதைக்கேட்டு அதிர்ந்து போகும் சேரன் ''மனநல மருத்துவரைப் போய்ப் பாருங்கள்'' என்று பிரசன்னாவிடம் சொல்லிவிட்டுச் சென்று விடுகிறார்.

இதற்கிடையில் சேரனுடைய மனைவியின் அட்டகாசம் எல்லையை மீற ''இவளை கொலை செய்தால்தான் என்ன? என்று சேரன் யோசிக்கும் தறுவாயில் பிரசன்னா சேரனின் மனைவியைக் கொலை செய்துவிடுகிறார். அதற்குப் பதிலாகத் தனது அப்பாவை நீங்கள் கொலை செய்யுங்கள் என்று சேரனை வற்புறுத்த, வேண்டா வெறுப்பாகக் கொலை செய்யச் சம்மதிக்கும் சேரன் பிரசன்னாவின் அப்பாவைக் கொலை செய்தாரா? இல்லையா? என்பதை எதிர்பார்க்காத திருப்பங்களுடன் சொல்லியிருக்கும் படம்தான் 'முரண்'.

ஆர்ப்பாட்டம் இல்லாமல் படம் ஆரம்பித்தாலும் ஒவ்வொரு காட்சியிலும் ஏதோ ஒரு சுவாரஸ்யத்தை வைத்து விறுவிறுப்பாகப் படத்தை நகர்த்தியிருக்கிறார் இயக்குநர். அதுவும் பிரசன்னாவின் அர்ஜூன் என்ற கதாபாத்திரத்தை வைத்துக்கொண்டு முழுப்படத்தையும் ரசிக்கும்படி செய்திருப்பது பாராட்டுக்குரியது. தமிழ்த் திரைப்படத் துறையை அடுத்த கட்டத்துக்கு எடுத்துச் செல்லும் தகுதியுடைய நடிகராகப் பிரசன்னா மிளிர்கிறார்.

தனது அந்தஸ்துக்கும், பணத்துக்கும் மட்டுமே முன்னுரிமை கொடுக்கும் தன் முதல் மனைவியுடன் வாழாமல் வாழ்கிறார் சேரன். இதற்கிடையில் ஹரிப்பிரியாவுடனான காதல் சேரனுக்கு ஆறுதல் தருகிறது. முதற்பாதியில் படத்தை நகர்த்துவதே வசனங்கள் தான். சேரனை உசுப்பிவிட்டு வேடிக்கை பார்க்கும் பிரசன்னாவின் நடிப்பும், பிரசன்னாவைப் புரிந்து கொள்ள முடியாமல் தவிக்கும் அப்பாவியாக சேரனின் நடிப்பும் பாராட்டுக்குரியது. பிரசன்னா வேண்டுமென்றே வம்புச் சண்டைக்குப் போக சேரன் இடையில் புகுந்து தாக்குதல் தொடுக்க கடைசியில் அவர்களது காரை விபத்துக்குள்ளாக்கிவிட்டு கவலைப்படாமல் தப்பிக்கும் காட்சியிலேயே சேரன், பிரசன்னாவின் குறைந்த பட்ச எல்லைக் கோட்டுக்குள் வந்துவிட்டார் என்பதை உணர்த்திவிட்டார் இயக்குநர். சேரன், பிரசன்னா, ஹரிப்பிரியா, ஜெயப்பிரகாஷ் நால்வரும் படத்தின் பின்பாதி முழுவதும் சுற்றிச் சுற்றி வந்தாலும் எப்படி இருவரும் கதையை முடிக்கப் போகிறார்கள் என்ற காட்சிகள் மட்டும் விறுவிறுப்பை ஏற்படுத்தியுள்ளன. இவ்வளவு பெரிய கோடீஸ்வரனின் மகனை சொந்த அலுவலகத்தில் சாதாரண டைப்பிஸ்டைப்போல அமர வைக்கப்பட்டிருப்பதும், அப்பாவால் வெறுத்து ஒதுக்கப்பட்டும் இத்தனை ஆடம்பரமாக வலம் வந்தும் தனது அப்பா ஜெயப்பிரகாஷைக் கொலை செய்ய பிரசன்னா ஏன் சேரனைக் கேட்க வேண்டும்? என்ற அளவையியல் கேள்வியெல்லாம் எழாமல் இல்லை. இருந்தாலும் அப்பாவியாகத் தோற்றம் அளிக்கும் சேரன் போன்றவர்கள் கிடைத்தால் எந்த அயோக்கியனுக்கும் பயன்படுத்திக் கொள்ளத்தான் தோன்றும் என்பதையே நாம் அளவையியலாக எடுத்துக் கொள்வோம். ஒளிப்பதிவாளர் பத்மேஷின் கமரா தேசிய நெடுஞ்சாலைகளை அக்குவேறு ஆணிவேறாக் காட்டியிருக்கிறது.

ராஜசேகர் அமைத்திருக்கும் சண்டைக் காட்சிகள் யதார்த்தம் என்றால் அதைப் படம் பிடித்திருக்கும் விதம் அபாரம். சாஜன் மாதவின் பின்னணி இசையில் அரைப்பாடல், முக்கால் பாடல் என்று 2 பாடல்களைத் தாண்டி குத்துப்பாடல் ஒருபுதிய வரவு. சேரனின் மனைவியாக நிகிதா, காதலியாக ஹரிப்பிரியா இருவருக்கும் அதிகம் படத்தில் வேலை இல்லை என்றாலும் இருவரும் வந்துபோகும் காட்சிகள் படத்துக்கு மெருகூட்டுகின்றன. கணவனுக்கும் மனைவிக்கும் இடையே முரண்பட்டால் வாழ்க்கை என்னவாகும். காதலால் தந்தையும் மகனும் முரண்பட்டால் என்ன ஆகும் என்பதைக் கதைக் கருவாக எடுத்துக் கொண்டு படத்தை வெளியிட்டிருக்கிறார் இயக்குநர். ஒரு குடும்பத்தில் கணவன், மனைவி தமது எதிர்பார்ப்புக்களை நிறைவேற்ற முடியாமல் இருக்கும் தருணத்தில் பொறுத்துக்கொண்டு குடும்பத்தை நகர்த்தும் பக்குவம் இருக்க வேண்டும் அப்படி இல்லாமல் கணவன், மனைவி ஆகி விட்டதும் தமது எதிர்பார்ப்புக்கள் வீணடிக்கப்பட்டுவிட்டன என்று புலம்பிக் கொண்டு குடும்ப வாழ்வைச் சீரழிப்பதால் தமது வாழ்வு வீணாகி விடுவது யாருக்கும் தெரியவில்லை. இந்தப் படத்தில் பல எதிர்பார்ப்புக்கள் நிறைவேறாமல் குடும்ப வாழ்க்கையை வீணடிக்கும் நிகிதா சேரனின் வாழ்க்கையையும் வீணடிக்கிறார்.

இதனால் சேரன் ஹரிப்பிரியா மூலம் வசந்தம் வருகிறது என நினைத்து ஹரிப்பிரியாவைக் காதலிக்கிறார். இந்தப் படம் திருமணம் முடித்தவர்களுக்கு ஒரு செய்தியைச் சொல்லி விடுகிறது. அதாவது எதிர்பார்ப்புக்களும் இருக்க வேண்டும். ஆனால் கைக்கு எட்டாத எதிர்பார்ப்புக்களை மனதில் சுமந்து கொண்டு குடும்பத்தில் குழப்பத்தை ஏற்படுத்தினால் எப்படி அந்தக் குடும்பத்தின் வாழ்வு சீரழியும் என்பதை வெளிப்படுத்தி இருக்கிறது முரண். குடும்பமாகப் பார்க்க வேண்டிய படம்.

- குமார்.

# பாடகனுக்குத் தனித்துவத்தைக் கொடுப்பது அவரது பாணியே...

ரி.என்.கிருஷ்ணாவின் கச்சேரியை முன்வைத்து நான் தெரிவித்த கருத்துக்கு, இசைமணி ஏ.எஸ்.கரன் எழுதிய எதிர்வினை கடந்த ஞாயிறு உதயனில் வெளிவந்துள்ளது.

முதலில் ஒன்றைத் தெளிவாக்க விரும்புகிறேன். இசைக் கலைஞர்களைப் புண்படுத்துவதோ இராமநாதன் நுண்கலைப்பீடத்தை அவமதிப்பதோ-என் நோக்கமன்று. ஒருபுறம் நுண்கலைப் பீடத்தின் அந்தஸ்து உயர்ந்து கொண்டு போக, மறுபுறம் அங்கு கற்று வெளியேறும் மாணவர்களில், ஒரு சிலர் தவிர, மற்றையோர் துலங்கக் காணோமே என்ற ஆதங்கத்தில் எழுதப்பட்டது அந்தக் குறிப்பு. அங்கு கற்றுக் கொண்டிருக்கும் மாணவர்கள் கூடத், தம் சூழலில் நிகழும் கச்சேரிகளைக் கேட்பதில்லையே என்ற விரக்தி எனக்குண்டு.

தொண்ணூறுகளின் முற்பகுதியில் ஓர் இந்தியச் சஞ்சிகைக்கு செம்மங்குடி ஸ்ரீநிவாச ஐயர் ஒரு பேட்டியளித்திருந்தார். அது பாலமுரளி கிருஷ்ணா உச்சத்திலிருந்த காலம். 'என் இளமைக் காலத்தில் 7-8 மணி நேரக் கச்சேரிகளைக் கேட்பது வழக்கம். இப்பொழுது யார் அவ்வளவு நேரம் பாடுகிறார்கள்' என்ற செம்மங்குடியை இடைமறித்து செவ்வி கண்டவர் ''அப்போ, பாலமுரளி?'' என்றார். ''அவன் என்ன செய்வான், பாவம்? அப்படிக் கச்சேரிகளை அவன் கேட்கவில்லையே'' என்றார், அம்முதுபெரும் கிழவர். பேட்டியை நான் நாதஸ்வர கலாநிதி என்.கே.பிக்கு வாசிக்கக் கொடுத்தேன். செம்மங்குடியின் குறிப்பை அவர் மிகவும் ரசித்தார்.

அடுத்தது சாதகம் செய்வது பிஸ்மில்லா கான் என்ற இசை மேதை ('மேதை' என்ற அடையை நான் மிகமிக அரிதாகவே பயன்படுத்துவேன்) 1986 இல் 'இந்திய ருடே'க்கு ஒரு பேட்டியளித்தார்.

> 'இசை என்பது ஒரு சமுத்திரம். நான் அதைக் கடக்க விரும்பினேன். அதன் கரையைக் கூடச் சென்றடைய முடியவில்லை... பழையகாலம் முடிந்துவிட்டது. இப்போது இசையை மாணவர்கள் பள்ளிகளில் பயில்கிறார்கள். குருவிடம் அவர்கள் சாதகம் செய்வதில்லை. அவர்களுக்கு உடனடி முடிவுகள் தேவை. நமது பழைய இசைமேதைகள் எல்லாம் தவமாய்த் தவமிருந்து இசையில் வாழ்ந்தார்கள். ஏழ்மையிலே பிறந்து ஏழ்மையிலேயே இறந்தார்கள். அவர்கள் செய்த தியாகங்கள் பற்றி இன்று யாருக்கும் தெரியாது'.

இந்த பிஸ்மில்லா கான் காசியில் வாழ்ந்தவர். அவருடைய மாமனார் அங்குள்ள பாலாஜி கோயிலில் 18 ஆண்டுகள் ஷெனாய் வாசித்தவர். அவர் கட்டளைப்படி பிஸ்மில்லாவும் அந்தப் பணியைச் செய்து வந்தவர். தினமும் மாலை 7 மணிக்கு ஆரம்பித்து இரவு 11 மணி வரை வாசிப்பார். தனியே, கடவுளுக்காக. எமது கலைஞர்கள் எத்தனை மணிநேரம் சாதகம் செய்கிறார்கள்?

ஹிந்துஸ்தானி சங்கீதத்தில் 'ஆலாப்' முக்கிய பங்கு வகிக்கிறது என்று நான் சொல்ல, கர்நாடக இசையிலும் அது முக்கியம் என்கிறார் கரன். நான் சொல்ல வந்தது ஹிந்துஸ்தானி இசையில் அது *மிக* முக்கியம் - அதாவது ஆலாபனைக்கு அதிக நேரம் செலவிடுகிறார்கள் என்பதே. கரிசல் மண்ணின் புகழ் பூத்த எழுத்தாளர் கி.ராஜநாராயணன் விளாத்திக்குளம் சாமியார் பற்றி ஒரு கட் டுரை எழுதியிருக்கிறார். வடநாட்டின் இசையரசி றொஷானா பேகம் அவர்களும் ரி.என்.ராஜரத்தினம் பிள்ளையும் விளாத்திக்குளம் சாமியாருடைய ஆலாபனையைக் கேட்க கோயில்பட்டிக்கு ராஜநாராயணன் ஏற்பாட்டில் போயிருந்தார்கள். றொஷானா பேகம் ஆலாபனையில் நிபுணி.(வி.கு.-சாமியார் சங்கீத வித்துவானல்லர்)

பட்டம் பெறுபவர்கள் எல்லோரும் நிபுணர்களாக மலர்வதில்லை என்கிறார் கரன். மெத்தச்சரி. ஆனால் மற்றைக் கற்கை நெறிகளைப் போலல்ல-இசை. இஃதோர் ஆற்றுகைக் கலை அல்லவா? பாட/ வாசிக்க இயலாதவருடைய பட்டத்தால் பயன் என்ன? மேடைச் சந்தர்ப்பம் இளவல்களுக்கு இல்லை என்கிறார் கரன். எல்லோரும் நல்லூரில் பாட ஆசைப்பட்டால் சிரமந்தான். ஆனால், ஆர்வமும் தகுதியும் உள்ளவர்களுக்கு உதவ என்னால் முடியும். (ஆனால் போதிய ரசிகர்களைத் திரட்டுவது என்கையில் இல்லை)

எனக்கு சங்கீதம் தெரியாது. கேள்வி ஞானத்தை வைத்துக் கொண்டே என் கருத்துரையை எழுதுவதாக முதலிலேயே குறிப்பிட்டிருக்கிறேனே. பிறகேன் ஏன் எனக்குப் பரீட்சை வைக்கிறீர்கள், கரன்? கமகத்தைத் தனியாகப் பாடியதாக நான் சொன்னேனா? 'கமகப் பிரயோகம்' என்பது சங்கீத பரிபாஷை தானே? நிறைவாக அவர் பாடியது பிருந்தாவன சாரங்கா அல்ல, பிருந்தாவனி என்று இசைமணியான நீங்கள் சொன்னால் ஏற்றுக் கொள்கிறேன்.

'இசைக் கச்சேரி கேட்ட அநுபவமில்லாதவர்களுக்கு கிருஷ்ணாவின் கச்சேரி புதுமையாய் இருந்திருக்கலாம்' என்ன சொல்ல வருகிறீர்கள்? திருப்புகழில் கச்சேரி தொடங்குவது புதுமையில்லையா? (அதை வர்ணம் என்பீர்கள். வர்ணத்துக்குத் திருப்புகழை எடுத்தாள்வது புதுமையன்றி வேறென்ன?) பாணி (Style) என்று ஒன்றுண்டே! 'இது மதுரை ஐயர் பாணி. இது ஜி.என்.பி. பாணி. இது மஹாராஜபுரம் பாணி' என்று சிலாகிக்கிறயர்களே! செம்பை ஸ்வரப்பிஸ்தாரம் செய்யும் அற்புதத்தை அனுபவிக்கக் கொடுத்து வைத்திருக்க வேண்டும். பாணி தானே பாடகனுக்கு ஒரு தனித்துவத்தைக் கொடுக்கிறது? 'பல நூறு ஆண்டுகள் கண்டறியப்பட்டவற்றைத் தான் அவர் பாடினார் என்றால், வீரசிங்கம் மண்டபம் கொள்ளாத கூட்டம் ஏன் வந்தது?

**சோ.பத்மநாதன்**

'விளம்ப காலத்தில் பக்திப் பாடல்களைப் பாடினார்' என எழுதினால் 'அப்படி ஏதும் எமது இசைமரபில் இல்லை!' என்கிறீர்கள். விதண்டாவாதம் செய்யாதீர்கள். விழா ஏற்பாட்டாளர்களாகிய இந்திய கலாசார மையம் தந்த கையேடு,

'His renditions of vilamba kalam compositions which are soaked with Bhakthi and Bhava are a treat to listeners'

என்கிறது. இதற்கு என்ன செய்வீர்கள்? அறிவுபூர்வமாக நான் முன்வைத்த வாதங்களைச் சந்திக்காமல், நான் சார்ந்துள்ள மன்றத்தைப் பெயர் குறிப்பிடாமல் தாக்குவது எந்த நியாயத்தின் பாற்பட்டது?

இன்னொன்றையும் சொல்லி இதை நிறைவு செய்வேன். 'கல்லாமற் பாதி குல வித்தை'.- நுண்கலைப் பீடத்தில் கற்று வெளியேறுவோரில், வெளியே பிரகாசிப் போரைப் பாருங்கள். முன்பு வர்ண, ராமேஸ்வரன், பரமேஸ்வரி கணேசன் பின்பு சு.கோபிதாஸ், அண்மையில் சுகன்யா பரந்தாமன் மற்றும் தனசொரூபி இவர் கள் பலம் இவர்களுடைய பின்புலம்.

புதுமை செய்வதில் ஆர்வமுள்ளவர் ஒருவர் நம்மிடையே இருந்தார். அவர் தான் திலகநாயகம் போல். இப்பொழுது ஒருவர் இருக்கிறார், தவநாதன் றொபேர்ட். அண்மையில் தான் பொதுநூலகக் கூடத்தில் அவருடைய அற்புதமான கச்சேரியைக் கேட்டேன். நம்பிக்கை தருகிறார்.

*(இசைக் கச்சேரிகள் குறித்து உதயன் ஞாயிறு இதழ்களில் - 09.10.2011, 16.10.2011 திகதிகளில் வெளியான கருத்துக்களில் இன்னொன்று இது)*

# பெண்களுக்கு சம உரிமை வழங்கப்படுகிறதா...?



சுபா,
மானிப்பாய்.

சவால்களை, இடர்களை எதிர்கொண்டு போராட்ட வாழ்க்கை வாழ்பவர்களாக இன்று பெண்கள் காணப்படுகிறனர். திருமணமாக முன்பும் திரு மணமான பின்பும் பெண்களுக்கு சமவுரிமை என்பது மறுக்கப்பட்டே வருகிறது. மேடைப் பேச்சுக்களில் மட்டும் ஆண்கள் பேசுவார்கள், ''இன்று பெண்கள் எத்தனையோ உயர் பதவிகளில் இருக்கிறார்கள். அவர்களுக்கு சம உரிமை வழங்கப்படுகிறது'' என்று. உயர் பதவியை ஏதோ தாம் மனமுவந்து வழங்கியது போன்று இருக்கும் இவர்கள் பேச்சு. ஆனால் பெண்களின் வளர்ச்சி, அவளின் முன்னேற்றம் பற்றிப் பேசுகின்ற இந்தச் சமூகம்தான் அவளைப் பற்றி விமர்ச்சிக்கிறது. இன்று பெண்கள் எந்த நல்ல விடயத்தில் ஈடுபட்டாலும் அதனைத் தட்டிக்கொடுப்போர் குறைவாகத்தான் காணப்படுகிறார்கள். அதனையே ஓர் ஆண் செய்யும்போது ஏதோ சாதித்துவிட்டார்கள் என்று பாராட்டுகிறார்கள். இங்கே பெண் தூற்றப்படுகிறாள். ஆண் பாராட்டப்படுகிறான். இதுதான் இன்று வழங்கப்படும் சமத்துவமா?

திருமணத்துக்கு முன் பெண்கள் செய்யும் விடயங்களை விமர்ச்சிப்போர்தான் அதிகம். அவர்கள் செய்வது நன்மை தானே; அதற்கு ஊக்கம் கொடுப்போம் எனச் சிந்திப்போர் குறைவு. மற்றவர்கள் செய்வார்கள்; நீங்கள் இதை செய்யத்தான் வேணுமா? என்ற கேள்வியும் எழும். இங்கும் பெண் அடக்கப்படுகிறாள். அதனைச் செய்யும் அந்த மற்றவர்கள் யார்? அத்தகையவர்கள் யாருமே காணப்பட மாட்டார்கள். எதனை பெண் முன்னின்று செய்தாலும் அதிலே குற்றம் காண்பதற்காகவே ஒரு கூட்டம் காத்திருக்கிறது.

அதுமட்டுமா? திருமணமான பின்னும் பெண்கள் அடக்கப்பட்டவளாகவே காணப்படுகிறனர். திருமணத்துக்கு முன்பு நண்பிகள், உறவுகள் இருந்த எத்தனையோ பெண்கள் திருமணத்துக்குப் பின்பு அவ்வாறான தொடர்புகள் அற்று வாழ்வதைக் காணலாம். அந்த ஆணின் நட்பு வட்டங்கள், உறவுகள் எல்லாம் அவ்வாறே இருக்கும். ஆனால் பெண்ணுக்கு அவ்வாறு இல்லை. சம அந்தஸ்து இங்கு மறுக்கப்படுகிறது.

ஆணும் பெண்ணும் வேலைக்குச் செல்லும் குடும்ப ஆண்கள் 'நான் என் மனைவிக்கு ஒத்தாசையாக இருக்கிறேன்'; என்று அலுவலகத்தில் தம்பட்டம் அடிப்பார்கள் தான் தன் மனைவிக்கு சமவுரிமை வழங்குவதாக. ஆனால் மனைவி செய்யும் வேலையில் பாதி வேலையாவது அவர்கள் செய்தார்களா? என்றால் இல்லை. ஒரு நாளைக்கு காலை முதல் அலுவலகம் செல்லும் வரை பின்பு அலுவலகத்தால் வந்து மாலை வரை இருவரும் செய்யும் வேலையைப் பட்டியல் இட்டால் தெரியும் அவர்கள் வழங்கும் சமவுரிமை என்னவென்று. பெண்களும் மனிதர்களே. அவர்களின் உணர்வுகள் உரிமைகளைப் புரிந்து கொண்டு அவர்களுக்கு சமவுரிமை, சம அந்தஸ்துக்களை வழங்க அனைவரும் முன்வர வேண்டும்.




## புரியாத புதிர்...!

தொலைந்து போன காதல்...
உதறி விட்ட உறவுகள்...
கைநழுவி விட்ட நட்பு...
தழுவும் தனிமை...
கிட்ட வராமல் எட்டப் போகும்
பாசப் பிணைப்புகள்...
விட்டுத் துரத்தும்
சந்தேகப்பார்வைகள்... என்னை
என்புருக்கியாய்
உருக்குகிறது... அணு அணுவாய்க்
கொல்கிறது - இவை...
ஏமாற்றமா...
தோல்வியா...
தியாகமா...
வாழ்க்கையின் சவாலா...
வேதனையின் பரிசுகளா...?
அல்லது - பெண் என்றால் இது
தான் வரைவிலக்கணமோ ...?

சுகந்தி,
மட்டுவில் தெற்கு.

# வாழ்க்கையை இனிமையாக்குவது அவரவர் கைகளிலேயே உள்ளது



திருமதி றாபி விமலதாஸ்,
நவாலி.

வாழ்க்கை ஓர் இனிய உறவு. அந்த வாழ்க்கையை இனிமையானதாக்குவதும் இன்பமானதாக்குவதும் எம் கைகளிலேயே உள்ளது. ஒவ்வொரு மனிதனுக்கும் தனது வாழ்க்கையைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை உண்டு. அதற்குப் பெண்கள் மட்டும் விதிவிலக்கானவர்களில்லை.

ஒவ்வொரு பெண்ணும் தனது இல் வாழ்க்கையைத் தானே தேர்ந்தெடுக்கும் உரிமை பெற்றவள். பெற்றோர்களின் சொல்லுக்கமைய நடக்க வேண்டும் என்ற எண்ணத்தாலும் பெயர், பணம், புகழ் இவைக்கு ஆசைப்பட்டும் தம் வாழ்க்கையை கோட்டைவிட்ட பல பெண்கள் எம்மிடையே உள்ளனர்.

பெயர், பணம், புகழ் என்பன எமக்கு நல்லதொரு வாழ்க்கையை அமைத்துத் தருமா என்றால் அது கேள்விக்குரிய ஒன்றுதான். எவ்வளவு துன்பத்திலும் நல்லதொரு வாழ்க்கைத்துணை எமக்குக் கிடைத்து விட்டால் துன்பங் கூட எமக்கு இன்பம் தான். ஆனால் வாழ்க்கைத் துணையே துன்பமானதாக அமைந்து விட்டால் எவற்றைக் கொண்டும் அத னைச் சரிசெய்ய முடியாது. பின் வாழ் நாளே துன்பமானதாகிவிடும். இப்பூமியில் பிறந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும் வாழ்க் கையை இன்ப முடன் அனுபவித்து வாழ்வதற்குப் பிறந்தவர்கள். அதனால் அந்த வாழ்க்கையை எச்சந்தர்ப்பத்திலும் கோட்டைவிட்டு விடாதீர்கள் வாழ்க்கை வாழ்வதற்கே. அந்த வாழ்க்கையை நரகமாக்குவதும் சொர்க்கமாக்குவதும் உங்கள் கைகளிலேயே உள்ளது.

பெண்களே! சிறந்த முடிவுகளை உரிய நேரத் தில் எடுத்து சந்தோஷமான வாழ்க்கையை அமைத்து சிறப்புடன் வாழ்ந் திடுங்கள் இப்பூமிதனில் .

திலகத்துக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர்
'திலகம்',
உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள் .



# கங்காவின் கடிதங்கள்

அன்பின் கண்மணிக்கு,

உன்னை நினைக்கையில் எனக்குப் பெருமையாக இருக்கிறது. இரண்டு பெண் குழந்தைகளுடன் உன்னை தனி மரமாகத் தவிக்க விட்டுச் சென்றார் உனது கணவன். அந்தத் துன்பத்தை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளாது உனது பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விக் குறியாகமல் நேரிய பாதையில் செல்ல வைக்க சமூகத்துடன் எதிர் நீச்சல் போட்டு வெற்றி பெற்றுள்ளாய். இன்று உயர்ந்த மதிக்கத்தக்க இடத்தில் நீ இருக்கின்றாய் என்பதை அறிந்த எனது மகிழ்வுக்கு அளவேயில்லை. தாங்கள் இல்லாவிட்டால் பெண்களால் எதுவே இயலாது என்ற எண்ணம் கொண்ட ஆண்களுக்கு உன் போன்ற பெண்கள் படிப்பினையாக இருக்க வேண்டும்.இவ்வளவு காலமும் உன்னைத் தனியாக விட்டு சொல்லிக்கொள்ளாமலே சென்ற உன் கணவன் தற்போது உன்னுடன் வந்து வாழ விரும்புவதாகக் குறிப்பிட்டிருந்தாய்.

இந்த இடத்தில் நீ தீர்க்கமாகச் சிந்தித்து உனக்கும் உனது பிள்ளைகளுக்கும் தீங்கு விளைவிக்காத நல்லதொரு முடிவை எடுப்பாய் என எதிர்பார்க்கிறேன்.

அன்புடன்....
கங்கா.

# பெண்களுக்கு...



- பெண்ணின் கருவறையில் உருப்பெற்றவன் பெண்ணின் கருவறைக்கு உருக்கொடுக்கிறான்.
- பிரச்சினைகள் வழ்வின் தடைக்கற்கள் அல்ல; அவையே வெற்றியின் படிக்கற்கள் என்பதை பெண்கள் உணர வேண்டும்.
- மனைவி கணவனுக்கு ஆடையைப் போன்றவள்.
- பெண்களுக்கு வேதனைகளும் சோதனைகளும் ஆடவரின் கொடைகள்; ஆனால் இவற்றில் வீழ்ந்து புரளாமல் வீழ்ந்தாலும் எழவேண்டும்.
- சாதனைகளை நோக்கிய செயற்பாடு பெண்களின் மன உத்வேகத்தை அதிகரிக்கச் செய்யும்.

நவீந்திரகலா, லவ்லேன், உடுவில்.

## சுலொட்டட் ஆங்கில்ஸ் (SLOTTED ANGLES)



**நபிஸ் இண்டஸ்றிஸ்**
38/7, பழைய கஸ்பாவ வீதி,
ரட்ணபிட்டிய, பொரளஸ்கமுவ.
Tel : 0112517552/0777 721 552

**MHE இன்டர்நேஷனல்**
291, Old Moor St. Col - 12.
Tel : 0777 777 770

**ஜெயகிருஷ்ணா**
20, K.K.S Rd, சுன்னாகம்.
0212240221/0777722589

## AUTO PAINTING INSTRUCTORS & TECHNICAL ASSISTANTS

- Should have a Sound knowledge in Auto Paints
- Minimum 3 Yrs experience in similar capacity
- Preference will be given to those who are capable in using **DEBEER/ 2K PAINTS**
- Communicate in Tamil and English languages would be an advantage
- Should have a valid driving Licence
- Willing to work any part of the Island

## CLERKS ( INVOICE Dept.)

- Age below 26 yrs and should have excellent interpersonal Skills
- **Fluent in Tamil Language**
- Preference will be given to candidates with 2 Yrs experience in customer service
- Be able to work in computerized environment
- Good typing knowledge is must.

Apply with complete CV and **Indicating the post on the top left hand corner of the Envelope** to reach us within 7 days to the address below

General Manager,
**CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd.**
15, Noel Mendis Mawatha, Modarawila Industrial Estate, Panadura.

## கட்டடம் வாடகைக்கு

யாழ். ஆஸ்பத்திரி வீதியில், கண்டி வீதிக்கு சமீபமாக 3 பரப்பு காணியில் அமைந்துள்ள 5 அறைகள், இரு வர வேற்பறைகள், சமையலறை, 4 குளியலறைகள், வாகனத் தரிப்பிடம் (Garage) உடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அலுவலகங்கள், தனியார் நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள் விரும்பத்தக்கது.

தொடர்புகளுக்கு:- **0773604094**

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள MF- 8XXX இலக்க ஸ்கூட்டி பெப் விற்பனைக்குண்டு.

**தொடர்பு: 0776538060**

## ஊர்க்குஞ்சுகள் விற்பனைக்கு

தடுப்பூசி ஏற்றப்பட்ட முதல் தர கலப்பின ஊர்க்குஞ்சுகள் (ஒரு நாள்/ஒரு கிழமை) விற்பனைக்குண்டு. விலை ரூபா- 75/= இருந்து. மொத்தக் கொள்வனவுக்கு விநியோகம் இலவசம்.

தொடர்பு: 0217200616, 0773372146

## இறைச்சிக் கோழி விற்பனை

புறொய்லர், கல்பேட் இறைச்சிக்கோழிகள் மொத்தமாகவும் சில்லறையாகவும் மிகக் குறைந்த விலையில் பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்யப்பட்டது 450/= மட்டும்

**விஜயகுமார்.**
குளப்பிட்டி வீதி, ஆனைக்கோட்டை.

## அருள்முருகன் திருமண சேவை

Doctors, Engineers, Lecturers Accountants, அரச மற்றும் வங்கி உத்தியோகத்தர்கள் உட்பட உள்நாடு/ வெளிநாடு மணமக்கள் தேவைக்கு தொடர்பு:-0718475114. ஓய்வுநிலை ஆசிரியர் வழங்கும் ஓய்வுகால கௌரவ சேவை.

03, யாழ் வீதி , சிறாம்பியடி லேன், (Cosy Resta urant lane) பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

## வேலை ஆள்கள் தேவை

1] தச்சுத்தொழிலாளர்
2] பெயின்ரர்
3] ஸ்ரீல் பிற்றர்
4] தொழிலாளிகள்

நேர்முகத் தேர்வு 24.10.2011 திங்கள் காலை 10.00 மணி-01.00 மணிவரை.

**கே.கே.ஜே. தளபாடவிற்பனை நிலையம்**
391.கே.கே.எஸ். வீதி,
சிவன் கோயில் அருகில்,
யாழ்ப்பாணம். T.P 0779037203

## கட்டட நிர்மாண அலுவலர்களுக்கான பதவி வெற்றிடம்

கீழ்க்காணும் பதவிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தகுதியுடையவர்கள் எதிர்பார்க்கும் சம்பளம், தகைமை, அனுபவம் உட்பட சகல விவரங்களுடன் பணிப்பாளர், லைடல் கொன்ஸ்ரக்சன்ஸ், இல.472, பிரதான வீதி, சுண்டுக்குழி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

1. பொறியியலாளர் - 1
2. தொழில்நுட்பவியலாளர் - 5
3. களஞ்சியப் பொறுப்பாளர் - 1
4. வாகன சாரதி - 2

**லைடன் கொன்ஸ்ரக்சன்ஸ்**
472, பிரதான வீதி,
சுண்டுக்குழி,
யாழ்ப்பாணம்.
தொடர்பு: 011 3071407, 0777320799


## மரண அறிவித்தல்

திருமதி **கில்டா மங்களதாஸ்**



நாரந்தனை மேற்கைப் பிறப்பிடமாகவும், வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கில்டா மங்களதாஸ் 21.10.2011 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சேவியர் அருணாச்சலம்-மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும்,காலஞ்சென்றவர்களான பேதுருப்பிள்ளை- மேரிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், மங்களதாசின் அன்பு மனைவியும் ரமேஸ் (Holland) கொலற்றமினா (ஆசிரியை-வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் றஞ்சி(Holland),அன்ரனி ஜெயானந் (ஆசிரியர்-வவுனியா தமிழ் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்பு மாமியும், சாமுவேல்(Holland),சறோன் இவாஞ்சலின், இவோன் சேபா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற பெலிஸ்ரேஸ் லோறன்ஸ் மற்றும் அருட்சகோதரி ஜெனிவிவ் (Osanam H.F.C மட்டக்களப்பு), ஜேமின்பற்றிசியா ஆகியோரின் அன்பு மைத் துனியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க நிகழ்வுகள் நாளை 24.10.2011 திங்கட்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 3மணியளவில் வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் நடைபெறும் திருப்பலியின் பின்னர் பூதவுடல் வவுனியா இறம்பைக்குளம் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இறம்பைக்குளம்,வவுனியா.

தகவல்:
குடும்பத்தினர்

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## சுப்பிரமணியம் நடேசன்

(முன்னாள் முகாமையாளர் - ஏரோ எலக்ரிக்கல் மீடியா எலக்ரோமாட்)





தோற்றம் 08.01.1948
மறைவு 02.11.2010

அப்பா!

எம் ஞாபக அடுக்குகளில்
என்றுமே படர்ந்திருக்கும்
ஒரு இனிமையான உணர்வு

கொல்லங்கலட்டி,
தெல்லிப்பழை.

பிள்ளைகள்

# படங்கள் தரும் பதிவுகள்



நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட கலாசார விழாவில் புலவர் ம.பார்வதிநாதசிவத்துக்கு யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் 'கலைச்சுடர்' பட்டம் வழங்கிக் கௌரவிக்கின்றார். (ம-55)



உரும்பிராய் சைவப்பிரகாச வித்தியசாலையில் நடைபெற்ற வாணி விழாவில் சிறுமிகளின் செம்பு நடனம். (ம-135)



கொக்குவில் மத்திய சனசமூக நிலைய இந்து முன்பள்ளி நடத்திய ஆசிரியர் தினத்தில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் சிறுவர்களால் அழைத்து வரப்படுகின்றனர். (ம-100)



மட்டுவில் நுணாவில் கிராம அலுவலராக கடமையாற்றி ஓய்வுபெற்றுள்ள வே.துரைசிங்கத்துக்கு மட்டுவில் தெற்கு வளர்மதி சனசமூக நிலையத்தினர் அண்மையில் சேவைநலன் பாராட்டு விழாவை நடத்தினர். நிகழ்வில் புலவர் மு.பாலசுப்பிரமணியம், விழாத் தலைவர் சி.சிவதாசன் ஆகியோர் கிராம அலுவலருக்கு பாராட்டுப் பத்திரம் வழங்குகின்றனர். (ம-207)



சுன்னாகம் சூராவத்தை அறிவாலயா கல்வியகத்தில் தரம் -5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். விருந்தினராகக் கலந்துகொண்ட சுன்னாகம் நாகேஸ்வரி வித்தியாசாலை அதிபர் கு.ரவீந்திரன், ஆசிரியர் இ.தேவகுமார் ஆகியோருடன் மாணவர்கள் உள்ளனர். (ம-38)



தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வெற்றிவேல் துஷ்யந்தனின் ''மொழிபெயர்க்கப்படாத மௌனங்கள்'' கவிதை நூல் வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினரான காரைநகர் பிரதேச செயலர் கவிஞர் த. ஜெயசீலனிடம் இருந்து முதற்பிரதியை ரி.வி.எஸ். நிறுவனத்தைச் சேர்ந்த எட்வேட் ரகு பெற்றுக் கொள்கிறார். நூலாசிரியரும் உள்ளார். (ம-55)



கிளிநொச்சி அக்கராயன் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தில் பொது முகாமையாளராக இருந்து ஓய்வுபெற்ற கி.தருமலிங்கத்துக்கு சங்கத் தலைவர் க.மு.சுப்பிரமணியம் நினைவுக் கேடயம் வழங்கிக் கௌரவித்தார். ஓய்வுபெற்ற பொதுமுகாமையாளருடன் தலைவர் மற்றும் சங்கப் பணியாளர் உள்ளனர். (ம)



யாழ். பல்கலைக்கழக வெளிவாரி பட்டப்படிப்பு இறுதியாண்டு மாணவர்கள் மாற்று வலுவுடைய ஒருவருக்கான சைக்கிளை அண்மையில் யாழ். புதிய உயர் கல்லூரியில் வைத்து வழங்கினர். இதில் புதிய உயர் கல்லூரி நிர்வாகி அருள்நங்கை சண்முகநாதன் மற்றும் மாணவர்கள். (ம-319)

# நான்காம் ஆண்டு நினைவுதினம்



திருமதி
## பவானி பிரபானந்தன்

மலர்வு
13 - 01 -1973
உதிர்வு
06 - 11 - 2007
திதி: அபரபக்க துவாதசி

ஆண்டுகள் நான்கு உருண்டு ஓடினும்
பூண்ட உம் பக்தி நெஞ்சை உருக்குதே
மாண்புடன் நீங்கள் வாழ்ந்த வாழ்வுதான் என்னே
காண்பதெனியெப்போ உங்கள் நிழலை அம்மா

அன்புப் பிள்ளைகள்-
பி.பிரபானுசன், பி.பிரதிக்ஷா.

என் உயிரோடு உயிரான அத்வைதமே
அணுக்களுக்குள் கருக்கொண்ட அன்புச் செல்லமே
என் இதய தெய்வம் பவானியே
நீங்கள் விட்டுச் சென்ற கடமை பொறுப்பு அனைத்தையும்
கூற்றுவன் வந்து கூப்பிடும் வரைக்கும் நிறைவேற்றுவேன்.

*உங்கள் நினைவுகளைச் சுமந்து கொண்டு*
என்றும் உங்கள் அன்புக் கணவன்
ஆ.பிரபானந்தன்

(சி-5398)

# நிவாரணம் விநியோகம்

தென்மராட்சிப் பிரதேச சமுர்த்திப் பயனாளிகளுக்கான ஒக்ரோபர் மாதத்துக்கான நிவாரண உலர் உணவுப் பொருள்கள் அந்தந்த பலநோக்குக் கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

எதிர்வரும் 27 ஆம் திகதியுடன் கணக்குகள் முடிவுறுத்தப்படவுள்ளதால் இந்தத் திகதிக்கு முன்னர் தமக்குரிய நிவாரணப் பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ம-207)

# 4 ஆம் ஆண்டு நினைவு



## கிறிஸ்ரி ஜயந்தன்

மலர்வு -23 . 12 .1982
உதிர்வு- 23 . 10 . 2007

அன்பினில் விளைந்த ஆரமுதே - நீ பிரிந்து
ஆண்டுகள் நான்கு சென்றதையா
இன்னும் உன் நினைவுகள் - எம் மனதில்
நிழலாய் நின்று ஆடுதையா
ஈன்றெடுத்த தாயவளும் - உன் இனிய
உறவுகளும் கலங்கிப் போய் நிற்குதையா
உன்னருகில் நாம் வாழ எமக்கு வழியில்லை
என்றாலும் எமக்கு கனவாய் வந்து கதை கூறு
காலமெல்லாம் காத்திருப்போம் - ஜயந்தன்
நீ வருவாய் மலர்வாய் வாழ்வில் வளம் பெறுவாய்.

*இந்நாளில் உன் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்*

முதலாம் வட்டாரம்,
புங்குடுதீவு.

குடும்பத்தினர்.
அப்பா, அம்மா, தம்பிமார்.


# JAFFNA COLLEGE
## Undergraduate Department
## ENGLISH Language Unit

(முதன் முறையாக யாழ். நகரில்)

First Time in Jaffna Total English Education For Everyone

சகலருக்குமான ஆங்கிலக் கல்வி



UNIVERSITY of CAMBRIDGE
ESOL Examinations
KET (KEY English Test) A1/A2 level
PET (Preliminary English Test) B1
FCE (First certificate in English)B2
(சர்வதேச அங்கீகாரம் பெற்ற கற்கை நெறிகள்)

DIPLOMA IN INTERNATIONAL ENGLISH (Spoken AND General)
City & Guilds UK Examinations
A1/A2
B1/B2
(UK செல்வோருக்கான கற்கை நெறிகள்)

வெளிநாடுகளில் உயர் கல்வி கற்பதற்குரிய
PEARSON Education
PEARSON Academic English test
5 நாள்களுக்குள் பரீட்சை முடிவு
on - line Exam
IELTS Examinations
English for International Opportunity

City & Guilds (UK) பாடசாலை மாணவர்களுக்கான விசேட கற்கை நெறிகள்
Young Learners
Basic & Elementary levels
வயது 5 - 16 வரை
UNIVERSITY of CAMBRIDGE
ESOL Examinations
Young Learners English
Starters /Movers/Flyers

TEACHER Training Program (TKT)
ஆங்கில ஆசிரியர்களாக வர இருப்பவர்களுக்கான கற்கை நெறிகள்

DIPLOMA IN PROFESSIONAL ENGLISH
அரச, தனியார் உத்தியோகத்தருக்கான கற்கைநெறி

மேலதிக விவரங்களுக்கு
JAFFNA COLLEGE
Undergraduate Department
ENGLISH Language Unit
464, Hospital Road, Jaffna.

HOT LINE :
0776242966
021 222 3382
021 222 9149



# Career Opportunities in the Biomedical Field

We are an ISO 9001:2008 certified leading Medical Equipment Company which offers high quality health care products for various fields of the Medical Industry. Our multiple areas of diversification provide splendid opportunities for career development.

We are seeking the services of dynamic, result oriented and self motivated individuals to join our team in the following capacity.

## Sales Executives (Northern Province)

The ideal candidates should possess the following:

- G.C.E. (A/L) in Science stream.
- Part qualification in Marketing.
- At least 2 years of experience in sales/marketing.
- Experience in medical equipment/pharmaceutical industry will be an added advantage.

If you are interested, please forward your CV along with the names and contact details of two non related referees, indicating the post applied for on top left hand corner of the envelope or in subject line of email within 7 days of this advertisement to:

BMI

General Manager
Biomed International (Pvt) Ltd
No. 2A, Deal Place
Colombo 03
Email: sales@biomed-sl.com

AWARENESS



# மாபெரும் அதிரடி மலிவு விற்பனையும் விற்றுத்தீர்த்தலும்

## கவுஸ் ஒவ் செலெக்ஷன்

இல.22, நவீன சந்தை,
பெரியகடை வீதி, யாழ்ப்பாணம்.







| | விலை | மலிவு விலை |
|---|---|---|
| சில்க் சாறி W.Blouse | 850 | 500 |
| சில்க் சாறி W.Blouse | 1200 | 600 |
| கொட்டன் சாறி W.Blouse | 1250 | 890 |
| கொட்டன் சாறி W.Blouse | 1500 | 700 |
| சீக்குயின் சாறி W.Blouse | 2450 | 1000 |
| சீக்குயின் சாறி W.Blouse | 2800 | 1300 |
| சீக்குயின் சாறி W.Blouse | 3200 | 1500 |
| சாறி | 1100 | 700 |
| பஞ்சாபி | 1100 | 490 |
| பஞ்சாபி | 1200 | 500 |
| பஞ்சாபி | 1500 | 600 |

| | | மலிவு விலை |
|---|---|---|
| சோலிக்கிற் S.M.L | 1500 | 600 |
| ஸ்கேட் | 550 | 250 |
| ஸ்கேட் | 500 | 200 |
| ஸ்கேட் | 600 | 300 |
| பிளவுஸ் | 475 | 200 |
| பிளவுஸ் | 550 | 250 |
| பிளவுஸ் | 400 | 150 |
| லேடிஸ் T. சேட் | 350 | 100 |
| லேடிஸ் T. சேட் | 450 | 200 |
| லேடிஸ் T. சேட் | 500 | 250 |
| டெனிம் ரவுசர் (பெரிது) | 1700 | 900 |

| | விலை | மலிவு விலை |
|---|---|---|
| டெனிம் ரவுசர் (சிறிது) | 750 | 300 |
| டெனிம் ரவுசர் (சிறிது) | 900 | 350 |
| T. சேட் (Boys) | 400 | 200 |
| பேபி கவுண் | 650 | 350 |
| பாட்டி புறக் | 900 | 400 |
| சேட் | 900 | 450 |
| சூட்டிங் சைனிங் IL | 700 | 400 |

## காணி தேவை

உணவுத் தொழிற்சாலை நிறுவனத்துக்கு கிளிநொச்சி அல்லது அண்மித்த பகுதிகளில் A9 பாதையிலோ அல்லது சமீபமாகவோ 1-2 ஏக்கர் விஸ்தீரணம் உள்ள உறுதியுடன் கூடிய காணி உடனடியாகத் தேவை.

தொடர்பு : 0772078455
0777427563

---

மீன்பிடி மற்றும் விவசாய உற்பத்திகளுக்கு நிதானமான கட்டண வீதங்களில் போக்குவரத்துச் சேவைகள் கிடைக்கக் கூடியதாகவுள்ளன.

கொழும்பு ⟷ யாழ்ப்பாணம்

மட்டுப்படுத்தப்பட்ட குளிர்ச்சூழல் மற்றும் வெப்பம் (குளிரூட்டி) வாகனங்கள்

தொடர்பு கொள்ளவும்:
0777-778683 / 0776-701568

---

யா/சங்கானை கிழக்கு விக்கினேஸ்வரா வித்தியாசாலை

## பரிசளிப்பு விழா-2011

இடம் :- பாடசாலை மண்டபம்
காலம் :- 23.10.2011 ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணி
தலைமை :- திரு.பொ.தயாளந்தன் (அதிபர்)

**பிரதம விருந்தினர்**
உயர்திரு.ஆ.இராஜேந்திரன் அவர்கள்
(வலயக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)

**சிறப்பு விருந்தினர்**
உயர்திரு.சி.கந்தசாமி அவர்கள்
(கோட்டக் கல்விப் பணிப்பாளர், சண்டிலிப்பாய்)

**கௌரவ விருந்தினர்கள்**
திருமதி ரூபா உதயரட்ணம் அவர்கள்
(உதவிக் கல்விப் பணிப்பாளர், வலிகாமம்)
திரு கு.ஜெகநாதன் அவர்கள்
(அதிபர், யா/அளவெட்டி அருணாசலம் வித்தியாலயம்)

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம். இந்த நன்னாளில் இவர்களையும் வாழ்த்துகின்றோம். 2011, புலமைப்பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்றோர்



ஜெ.நிரோஜி 162 புள்ளிகள்



அ.ஜினிதா 152 புள்ளிகள்

க.லக்ஷாயினி-141 புள்ளிகள்
ச.குபேரன் -120 புள்ளிகள்
த.அனோஷா-128 புள்ளிகள்
த.நிலக்ஷன்-119 புள்ளிகள்
த.துவாரகன்-125 புள்ளிகள்
இ.வேனுசன்-102 புள்ளிகள்
உ.சஞ்சிகா -122 புள்ளிகள்

நிச்சாமம், சங்கானை. பாடசாலைச் சமூகம்

---

## Metro Travels

விசேட விமானக் கட்டணங்கள்

| | |
|---|---|
| Colombo-Chennai-Colombo | 12800 |
| Colombo-Tiruchirapally-Colombo | 13000 |
| Colombo-Doha | 22000 |
| Colombo-London | 42500 |
| Colombo-Toronto | 80500 |
| Colombo-Singapore-Colombo | 30500 |
| Colombo-Frankfurt | 40000 |
| Colombo-Milan | 56500 |
| Colombo-Rome | 55500 |
| Colombo-Paris | 60500 |
| Colombo-Zurich | 58500 |



All Taxes included, Credit Card Accepted With a Surcharge & Travel insurance.
Above Fares Are Subject to Seat Availability
Terms & Conditions Apply

மேலதிக தொடர்புகளுக்கு
METRO TRAVELS & TOURS PVT LTD
(Branch Office) No-62/33, Stanly Link Road, Jaffna.
Tel:-0212224647,0212220404, 0215673666,0215673555
Office Hours: Weekdays from 9.00 am to 5.00Pm
Saturday from 9.00 am to 1.30Pm

---

## வீடு விற்பனைக்கு

யாழ். புனித பொஸ்கோ பாடசாலையின் சமீபமாக நல்லூர் ஆலயச்சூழல், மாநகரசபை மாவட்ட செயலகம் உட்பட அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள், புகையிரத நிலையம், பிரபல கல்லூரிகள் என்பவற்றை ½km தூரத்துள் கொண்டமைந்ததான மருதடி வீதியில் 2 பரப்பு காணியுள் சுற்று மதில், கிணறு, குளியலறை, வாகனத் தரிப்பிட வசதிகள் உள்ளிட்ட 4 அறைகள் கொண்ட விசாலமான வீடு உடனடியாக விற்பனைக் குண்டு. வைத்திய சாலை, அலுவலகம், தனியார் கல்வி நிறுவனம் களஞ்சியசாலை இவற்றுக்கும் பொருத்த முடையதாகும்.

விலை நேரில் பேசித்தீர்மானிக்கப்படும்
தொடர்பு: 0775327636

## தவறி விட்டது

ஆலடி ஒழுங்கை, கோண்டாவில் கிழக்கு, கோண்டாவிலைச் சேர்ந்த திருமதி நிர்மலாதேவி அருள்நேசன் என்பவருடைய தே.அ.அ. (588172953 V) 17.10.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கும் கிளிநொச்சி ஆஸ்பத்திரிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்து தவவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 6154249

## வைத்தியம்

Gastro Esophageal Reflex Disorder (GERD) நெஞ் செரிவு, வயிறு எரிவு, அமிலத்தன்மை, Gastritis வயிற்றுப்புண், குடற்புண், வாதம், மூட்டு வலிகள், குத்து, வீக்கம், சளி, இருமல், Asthma, கடி, சொறி யாசிஸ் மூலம் கருத்தரியாமை, ஆண்மைக் கோளாறு, மனநோய்கள், கோரோசனை மாத்திரைகள் அனைத்துக்கும் பக்க விளைவு அற்ற அதியுயர் மூலிகை சிகிச்சை, சித்த

வைத்தியர் Dr.R.Sivagurunathan. 0777301669, வெள்ளவத்தை.

---

உடனடி வேலைவாய்ப்பு

i7Computers.
124.B,பலாலி வீதி. யாழ்ப்பாணம்.
(இலுப்பையடிச்சந்தி அருகில்)
0212224959, 0777683676

அனுபவமுள்ள Computer HardwareTechnician தேவை. கீழ்வரும் முகவரிக்கு உங்கள் விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவும்.

i7c@sltnet. lk

## வீட்டுடன் காணி விற்பனை

நல்லூர் செட்டித் தெரு நடுப்பகுதியில் அமைந்துள்ள 3 பரப்பு 5.3 காணி சகலவசதிகளும் கொண்ட வீட்டுடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0777201141

## வாடகை

*Jaffna* வில் வாடகைக்கு *Office Space/Lodge/ Prayer Center* இடம் உள்ளது. *Electricity Bill* தனியானவை *Vehicle Parking* உள்ளது.

தொடர்பு : 075 7131027

## வீடுகள் விற்பனைக்கு

தெகிவளையில் Galle Road இற்கு மிக அருகில் அமைதியானதும் பாதுகாப்பானது மான சூழலில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள Apartment இல் 3B/R, 2B/R மற்றும் 1B/Rவீடுகள் மிகவும் சாதாரண விலையில் எளிமையான கொடுப்பனவு முறையுடன் விற்பனைக்குண்டு. முன்பதிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலதிக விவரங்களுக்கு.

தொடர்பு கொள்க. 0777368764,

## காணி விற்பனைக்கு

கோப்பாய் வடக்கு பருத்தித்துறை வீதியில் 7 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.
தரகர் தேவையில்லை

தொடர்பு: 077 1304996.

## விற்பனைக்கு

நல்ல இன (*HOKOS SPANIJAL*) கொக்கோஸ் ஸ்பேனியல் இரண்டு மாதம் நிரம்பிய நாய்க்குட்டிகள் உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 077 6721687 (பகல்)
28, பாரதி வீதி, நாயன்மார்கட்டு (செம்மணி றோட்), யாழ்ப்பாணம்.

## கார் விற்பனைக்கு

*17-xxxx* இலக்கமுடைய *White Colour Full Option (P.S, P.W, P.M, P.S)* உடைய *Toyota - Corona Car* விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 072 3635810.

## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள (*PASSION- PLUS - JM- XXXX*) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு.

குறிப்பு: [பிளேற்றிங் செய்யப்பட்டுள்ளது.]

தொடர்பு: 077 9382868.

## மணமகள் தேவை

யாழ். *R.C 1979* இல் பிறந்த *HNDA* படித்து நிரந்தரத் தொழில் புரியும் மணமகனுக்கு படித்த மணமகள் தேவை.

தொடர்பு: 078 3255715

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

திருமதி கலைவாணி புஸ்பராஜன் (சங்கீத ஆசிரியர்)



யா/தேவரையாளி இந்துக்கல்லூரி.

வடமராட்சி வலயத்தின் அதிசிறந்த சங்கீத ஆசிரியராகத் தெரிவுசெய்யப்பட்டு உலக ஆசிரியர் தினமாகிய 06.10.2011 அன்று அலரி மாளிகையில் ஜனாதிபதியிடம் "ஆசிரியர் பிரதீபா பிரபா" கௌரவ விருதைப் பெற்ற திருமதி கலைவாணி புஸ்பராஜன் அவர்களை பாராட்டி வாழ்த்துவதோடு அவர் மேன்மேலும் பல சிறப்புகளையும் பெற்று பல்லாண்டு காலம் நலமுடன் வாழ இறைவனை வேண்டி மனதார வாழ்த்துகிறோம்.

வே.மகேஸ்வரன் குடும்பம், வை.பாலகிருஷ்ணன் குடும்பம்,
மா.மகிழ்ராஜன் குடும்பம், ப.முகுந்தன் குடும்பம்.

---

## பதவி வெற்றிடம்

*P.C.HOUSE* நிறுவனத்தில்.

01. அலுவலக இணைப்பாளர்: (*Office Cordinator, Female Jaffna*)
கணினி அறிவு. (*M.S.Office*)
ஆங்கிலம் எழுத, வாசிக்கத் தெரிந்திருத்தல் வேண்டும்.
02. பாரவூர்திச் சாரதி -கொழும்பு - *Lorry* வயது 25-45
சம்பளம் 20,000.00 தங்குமிட வசதி, மேலதிக படி 350.00
அனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை.

விண்ணப்பங்களை 24.10.2011 திங்கள் முதல் கீழுள்ள முகவரிக்கு நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ அல்லது மின் அஞ்சல் ஊடாகவோ விண்ணப்பிக்கலாம்.

*P.C.HOUSE PLC, 1 K, Stanley Road, Jaffna.*
*T.P.: +94214920572, Fax.: +94212226671, Mobile: +94777555855, Email:- u_shukoor@pch.lk., jaffna@pch.lk.*

---

## சேவை

**பணத்தினை கொடுத்து ஏமாறாதீர்கள்!**

நாட்டின் பெயரை மட்டும் சொல்லுங்கள் அரசாங்க சட்ட விதிகளுக்கு அமைவாக எவ்வாறு அந்நாட்டிற்கு செல்ல வேண்டும் என்பதை நாம் சொல்வோம்!

**Student Visa / Visit Visa / Tourist Visa / Business Visa / Dependent Visa / Settlement Visa / Visa refused** ஆனவர்களும் தொடர்பு கொள்ளலாம். அனுபவமுள்ள ஆலோசகர்கள். சட்டத்தரணிகளால் ஆலோசனைகள் வழங்கப்படும். மாணவர்கள் இயலுமானவரை பெற்றோர்களுடன் வாருங்கள்.

Worldwide Educational Consultants
Worldwide Educational Consultants
# 527, Galle Road, Colombo - 06. Sri Lanka
Mobile : 0771 953 366 / 0778 526 178
Tel : 0112 361 951

---

## வாழும் கலைப் பயிற்சி

மூச்சுப்பயிற்சி, பிராணாயாமா, சுதர்ஷனகிரியா, தியானம், யோகா.



**பயிற்சியின் பலன்கள்:**

* அழுத்தமற்ற அமைதியான மனம், ஆரோக்கியமான உடல்
* பேரானந்தம், ஆர்வம், உத்வேகம்
* தன்னை உணர்தலும், வாழ்வில் மறுமலர்ச்சியும்
* வீட்டிலும், வேலைத்தலத்திலும் சுமூக உறவு
* மற்றவரிடத்திலும் பழகும் விதத்தில் மேம்பாடு
* உடலிலும் மனதிலும் சக்தி அதிகரித்தல்
* படைப்பாற்றல் தெளிவான சிந்தனை
* கல்வியிலும் வேலையிலும் கவனம் அதிகரித்தல்
* நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பு

காலை : 24.10.2011 திங்கட்கிழமை மாலை 5.00 (அறிமுகவுரை)
பயிற்சிகள் : 25.10.2011 செவ்வாய்க்கிழமை தொடக்கம் 29.10.2011 சனிக்கிழமை வரை
நேரம் : காலை 6.00-8.30 மணிவரை
10.00 - 12.30 மணிவரை
: மாலை 2.00 - 4.30 மணிவரை
5.00 - 7.30 மணிவரை
இடம் : மகேஸ்வரன் மணி மண்டபம்
நல்லூர் கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி
தொலைபேசி : 0770474757/0777740593

குறிப்பு:- ஏற்கனவே பயிற்சி பெற்றவர்களுக்கான சுதர்ஷனகிரியா வகுப்பு இன்று (ஞாயிற்றுக்கிழமை) காலை 10.30-12.30 மணிவரை **மகேஸ்வரன் மணிமண்டபத்தில்** நடைபெறும்.

---

## பாராட்டி வாழ்த்துகின்றோம்



**திருமதி கோதை நகுலராஜா**

கொழும்பு அலரி மாளிகையில் 06.10.2011 இல் நடைபெற்ற சர்வதேச ஆசிரியர் தின விழாவில் கௌரவ ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் "பிரதீபா பிரபா" விருது பெற்ற கொழும்பு இராமநாதன் இந்து மகளிர் கல்லூரி அதிபர் திருமதி கோதை நகுலராஜா (B.A.Econ.spl) Dip.in.Edu, PGDE(MINIPE) S.L.E.A.S.M.A.T.E) அவர்களை மனதாரப் பாராட்டுவதுடன் இவர் மேன்மேலும் பல பட்டங்கள் பெற்று நீடுழிகாலம் வாழ வாழ்த்துகிறோம்.

சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

வாழ்த்துவோர்
த.சபாநாயகம்(நில அளவையாளர்)
தந்தை, சகோதரர்கள், மைத்துனிகள்.

# அரச அதிபர் கிண்ணத்துக்கான கிரிக்கெட் நேற்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக். 23

யாழ். மாவட்ட செயலக நலன்புரிக் கழகத்தினால் நடத்தப்படுகின்ற 15 பந்துப் பரிமாற்றம் கொண்ட மென்பந்துக் கிரிக்கெட் சுற்றுப்போட்டி நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டங்களில் கரவெட்டிப் பிரதேச செயலக அணியை எதிர்த்து கோப்பாய் பிரதேச செயலக அணியும், 10 மணிக்கு காரைநகர் உ.அ. அதிபர் பணிமனை அணியை எதிர்த்து சாவகச்சேரி பிரதேச செயலக அணியும், 12.30 மணிக்கு தெல்லிப்பழை பிரதேச செயலக அணியை எதிர்த்து சங்கானைப் பிரதேச செயலக அணியும் மோதிக்கொண்டன.

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு யாழ்ப்பாணம் பிரதேச செயலக அணியை எதிர்த்து ஊர்காவற்றுறை உ.அ. அதிபர் பணிமனை அணியும், 10.30 மணிக்கு நல்லூர் பிரதேச செயலகஅணியை எதிர்த்து வேலணை பிரதேச செயலக அணியும், 12.30 மணிக்கு சண்டிலிப்பாய் பிரதேச செயலக அணியை எதிர்த்து உடுவில் பிரதேச செயலக அணியும் மோதவுள்ளன.

அடுத்த வாரம் நெடுந்தீவு உ.அ.அதிபர் பணிமனை அணியை எதிர்த்து பருத்தித்துறை பிரதேச செயலக அணியும் மருதங்கேணி உ.அ. அதிபர் பணிமனை அணியை எதிர்த்து மாவட்ட செயலக அணியும் மோதவுள்ளன.

ஒவ்வொரு போட்டியிலும் வெற்றிபெறும் அணி மூலமே காலிறுதி, அரையிறுதி, இறுதிப் போட்டிகளுக்கான அணிகள் தெரிவு செய்யப்படும். (த-86)

# போராடித் தோற்றது யாழ்ப்பாணம்

வலி.வடக்கு, ஒக். 23

இலங்கை இளைஞர் சேவை மன்றம் அகில இலங்கை இளைஞர் சேவைகள் மன்றக் கழகங்களுக்கு இடையே நடத்தப்படும் பெண்களுக்கான கூடைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாண மாவட்ட அணி கடுமையான போராட்டத்தின் பின்னர் தோல்வியடைந்துள்ளது.

கொழும்பு மகரகம தேசிய விளையாட்டரங்கில் நடைபெற்ற போட்டியில் மட்டக்களப்பு மாவட்ட அணியும் யாழ்ப்பாண மாவட்ட அணியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்டன. இறுதிவரை எந்த அணி வெற்றி பெறும் என்ற அளவுக்கு ஆட்டம் விறுவிறுப்பாக இருந்தது.

இரு அணிகளும் மாறி மாறி புள்ளிகளைப் பெற்று ரசிகர்களைப் பரவசத்தில் ஆழ்த்தியதுடன் ஆட்டத்தை விறுவிறுப்பாகவும் கொண்டு சென்றன.

இறுதி நிமிடத்தில் யாழ். மாவட்ட அணி எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்காத நிலையில் மட்டக்களப்பு மாவட்ட அணி 21;10 என்ற புள்ளிகள் அடிப்படையில் யாழ். மாவட்ட அணியை வெற்றிகொண்டு இரண்டாம் சுற்றில் விளையாட தகுதி பெற்றுள்ளது. (த-86)

# 14,18 வயதுப் பிரிவுகளில் ஹென்றியரசர் அணி வெற்றி

வலி.வடக்கு, ஒக்.23

இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரிக்கும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையே நடைபெற்ற சிநேகபூர்வ உதைபந்தாட்டப் போட்டியில் இரு பிரிவுகளில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் ஒரு பிரிவில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் வெற்றி பெற்றன. ஒரு பிரிவு ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது.

14 வயதுப்பிரிவினருக்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 03:00 என்ற கோல்கணக்கில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியை வென்றது.

16 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரி 01:00 என்ற கோல்கணக்கில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியை வென்றது.

18 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இள்வாலை புனித ஹென்றியரசர் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியை வென்றது.

21 வயதுப் பிரிவினருக்கான போட்டியில் இளவாலை புனித ஹென்றியரசர் கல்லூரியும் ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியும் தலா ஒரு கோலைப்பெற்று ஆட்டம்சமநிலையில் முடிவடைந்தது. (த-86)

# அச்சுவேலி ஸ்ரார் அணியை வென்றது ஆவரங்கால் இந்து

மல்லாகம் கோட்டைக்காடு ஸ்ரீமுருகன் விளையாட்டுக் கழகம் இரண்டாவது தடவையாக அமரர் ஜெகநாதன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக யாழ்.மாவட்ட கரப்பந்தாட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையே நடத்தும் கரப்பந்தாட்ட காலிறுதி ஆட்டமொன்றில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழகம் வெற்றிபெற்றது.

மல்லாகம் ஸ்ரீ முருகன் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெற்ற போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகமும், அச்சுவேலி ஸ்ரார் விளையாட்டுக் கழகமும் மோதிக் கொண்டன.

ஐந்து சுற்றுக்களைக் கொண்ட இந்தப் போட்டியில் ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 03:01 சுற்று என்ற அடிப்படையில் வெற்றி பெற்றது.

முதல் இரண்டு சுற்றுக்களை ஆவரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக் கழகம் 25:17, 25:18 புள்ளிகள் என்ற அடிப்படையில் வென்ற போதிலும் மூன்றாம் சுற்றைக் கவனயீனமாக விளையாடியதால் கோட்டை விட்டது.

ஆக்ரோசத்துடன் விளையாடிய ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 26:24 புள்ளிகள் என்ற அடிப்படையில் மூன்றாம் சுற்றில் வெற்றி பெற்றது.

நான்காவது சுற்றை வெல்ல வேண்டும் என்ற துடிப்புடன் எதிரணியை எதிர்கொண்ட ஆவரங்கால் இந்துஇளைஞர் விளையாட்டுக்கழகம் 25:12 புள்ளிகள் என்ற அடிப்படையில் வெற்றிபெற்றது. (த-86)

# மூன்று பிரிவுகளில் தங்கம்



யாழ்ப்பாணம்,ஒக்.23

இலங்கைகராத்தே சம்மேளனம் நடத்திய வட மாகாணத்துக்கான கராத்தே சுற்றுப் போட்டி கடந்த வாரம் யாழ்.அடைக்கல அன்னை ஆலய மண்டபத்தில் இடம் பெற்றது.

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் பங்குபற்றிய இந்தப் போட்டி காட்டா, குமுக்காட்டா, சண்டை என மூன்று பிரிவுகளாக நடைபெற்றன. இதில் யாழ்ப்பாணம் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் தரம் 3 இல் கல்வி பயிலும் மாணவன் விஜயராஜ் நிவேதன் மூன்று பிரிவுகளிலும் முதலிடத்தைப் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுக் கொண்டார். இவர் 2010 ஆம் ஆண்டு இலங்கை தேசிய ரீதியிலான கராத்தே சுற்றுப்போட்டியில் 'பெஸ்ற் எல்ற்' சான்றிதழ் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (த-23)

# கிளிநொச்சி ம.வி வென்றது

யாழ்ப்பாணம், ஒக்.23

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும், கிளிநொச்சி மகாவித்தியாலய 13 வயது பிரிவு அணிக்கும் இடையிலான சிநேகபூர்வமான 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது.

சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் இடம் பெற்ற ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற கிளிநொச்சி மகாவித்தியாலய அணி களத்தடுப்பைத் தீர்மானித்தது.

இதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய சுன்னாகம் ஸ்கந்தவரோதயக்கல்லூரி அணி 30 ஓவர்கள் நிறைவில் ஆறு விக்கெட்டுக்களை இழந்து 116 ஓட்டங்களைப் பெற்றது.

இதில் றைமன் 40 ஓட்டங்களையும் ரவீந்திரன் 13 ஓட்டங்களையும், தனேஸ் 16 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் கிளிநொச்சி மகாவித்தியாலய அணி சார்பாக நிதுஷன், தனுஷன் தலா 2 விக்கெட்டுகளையும், சுவிற்சன், சருஷன் தலா ஒரு விக்கெட்டுகளை வீழ்த்தினர்.

117 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய கிளிநொச்சி மகாவித்தியாலய அணி 26 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுகளை இழந்து 117 ஓட்டங்களை மட்டும் பெற்றது.

இதில் டிலக்சன் 22 ஓட்டங்களையும், கஜீவன் 28 ஓட்டங்களையும், சுவிற்ஸ்சன் 11 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பந்து வீச்சில் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி சார்பாக றைமன் 3 விக்கெட்டுகளையும், ரவீந்திரன் 2 விக்கெட்டுகளையும் தனுஷன் ஒரு விக்கெட்டையும் தமது அணி சார்பாக வீழ்த்தினர். (த-23)

# வயாவிளான் ம.வி, அருணோதயா இறுதியாட்டத்தில் மோதத் தகுதி

வலி.வடக்கு, ஒக்.23

தெல்லிப்பழை கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெறும் 16 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்ட இறுதிப்போட்டியில் விளையாட வயாவிளான் மத்திய மகாவித்தியாலயமும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் தகுதி பெற்றுள்ளன.

அரையிறுதி ஆட்டங்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றன.

தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்துக்கும் இடையே நடைபெற்ற போட்டி ஆட்டத்தில் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் வெற்றி பெற்றது.

வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் முதல்பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களையும் இரண்டாம் பாதி ஆட்டத்தில் இரண்டு கோல்களையும் பெற்றது.

மகாஜனக் கல்லூரி கோல் பெற எடுத்த முயற்சிகள் எவையும் கைகூடாமையால் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம் 04:00 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

மற்றுமொரு அரையிறுதி ஆட்டத்தில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியும் அளவெட்டி அருணோதயாக் கல்லூரியும் மோதிக் கொண்டன.

போட்டி ஆரம்பமாகி முடிவடையும் வரை இரு அணிகளும் விறுவிறுப்பாக மோதிக் கொண்டன.

முதல் பாதி ஆட்டத்தில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி தனக்குக் கிடைத்த தண்டனை உதையொன்றை உரிய முறையில் பயன்படுத்தி கோல் ஒன்றைப் பெற்றுக் கொண்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் இரு அணிகளுக்கும் சவாலானதாக அமைந்தது. இரு அணிகளும் துடிப்புடன் மோதிக் கொண்ட போதிலும் கோல்களைப் பெறமுடியவில்லை.

ஆட்ட நிறைவில் அளவெட்டி அருணோதயாக் கல்லூரி 01:00 என்ற கோல் கணக்கில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரியை வெற்றி பெற்று இறுதிப் போட்டியில் விளையாடத் தகுதி பெற்றுள்ளது. (த-86)

# ஸ்ரான்லி அணியை வென்று கொக்குவில் இந்து சம்பியன்

வலி.வடக்கு, ஒக்.23

நல்லூர் கல்விக் கோட்டப் பாடசாலை அணிகளுக்கு இடையே நடைபெற்ற 14 வயதுப்பிரிவினருக்கான உதைபந்தாட்டப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரி கோட்டச் சம்பியனாகியது.

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் கொக்குவில் இந்துக் கல்லூரியும் யாழ்ப்பாணம் ஸ்ரான்லிக் கல்லூரியும் மோதிக்கொண்டன.

இரு அணிகளும் கடுமையாக மோதிக் கொண்ட போதிலும் கொக்குவில் இந்துக் கல்லூரி தனது நுட்பங்களை பயன்படுத்தி வெற்றியை தனதாக்கிக் கொண்டது.

முதல் பாதி ஆட்டத்தில் கொக்குவில் இந்து ஒரு கோலைப் பெற்று முன்னணியில் காணப்பட்டது.

இரண்டாம் பாதி ஆட்டம் ஆரம்பமாகியதும் இரு அணிகளும் உத்வேகத்துடன் மோதிக் கொண்டன. கொக்குவில் இந்துக் கல்லூரி மீண்டும் ஒரு கோலை பெற்று வெற்றியை உறுதிப்படுத்திக் கொண்டது.


ஆனாலும் ஸ்ரான்லிக் கல்லூரி இறுதி வரை மனம் சோராமல் விளையாடி ரசிகர்களின் பாராட்டைப் பெற்றது.

ஆட்ட நிறைவில் கொக்குவில் இந்துக் கல்லூரி 02:00 என்ற கோல்கணக்கில் ஸ்ரான்லிக் கல்லூரியை வெற்றி பெற்று கோட்ட சம்பியனாகியது.

மூன்றாம் இடத்தை யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி பெற்றுக் கொண்டது.

(த-86)

# சங்கா இரட்டைச் சதம் சமநிலையில் ஆட்டம்



இரட்டைச் சதம் அடித்தவேளையில் சங்ககார...

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான முதலாவது டெஸ்ட் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்துள்ளது. இலங்கை அணியின் சார்பில் இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சங்ககார இரட்டைச் சதம் குவிக்க இந்த ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. இரண்டாவது இன்னிங்ஸில் இலங்கை அணி சகல இலக்குகளையும் இழந்து 483 ஓட்டங்களைப் பெற்றது.

இலங்கை, பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான டெஸ்ட், ஒரு நாள், ரி-20 ஆட்டங்கள் கொண்ட தொடர் இடம்பெற்று வருகின்றது. இதில் முதலாவது டெஸ்ட் ஆட்டம் அபுதாபியில் கடந்த 18 ஆம் திகதி ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற பாகிஸ்தான் அணியின் தலைவர் மிஷ்பா உல் ஹக் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி பாகிஸ்தானின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் 197 ஓட்டங்களுக்குள் சுருண்டது. இலங்கை அணி சார்பில் மத்தியூஸ் ஆட்டமிழக்காமல் 52 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டார். பரணவிதாரன 37, மஹேல 28 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். பந்து வீச்சில் யுனைட் கான் 5, சயிட் அஜ்மல், உமர் குல் தலா 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இன்னிங்ஸை தொடர்ந்த பாகிஸ்தான் அணிக்கு ஆரம்பத்திலிருந்து தொடர்ச்சியாக பலமான துடுப்பாட்ட அடித்தளத்தினை அமைத்தனர். அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான ரபீக் உமர் இரட்டைச் சதம் அடித்து அசத்தினார். ரபீக் உமர் 236, மொஹமட் ஹபீஸ் 75, அஷார் அலி 70 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர். இதன் மூலம் பாகிஸ்தான் அணி 6 இலக்குகளை மாத்திரம் இழந்து 511 ஓட்டங்களைக் குவித்தது. பந்து வீச்சில் ஹேரத் 3 இலக்குகளையும், வெலகெதர 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

314 ஓட்டங்கள் பின்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடங்கிய இலங்கை அணி ஆட்டம் ஆரம்பித்தவுடனேயே தனது முதலாவது இலக்கை பறிகொடுத்தது. இருப்பினும் அதன் பின்னர் இணைந்த திரமன்னே, சங்கா ஜோடி பலமான இணைப்பாட்டத்தை வழங்கியது. 153 ஓட்டங்கள் பகிரப்பட்ட நிலையில் திரிமன்னே 68 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து நுழைந்த மஹேல 4, டில்ஷான் 9, மத்தியூஸ் 22 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 233 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளை இழந்து தடுமாறியது.

பின்னர் நுழைந்த பிரசன்ன ஜெயவர்தன, சங்ககாரவுடன் இணைந்து இலங்கையை தடுமாற்றத்திலிருந்து மீட்டெடுத்தனர். இந்த ஜோடி 6 ஆவது இலக்குக்காக 201 ஓட்டங்களை இணைப்பாட்டமாக பகிர்ந்து பாகிஸ்தானின் வெற்றியில் மண் அள்ளிப்போட்டது. இவர்களில் சங்காவின் ஆட்டமிழக்கும் வாய்ப்புக்கள் 4 இனை தவறவிட்டதுடன் பிரசன்னவின் 2 வாய்ப்புகளையும் பாகிஸ்தான் அணி தவறவிட இலங்கை அணி வலுவான நிலையை அடைந்தது.

சிறப்பாக ஆடிய சங்கா சர்வேதச டெஸ்ட் அரங்கில் 8 ஆவது இரட்டைச் சதத்தை பூர்த்தி செய்தார். இறுதியில் இலங்கை அணி 434 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் 6 ஆவது இலக்கு வீழ்த்தப்பட்டது. சங்ககார 18 நான்கு ஓட்டங்களுடன் 211 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார். மறுமுனையில் சங்காவுடன் இணைந்து ஆடிய பிரசன்ன சர்வேதச அரங்கில் 5 ஆவது சதத்தை கடந்தார். பின்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி இறுதியில் 483 ஓட்டங்களுக்கு சகல இலக்குகளையும் இழந்தது. பிரசன்ன ஜெயவர்தன 12 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 120 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்தார். பந்து வீச்சில் பாகிஸ்தான் அணி சார்பில் உமர் குல் 4 இலக்குகளை கைப்பற்றினார்.


170 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய பாகிஸ்தான் அணி ஒரு இலக்கினை இழந்து 21 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டம் முடிவடைந்தது. முதல் இன்னிங்ஸில் இரட்டைச் சதம் குவித்த ரபீக் உமர் 2 ஓட்டங்களுடன் வெலகெதரவின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

இறுதியில் ஆட்டம் சமநிலையில் முடிவடைந்தது. ஆட்ட நாயகனாக சங்ககார தெரிவானார். (15)







வடமாகாண விளையாட்டுத் திணைக்களத்தின் வர்ண இரவுகள் நிகழ்ச்சி நேற்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது. நிகழ்வில் கௌரவ விருந்தினராக கலந்து கொண்ட ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி, வடமாகாண பிரதம செயலாளர் ஆ.சிவசுவாமி, ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன் ஆகியோர் அழைத்து வரப்படுவதை முதலாவது படத்திலும்
சர்வதேச மட்ட வலைப்பந்தாட்ட போட்டியில் 6 போட்டிகளில் 290 புள்ளிகளைப் பெற்ற சிவலிங்கம் தர்சினிக்கு மோட்டார் சைக்கிளை வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ சந்திரசிறி அன்பளிப்பாக வழங்குவதை இரண்டாவது படத்திலும்
2011 இடம்பெற்ற தேசிய மட்ட பெண்களுக்கான உடற்பயிற்சிப் போட்டியில் வெற்றியீட்டி சாதனை புரிந்த மாணிப்பாய் மகளிர் கல்லூரி அதிபரிடம் ஆளுநர் காசோலை வழங்குவதை மூன்றாவது படத்திலும் நிகழ்வில் கலந்துகொண்ட விருந்தினர்களை இறுதிப் படத்திலும் காணலாம். (86-23)

## சீனப் பிரசன்னம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒத்துழைப்பை இலங்கை அதிகரித்து வருவது குறித்து தமது நாடு கவலை கொண்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கைக்கு நெருங்கிய நட்பு நாடாக இருந்த அமெரிக்கா இப்போது, திடீரென எதிரான நிலைப்பாட்டை கொண்டிருப்பதற்கான காரணம் என்ன என்று கேள்வி எழுப்பப்பட்ட போதே சீன - இலங்கை உறவு குறித்து அமெரிக்கா கொண்டுள்ள கவலையை அவர் வெளிப்படுத்தினார்.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் அதிகரித்து வரும் சீன ஆதிக்கம் அமெரிக்காவுக்கு மிக கவலை தருவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

விடுதலைப் புலிகள் இலங்கையில் தோற்கடிக்கப்பட்டாலும் அவர்கள் பல்வேறு நாடுகளிலும் தமது முன்னணி அமைப்புக்கள் ஊடாக இன்னும் உயிர் வாழ்கின்றனர் என்று குறிப்பிட்ட கிங்ஸ்டன் இது குறித்துக் கவனம் செலுத்தப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

(உ-10)

## புலனாய்வாளர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அந்த வீட்டுப் பெண் அணிந்திருந்த இரண்டு பவுண் சங்கிலி மற்றும் இரண்டு கைத்தொலை பேசிகள் என்பவற்றை பறித்துக் கொண்டு தப்பிச் சென்றுள்ளனர்.

சம்பவம் தொடர்பாக முழங்காவில் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஒ-10-6)

## தீபாவளியை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைப்பு அமைச்சர் சந்திரசிறி கஜதீர நேற்று தெரிவித்தார்.

போரின் பின்னர் சரணடைந்த மற்றும் கைதுசெய்யப்பட்ட 11 ஆயிரம் முன்னாள் போராளிகளில் பெரும்பாலானவர்களை புனர்வாழ்வுக்குப் பின்னர் விடுவித்து விட்டோம் என்று அமைச்சர் மேலும் தெரி வித்தார்.

டிசெம்பர் 31 திகதியுடன் முன்னாள் போராளிகளுக்குப் புனர்வாழ்வளிக்கும் பணிகள் முடிவடைந்து விடும் என்று அரசு ஏற்கனவே அறிவித்தது. எனினும் அதை விடவும் விரைவாக "இந்தப் பணிகள் முடிவடைந்து விடும் எனத் தாம் கருதுவ தாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

(உ-10)

## மெக்கானிக் தேவை

வவுனியா மற்றும் கிளிநொச்சி பிரதேசங்களில் அமைந்துள்ள எமது நிறுவனத்துக்கு மோட்டார் சைக்கிள் மெக்கானிக் தேவை.

★வயதெல்லை 18-25.
★கொழும்பில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படும்.
★திறமைக் கேற்ப ஊதியம் வழங்கப்படும்.
★முச்சக்கரவண்டி (ஓட்டோ) திருத்தும் அனுபவம் உள்ளவர் களும் விண்ணப்பிக்கலாம்.

T.P:0759790051

## தேவை

எமது நிறுவனத்தில் கடமை ஆற்ற கணினி அறிவுள்ள ஒருவரும் விற்பனையாளர் ஒரு வரும் தேவை. விரும்புவோர் நேரில் வரவும்.

விநாயகா தொலைத்தொடர்பு நிலையம் &
பல்பொருள் விற்பனை நிலையம்,
ம.ம.வி.வீதி,நெல்லியடி. T.P.0750390309

## பணிநிலை வேண்டுகைகள்

எமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை
✸துடிப்பு மிகு இளைஞர்கள் - விருப்பப்படு கிறரர்கள்
✸துடிப்புத் தன்மைக்கும் திறமைக்கும் ஏற்ப கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும். ஆர்வமுடையோர் கிழமைநாள்களில் உடன் நேரில் வரவும்

ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர்ஸ்,
212,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.





## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த (24.09.2011) சனிக்கிழமை சிவபதமெய்திய எமது குடும்பத்தின் ஒளி விளக்கு

அமரர்

**விநாசித்தம்பி நவரத்தினம்**



அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று [23.10.2011] ஞாயிற்றுக் கிழமை கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும் சபிண்டீகரணம் நாளை [24.10.2011] திங்கட்கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற விருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அவரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தோற்றம் 17.05.1955 — மறைவு 24.09.2011

விடத்தற்பளை,
மிருசுவில். மகன்-ந.நவரூபன்.

## கண்ணீர் அஞ்சலி

### இராமு ஆழ்வாப்பிள்ளை
(குமாரசுவாமி)

*(முன்னாள் உறுப்பினர், கட்டைவேலி கிராம சபை).*


தவமகனே தலைமகனே தவிக்கவிட்டுச் சென்றாயே
சிவனைச் சேர்ந்தாயோ சிறகடித்துப் பறந்தாயோ
கவலையிலே கதறுகிறோம் கண்திறவாய் கலைமகனே
சகதியிலே விழுந்திடாமல் சன்மார்க்கம் காட்டுமையா
கோவிற்கடவை கதறியழ கொள்ளியை
வைப்போமோ
நாவினிக்க தேவாரத்தை நவின்றிடுவாய்
குலமகனே
காவியமாய் வாழ்ந்திட்டாய் கனிதரு
மரமானாய்
பாவிகள் நாமேன் செய்வோம் பரமனின்
விதியதுவோ
அஞ்சா நெஞ்சனே அகல்விளக்கே மறைந்தாயோ
தஞ்சமென வந்தோருக்கு தவறாது உதவிடுவாய்
நெஞ்சு வெடிக்குதப்பா நிலை குலைந்திட்டோம்
வஞ்சமில்லாமல் வாழ்ந்திட்டாய்
உன் வதனத்தை மறப்போமோ

**உறவினர்கள்.**

## மரண அறிவித்தல்

### இராமு ஆழ்வாப்பிள்ளை (குமாரசுவாமி)

*(முன்னாள் உறுப்பினர், கட்டைவேலி கிராம சபை)*



கோவிற்கடவை, துன்னாலை மத்தியைச் சேர்ந்த இராமு ஆழ்வாப்பிள்ளை 21.10.2011 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமு- கதிராசி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை- பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற பாக்கியத்தின் அன்புக் கணவரும், இராமசந்திரன், புஸ்பராணி, காலஞ்சென்ற புஸ்பலோஜினி மற்றும் புஸ்பரஞ்சினி (லண்டன்), புஸ்பரீற்றா(லண்டன்), இராமசேது(கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், லீலாவதி, தவரட்ணம், கருணாகரன், விக்கினேஸ்வரராஜா(லண்டன்), ஆறுமுகதாசன்(லண்டன்), சோபனா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான பூரணம், வீரவாகு ஆகியோரின் அன்புச் சகோதரனும், திருப்பதியம்மா (அமெரிக்கா), செல்லம்மா ஆகியோரின் அன்புத் தாய் மாமனும், சோதிரூபன், செல்வராணி (கனடா), சோதிநாதன் (கனடா), சோதீஸ்வரன் (கனடா) ஆகியோரின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (22.10.2011) சனிக்கிழமை மு.ப 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வேரோண்டை இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

நெட்டிலித்தெரு,
கோவிற்கடவை, துன்னாலை மத்தி, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் அந்தியேட்டி அழைப்பும்



தோற்றம் 25.12.1925 மறைவு 23.09.2011

அமரர்

**கிருஸ்ணபிள்ளை நடராசா**

(பிரபல கட்டட ஒப்பந்தகாரர்)

அன்பிலே தெய்வமாய் அறிவிலே ஆசானாய்
பண்புடன் எமை வளர்த்து பார் புகழ வாழ வைத்து
இன்புடன் நாம் வாழ எல்லாம் எமக்களித்து
இறைவனடி சென்றனையோ என்றும் மறவோம்

*எமது குடும்பத்தலைவரின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து உதவி ஒத்தாசைகள் புரிந்து ஆறுதல் அஞ்சலிகள் தெரிவித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிய றிதலைத் தெரிவித்துக்கொள்வதோடு இன்று [23.10.2011] ஞாயிற் றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்திய ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன உபசாரத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.*

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!*

சந்தை வீதி,
ஆவரங்கால் புத்தூர். குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### செல்வி யோகராணி குக்



மானிப்பாயைப் பிறப்பிடமாகவும், விதானையார் வீதி, சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி.பிரின்சஸ் எலிசபெத் யோகராணி குக் நேற்று (22.10.2011) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தங்கராஜாகுக் - றோஸ்குக் தம்பதியரின் அன்பு மகளும், தங்கராணி E.D.T.குக் (U.K), காலஞ்சென்ற A.R.Y குக் மற்றும் V.S குக், காலஞ்சென்ற T.S.K. குக் ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற வின்சன்ற் பெர்னாண்டோ மற்றும் எத்னா (U.K), அம்பி, றோஸ்மேரி, மதனிகா ஆகியோரின் அன்பு மைத்துனியும், துஷாந்தி, தர்சினி, காலஞ்சென்ற டயனா மற்றும் சாருகேசி ஷேர்லி, ஷெரின் ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை பி.ப.3.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று புரி.யோவான் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*37, விதானையார் லேன்,*
*சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.*
தகவல்:
செல்வராஜா குக் (சகோதரன்)

### சண்முகம் காங்கேசன்

(மெக்கானிக்கல் எஞ்சினியர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், வட்டுக்கோட்டையை வசிப்பிடமாகவும் தற்போது லண்டனை வசிப்பிடமாக கொண்ட சண்முகம் காங்கேசன் கடந்த 21.10.2011 வெள்ளிக்கிழமை லண்டனில் அகால மரணம் அடைந்தார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை வட்டுக்கோட்டையிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நண்பகல் 12 மணிக்கு வழுக்கையாறு இந்துமயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வட்டுத் தெற்கு,
வட்டுக்கோட்டை.
தகவல்:
திருமதி

### தம்பிஜயா கமலேஸ்வரன்



இணுவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிஜயா கமலேஸ்வரன் நேற்று (22.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பிஜயா-செல்லையா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற செல்லப்பா மற்றும் பூமணி தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெயராணி அவர்களின் பாசமிகு கணவரும், பாணுரேகா, மோகனகாந்த், கமலகாந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசீலன், கோகிலா ஆகியோரின் அன்பு மாமனும், அகஸ்சரா அவர்களின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (24.10.2011) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக தாவடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

'ஈஸ்வரி இல்லம்',
அளவோடை வீதி, பரராசசேகரப் பிள்ளையார் கோயிலடி,
இணுவில் மேற்கு, இணுவில்.
தகவல்:
குடும்பத்தினர்.

### இராமலிங்கம் கிருஸ்ணசாமி



விபுலானந்தர் வீதி, மாதகல் என்னும் முகவரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட இராமலிங்கம் கிருஸ்ணசாமி நேற்று (22.10.2011) சனிக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மாதகல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விபுலானந்தர் வீதி,
மாதகல், யாழ்ப்பாணம்.
தகவல்:
குடும்பத்தினர்.

## ஜே.வி.பியினர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

கட்சியின் பெரும்பாலான பிரிவுகள் ஜே.வி.பிக்குள் முரண்டுபிடிக்கும் அணியின் கட்டுப்பாட்டுக்குள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகிய நிலையில் இந்த அறிவிப்பு வந்துள்ளது. (உ-10)

## வலி.வடக்கு..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காணிகளும் கூட சீனா போன்ற வெளிநாடுகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன.

கடந்த 1983 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் வலிகாமம், பலாலி என்பன அதி உயர் பாதுகாப்பு வலயங்களாகப் பிரகடனப்படுத்தப்பட்ட போது அவை உரியவர்களிடம் மீளக் கையளிக்கப்படும் என உறுதி அளிக்கப்பட்டிருந்தது. எனினும் யுத்தம் நிறைவுக்குக் கொண்டுவந்து இரண்டரை வருடங்களாகியும் அந்த உறுதிமொழி நிறைவேற்றப்படாதது ஏன்?

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடனான அரசின் பேச்சு மீண்டும் ஆரம்பித்திருக்கிறது. இந்த நிலையில் வடக்கு, கிழக்கில் மேற்கொள்ளப்பட்டு வரும் காணிப் பதிவு நடவடிக்கைகளில் தமிழ் எம்.பிக்களின் ஒத்துழைப்பையும் அரசு பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ஒ-சி)

## பூநகரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தினம் தனது வயல் காணியை காலபோக செய்கைக்காகப் பண்படுத்திய போது இந்த மனித எச்சங்களைக் கண்டுள்ளார். இராணுவத் தலைக்கவசம் ஒன்றும் எலும்பு எச்சங்களும் தென்பட்டதை அடுத்து பூநகரி பொலிஸார் இராணுவத்தினர் மற்றும் கிராம அலுவர்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

நேற்று காலை சம்பந்தப்பட்ட இடத்துக்கு வந்த கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிவான் பெ.சிவகுமார் விசாரணைகளை மேற்கொண்டார்.

சட்டவைத்திய அதிகாரி எலும்பு எச்சங்களை சோதனையிட்டார். விசாரணையின் போது பொலிஸ் பொறுப்பதிகாரி மற்றும் இராணுவத்தினரும் அங்கிருந்தனர்.

1992 ஆம் ஆண்டுக் காலப்பகுதியில் இப்பகுதியைச் சேர்ந்த மக்கள் போரால் இடம்பெயர்ந்தனர். அதன் பின்னர் தற்போது தான் மீள்குடியமர்ந்துள்ளனர். இந்த ஆண்டு கால போக செய்கையினை மேற்கொள்ளும் வகையில் இந்தப் பகுதியைத் துப்புரவு செய்த வேளையிலேயே, மனித எச்சங்கள் வெளிவந்துள்ளன.

1993 ஆம் ஆண்டு பூநகரி இராணுவ முகாம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட இராணுவச் சிப்பாயின் சடலமாக இது இருக்கலாமா என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணைகளை நடத்துகின்றனர். (உ-6)


### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை-மருதங்கேணி பிரதான வீதி 10 ஆவது கி.மீ குடத்தனையில் 100 பரப்புக் காணியும், பருத்தித்துறை-கொடிகாமம் வீதியில் புலோலி மெதடிஸ்த மிஷன் தமிழ்க்கலவன் பாடசாலைக்கு அருகில் 8 பரப்புக் காணி கிணற்றுடன் விற்பனைக்குண்டு.

K.சிவா
தொடர்பு:- 0771298201

### மலிவு விற்பனை

(தீபாவளியை முன்னிட்டு)

ரவுசர், சேட், லேடிஸ் ரீசேட், பஞ்சாபி, சோட்ஸ், சாறி வகைகள் இன்றே முந்துங்கள்

**கணேசன் சென்ரர்,**
கே.கே.எஸ். வீதி, இணுவில்.

### விற்பனைக்கு

கோப்பாய் தெற்கு இராச வீதியில், 5 பரப்பிலமைந்த வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0773101371.

### வேலையாள் தேவை

தென்மராட்சியில் இயங்கும் மதுபான விற்பனை நிலையத்துக்கு கணக்காளர் (Accountant), (Accounting Clerk) கணக்கு லிகிதர் தேவை. ஓய்வு பெற்றவரும் விண்ணப்பிக்கலாம். பகுதி நேர வேலையாகவும் செய்யலாம் விரும்பியவர் விண்ணப்பிக்கவும். விளம்பர இல 4190, மே/பா. உதயன், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


## இந்தியாவிலுள்ள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வெளியிடப்பட்டது. அதன் பிரகாரம் தமது சொந்த இடங்களுக்கு மீண்டும் திரும்ப முடியாமல் வெளி மாவட்டங்களில் தங்கியிருப்பவர்களும் வெளி நாடுகளில் தங்கி இருப்பவர்களும் தமது சொந்த மாவட்டங்களில் தம்மை வாக்காளராகப் பதிவு செய்துகொள்ள முடியும்.

வெளிநாடுகளில் வாழ்பவர்கள் தமது கடவுச்சீட்டு இலக்கத்தை வழங்கி வாக்காளராகப் பதிவு செய்ய முடியும் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டுள்ளது. எனினும் இந்தியாவில் உள்ள அகதிகள் ஒரு லட்சம் பேருக்கும் அதிகமான அகதிகளின் வாக்குரிமை பறிபோகும் நிலை இருக்கிறது என்று சுட்டிக்காட்டப்பட்டது.

இதனைத் தொடர்ந்து " இந்தியாவில் அகதிகளாக இருப்பதை உறுதிப்படுத்தக் கூடிய ஏதாவது ஒரு ஆவணத்தை இங்குள்ள தமது உறவினர்கள் மூலம் சமர்ப்பித்து தம்மை வாக்காளர்களாக பதிவு செய்யமுடியும். இந்த வாக்காளர் பதிவு எதிர்வரும் நவம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இடம் பெறவுள்ளது " என்று குகநாதன் தெரிவித்தார். (உ-15)


### Banking (CBF/DBF) பயிலும், பயில விரும்பும் மாணவர்களுக்கான இலவச வழிகாட்டல் கருத்தரங்கு

**இடம்:-** Spectra Skills Hall, No 19, Stanley Road, (People's Bank 2nd floor) Jaffna. 0212221422/1423

**காலம்:-** 30.10.2011 (ஞாயிறு) காலை 9 மணி முதல் 12 மணிவரை.

பல வருடங்கள் அனுபவம் வாய்ந்த விரிவுரையாளர்களால் நடத்தப்படுகின்றது.

29.10.2011 சனிக்கிழமை மாலை 5 மணிக்கு முன்னர் உங்கள் வரவை பதிவு செய்து உறுதி செய்து கொள்ளவும். A/Lபரீட்சை எழுதிய மாணவர்கள் பரீட்சை எழுத உள்ள மாணவர்களும் கலந்துகொண்டு பயனடையலாம்.


## OBITUARY NOTICE

### Miss YOGARANI COOKE



PRINCES ELIZABETH YOGARANI COOKE Passed away on Saturday (22.10.2011) She is the daughter of late Mr & Mrs P.T.COOKE, Sister of Thangarani Fernando, E.D.T. COOKE (UK), Late A.R.Y COOKE, VS COOKE & late T.S.K. COOKE Sister in law of late Vincent Fernando, Ethna(U.K), Ambi, Rosemary & Mathanika, Aunt of Dushanthini, Tharshni late Diana, Sarukesi, Shirley & Sherin.

The Funeral Service will be held on Sunday, 23rd of October 2011 at 3.30 pm at Her Residence and Burial at St. John's Cemetry, Jaffna.

*37, Vidhans Lane,*
*Chunduckuli, Jaffna.* Informant- Selvarajah Cooke (Brother).

## கண்ணீர் அஞ்சலி



**கதிரவேலு ஆறுமுகம்**

அவர்களின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கின்றோம்.

வெளிநோயாளர் பிரிவு (OPD)
யாழ்.போதனா வைத்தியசாலை.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 14 . 11 . 1939

இறப்பு: 21 . 19 . 2011

**அமரர் இளையதம்பி வீரவாகு**

கடந்த 21.09.2011 அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவரின் அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நண்பகல் 12 மணிக்கு இடம்பெறும், ஆத்ம சாந்தி பிரார்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

விளையாட்டரங்கு வீதி,
கல்வியங்காடு யாழ்ப்பாணம்.
குடும்பத்தினர்.

**கார் விற்பனைக்கு**

301 - XXXX எனும் தொடர் இலக்கம் உடைய NISSAN SUNNY FB 14 வெள்ளைநிற SUPER SALOON (FULL OPTION) கார் உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0776701233

**ரூபா 50,000/- க்கு**
மேல் மாத வருமானம் பெற
இன்றே முதலீடு செய்யுங்கள்

**ஐஸ் கிறீம் இயந்திரம்**




கூல்பார், ஸ்நெக் பார், ஹோட்டல், பாடசாலை, கெண்டின், பேக்கரி, பார்மசி, சுப்பர் மார்க்கட், குரோசரி போன்ற விற்பனை நிலையங்களுக்கு உகந்தது.

- ஒரே இயந்திரத்தில் மூன்று வெவ்வேறு வகையான ஐஸ்கிறீம் வகைகளை விற்பனை செய்யலாம். சோயா / வெனிலா / சொக்கலேட்
- சுயமாகவே தயாரிக்கும் திறன்.
- இலவச பயிற்சி
- உத்தரவாதத்துடன் / விற்பனையின் பின் சேவை

Price Rs.99,000/- upwards

WINRICH INTERNATIONAL (PVT) LTD.
(MEMBER OF PLUSS INT.)
No.18, Ground Floor, Lucky Plaza, St. Anthony's Mawatha, Kollupitiya, Colombo 03.
தமிழில் தொடர்புகொள்ள (யோகேஸ்)
Hotlines: 077 391 8870, 077 1066902

## தேசிய வாசிப்பு மாத புத்தகக் கண்காட்சி

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபையின் ஆனைக் கோட்டை பொது நூலகத்தில் கடந்த 20 ஆம் திகதி ஆரம் பித்து வைக்கப்பட்ட புத்தகக் கண்காட்சி இன்றுவரை காலநீடிப்பு செய்யப்பட்டுள் ளது. பிரதேச சபைத் தலைவர் அ.ஜெப நேசன் இந்தக் கண் காட்சியை ஆரம் பித்துவைத்தமை குறிப் பிடத்தக்கது. (ம)

**கார் விற்பனைக்கு**

64 - XXXX
NISSAN
sunny - B 13
டீசல் கார்
விற்பனைக்கு
T.P:
0774154282

**வரணி மிஷன்பாம்**

இறைச்சிக்கோழி (Broiler)
முட்டை (Egg)
மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 0773435719
விற்பனை நிலையம்
வரணி மிஷன் பாம், வரணி

**விற்பனை**

மன்னாரிலிருந்து வவுனியா ஊடாக யாழ்ப்பாணம் செல்லும் நிரந்தர பாதை அனுமதி உடைய Asok Layend அரைச் சொகுசு பஸ் ஒன்று விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
0776122344

## மரண அறிவித்தல்

### சுப்பையா கந்தசாமி



வடலியடைப்பு, பண்டத்தரிப்பை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா கந்தசாமி நேற்று (22.10.2011) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பையா - மீனாட்சிப்பிள்ளையின் அருமை மகனும், காலஞ்சென்ற பரமராசா - மனோன்மணி தம்பதியரின் மூத்த மருமகனும், சர்வலோக நாயகியின் அன்புக் கணவரும், அகிலன் (இஞ்சினியர்), தர்சினி (மண் ஆராய்சியாளர்) ஆகியோரின் தந்தையும், கௌசல்யாவின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (23.10.2011) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2 மணிக்கு விளாவெளி மயானத்தில் தகனக்கிரியைகள் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வடலியடைப்பு,
பண்டத்தரிப்பு.

தகவல்:
க.அகிலன் (மகன்).

**After A/L?** விசேட கலந்துரையாடல்
24.10.2011. 9AM-11AM

CIMA-UK
Batch I : Sat 7.30-2PM
Batch II : Sun 2-5 PM
Batch III : Mon - Fri 8.30 AM - 2 PM

Engineering-USA
Software / Network
Government Schol.

BIT University of Colombo
Batch I : Sat & Sun 8 - 12PM
Batch II : Sat & Sun 2 - 6PM
Batch III : Mon- Thu 4.30-5.30 PM

கற்கை நெறி ஒன்றைப் பயிலும் மாணவர்கள் BCS - UK, IELTS, TOEFL, CISCO-CCNA, Oracle Java, ICDL, கற்கைநெறிகளையும் கற்கைநெறிக்கட்டணமின்றி கற்கலாம்.

Qualified Lectures Panel, Passing Guarantee, 12 Years Experience

MCS
Supported By UNDP/JRRP
324, Palaly Road, Parameswara Junction

Free5 Course fee*
Diploma Courses..
*MsOffice, AutoCAD, *Web Designing
*Hardware *Accounting *DTP *English

தொழிற்கல்வி ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெற்ற நிறுவனம். உங்கள் <Name>, <Address>, <Course> 772395895 என்ற இலக்கத்துக்கு SMS அனுப்பி காலதாமதத்தை தவிருங்கள்

**உலக நாடுகளுக்கான ஆகாய, கடல் மார்க்கமான துரித கடிதங்கள் பொதிகள் சேவை**

தீபாவளியை முன்னிட்டு விசேட சலுகைகள்!

மிக விரைவாக உங்கள் உறவுகளின் இடங்களில் ஒப்படைக்கப்படும். (காப்புறுதி உண்டு).
கடல்உணவுகள், மருந்துப்பொருட்கள் என்பன அனுப்பப்படும்.
வெளிநாடுகளில் மேலதிக கட்டணம் அறவிடப்படமாட்டாது.

DHL WORLDWIDE EXPRESS கட்டணம் குறைக்கப்பட்டுள்ளது 650/= ரூபாவிலிருந்து

மிக குறைந்த கட்டணத்தில் உங்கள் உறவுகளுக்கு கடிதங்கள், அன்பளிப்புப் பொருட்கள், புடவைகள்,CD Vedio க்கள் என்பன மிக விரைவாக அனுப்பிட DHL WORLDWIDE EXPRESS



**திருமுருகன் கொம் நெற்**

இல. 259, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
இல. 46, ஆடியபாதம் வீதி, திருநெல்வேலி.
இல. 18, பிரதான வீதி, நெல்லியடி.
இல. 05, பிரதான வீதி, கிளிநொச்சி.

**உங்கள் பொறியியல் கனவை நனவாக்கும்...**

City & Guilds
சர்வதேச அங்கீகாரம் பெற்ற
Engineering Qualifications



Civil Engineering | Quantity Surveying | Electrical & Electronics | Motor Vehicle | Mechanical



**City & Guilds Progression Path**

Postgraduate Diploma Level (IVQ Level 7) 12 months
↑
Professional Engineer (Equivalent to BEng-UK)
↑
Graduate Diploma Level (IVQ Level 6) 12 months → JOB
↑
NCT/NCIT → Advanced Diploma Level (IVQ Level 5) 12 months → JOB
↑
A/L → Diploma Level (IVQ Level 3) 12 months → JOB
↑
O/L → Certificate Level (IVQ Level 2) 5 months

City and Guilds UK
பொறியியல் பாடநெறிகளை
A/L வர்த்தகப் பிரிவு, கலைப் பிரிவு மாணவர்கள்
Certificate மட்டத்திலிருந்தும்,
கணிதப் பிரிவு,
விஞ்ஞானப் பிரிவு மாணவர்கள்
Diploma மட்டத்திலிருந்தும் தொடரலாம்

ec Chartered Engineer ஆகவும், Engineering Council - UK உறுப்பினராகவும் குறுகிய வழி.

அனுபவம், தகைமை வாய்ந்த விரிவுரையாளர்கள் குழாம்.

இலகு தவணைக் கட்டண முறை.

City & Guilds மூலம் பரிந்துரைக்கப்பட்ட பாட விதிகளுக்கு உட்பட்டு பிரயோக முறையில் (Practicals) கற்பிக்கும் ஒரே கல்வி நிறுவனம்.

மேலதிக விபரங்களைப் பெற உங்கள் [Name] [Address] [Course] போன்ற விபரங்களை 0777 762 283 க்கு SMS செய்யுங்கள் அல்லது

அனுமதிகள் ஆரம்பம்!

✆ 0214 66 66 99 / 0771 067 394

SIPL JOB NETWORK | LEARNING PLUS | WORK PLACE LEARNING

SCOT
SKILLS COLLEGE OF TECHNOLOGY
SKILLS INTERNATIONAL (PVT) LTD.
Jaffna Branch
இல. 207, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
Email : jaffna@skillsinternational.lk
Website : www.skillsinternational.lk

Colombo | Kandy | Jaffna தொழில்நுட்பக் கல்வியின் முன்னோடி

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 23.10.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.